40 பக்கங்கள்

விலை ரூ 25.00

# மாற்றுக் கருத்து

ஜீலை - ஆகஸ்ட் | இருமாத இதழ் | மதுரை | கருவூலம் 6 கருத்து 4

## தண்டனைக்குத் தப்பிய குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்ட நிரபராதிகளும்




**- 108 ஆம்புலன்ஸ் சேவையைப் பாதுகாக்கப் போராடும் ஓர் தொழிற்சங்கத்தின் தீரமிக்க வரலாறு**

# ஒற்றைக் கட்டுரை ஒட்டு மொத்தக் கட்டுரையாக கொண்டு வரப்பட்டுள்ளது காரணமும் பின்னணியும்

இந்த இதழில் தொழிலாளர் பழிவாங்கல் நடவடிக்கை குறித்த ஒரேயொரு கட்டுரை மட்டுமே இடம் பெற்றுள்ளது. அவ்வாறு ஒரே ஒரு பிரச்சனையை மையமாக வைத்து ஒரு இதழை பிரசுரித்து இருப்பதன் நோக்கம் தற்போதைய அரசும் அதன் ஆதரவிலும் அரவணைப்பிலும் இருக்கக்கூடிய தனியார் நிறுவனங்களும் தொழிலாளர் பிரச்சனைகளைக் கையாளும் விதத்தை வாசகர்கள் மத்தியில் கொண்டு வந்து அம்பலப்படுத்த வேண்டும் என்பதேஆகும். தனியார் நிறுவனங்கள் நினைத்தால் அரசின் துணையோடு எந்தவகையான சட்ட நியமங்களையும் கடைப்பிடிக்காமல் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டு அதிகபட்ச தொழிலாளரை அதன் உறுப்பினராகக் கொண்டு சட்டபூர்வ வழிமுறைகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய தொழிற்சங்கத்தின் தலையாய பொறுப்பாளர்களைக் கூட வேலைநீக்கம் செய்து முறையான தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்க முடிகிறது என்பதைத் தமிழக மக்கள் மத்தியில் பொதுவாகவும் உழைக்கும் மக்கள் மத்தியில் குறிப்பாகவும் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இந்த முயற்சி முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை அம்பலத்திற்கு கொண்டு வரும் தங்களது பொறுப்புகளைத் தட்டிக்கழித்து அது செய்யும் அனைத்து முறைகேடான மக்கள்விரோத வேலைகளுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் விதத்தில் செய்திகளை திரித்தும் திசைதிருப்பியும் வெளியிட்டு ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஊடக தர்மத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் சீரழிந்து போயுள்ள ஊடகங்களை தனது கைகளுக்குள் போட்டுக் கொண்டு அரசு தனக்குச் சாதகமான செய்திகள் மட்டும் மக்கள் மத்தியில் வலம்வருவதை சாத்தியமாக்கியுள்ளது. அத்தகையவைகளாக தமிழகத்தின் பிரதான ஊடகங்கள் அனைத்தும் ஆக்கப்பட்டு விட்டன. அதுதவிர பொதுவாக மக்களின் பிரச்சனைகளை மையமாக வைத்து அடையாளபூர்வ அல்லது பாவனைத் தன்மை வாய்ந்த விதங்களில் தங்களது நடவடிக்கைகளை செய்து வந்த இடதுசாரி கட்சிகள் என்று அழைக்கப்படக் கூடிய கட்சிகளும் தமிழகத்தில் தற்போது ஆளும் கட்சியாக உள்ள கட்சியின் பொருளாதார ரீதியான அரவணைப்பிற்குள் தஞ்சம் புகுந்து கொண்டு முடங்கிக் கிடக்கும் சூழ்நிலை நிலவிக் கொண்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் நடைபெற்றுவந்த அரசு சார்ந்த தொழில்களில் வேலை செய்து வந்த தொழிலாளர் அனைவரும் நிரந்தரப்படுத்தப்படுவர் என்ற தேர்தல் வாக்குறுதியை முன்வைத்து கடந்த சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரும் வெற்றியை பெற்று ஆட்சியதிகாரத்தில் அமர்ந்த தமிழகத்தை தற்போது ஆட்சி செய்து கொண்டிருக்கும் கட்சியினர் நடைமுறையில் ஏற்கனவே ஓரளவிற்கு நிரந்தரத்தன்மை வாய்ந்தவையாக இருந்த பலபணிகளைக் கூட ஒப்பந்ததன்மை வாய்ந்த பணிகளாக ஆக்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளதை நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். பலகாலங்கள் உழைப்பாளி வர்க்கம் நடத்திய தீரமிக்க போராட்டங்களின் விளைவாகக் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் அனைத்தும் 4 சட்ட தொகுதிகளாக மாற்றப்பட்டு தொழிலாளரின் பணி நிரந்தரம், வேலை சூழ்நிலைகள் ஆகியவை இந்தியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முன்னெப்போதும் இருந்திராத அளவிற்கு மத்திய அரசு கொண்டு வந்துள்ள தொழிலாளர் சட்டத் திருத்தங்கள் மூலம் பறிபோயுள்ளன.

அத்தகைய சட்ட தொகுதிகள் அவற்றுக்கான விதிகள் மாநில அரசுகளால் இயக்கப்பட்டால் மட்டுமே அமல்படுத்த முடியும் என்ற நிலை நிலவிய சூழ்நிலையில் இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகள் என்று அழைக்கப்படும் கட்சியினரின் ஆதரவோடு ஆட்சியதிகாரத்தில் அமர்ந்த தற்போதுள்ள தமிழக அரசு குறைந்த பட்சம் இந்தச் சட்டத் தொகுதிகளை அமல்படுத்தவல்ல சட்டவிதிகளை இயற்றும் போது மத்திய அரசிடம் சில கேள்விகளையாவது சட்டதொகுதிகள் குறித்து எழுப்பும் என்ற எதிர்பார்ப்பு உணர்வு பெற்ற உழைக்கும் மக்கள் மத்தியில் இருந்தது. தமிழக பிராந்திய முதலாளிகளின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக அவதாரம் எடுத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தை தற்போது ஆட்சி செய்து கொண்டிருக்கும் கட்சி மத்தியில் ஆட்சியதிகாரத்தில் உள்ள கட்சி எவ்வாறு அனைத்திந்திய முதலாளிகளின் ஒட்டுமொத்த நலன்களை பேணிப் பாதுகாக்கும் விதத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதோ அதையொத்த விதத்தில் தமிழக பிராந்திய முதலாளிகளின் நலனை கண்ணின் கருமணி போல் கருதி காக்கும் வேலையைத் தமிழகத்தில் செய்து கொண்டு இருப்பதாலேயே இத்தகைய போக்குகள் நிலவிக் கொண்டு உள்ளன. அகில இந்திய அளவிலும் சரி தமிழகத்தை பொறுத்தவரையிலும் சரி உழைக்கும் மக்களின் நலன்களுக்கு ஊறுவிளைவிக்காமல் முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்க முடியாது என்பதே உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையாகும்.

அந்த பின்னணியில் தமிழக முற்போக்கு இடதுசாரி சக்திகள் தமிழக அரசின் மீது கொண்டிருந்த எதிர்பார்ப்புகளை முற்றிலுமாக சீர்குலைக்கும் விதத்தில் இந்தியாவில் உள்ள பல மாநில அரசுகளுக்கு முன்னோடி என்று கூறும் விதத்தில் தமிழக அரசு அந்தத் தொழிலாளர் விரோத சட்ட தொகுதிகள் விரைவில் அமலுக்கு வருவதற்கு உதவக்கூடிய விதத்தில் சட்ட விதிகளை அவசர கோலத்தில் முறையான வழிமுறைகளைப் பின்பற்றி பாதிக்கப்பட்ட தொழிலாளரின் கவனத்திற்கு இயற்றவிருக்கும் சட்ட விதிகள் குறித்த விபரங்களைக் கொண்டு வராமல் இயற்றி முடித்துள்ளது. அதன்மூலம் தொழிலாளர் விரோத சட்ட தொகுதிகள் தங்கு தடையின்றி அமலாவதற்கு ஏற்ற சூழ்நிலையை தமிழகத்தில் உருவாக்கியுள்ளது.

தமிழகத்தில் இடதுசாரித் தொழிற்சங்கங்கள் என்ற பெயரில் மிகப்பெரிய தொழிற்சங்க அமைப்புகள் என்று தங்களைப் பற்றி தம்பட்டம் அடித்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய தொழிற்சங்கங்கள் எவையும் இந்த நாசகரமான வளர்ச்சிப் போக்கை கண்டுகொள்ளாத வருந்தத்தக்க நிலையே

..... தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# மாற்றுக் கருத்து

மாற்றுக் கருத்து
01 ஜீலை - 31 ஆகஸ்ட் 2022
கருவூலம் 6 கருத்து 4

**இருமாத இதழ் விலை: ரூ 25**
**பக்கங்கள்: 40**

**தொடர்புக்கு:**

**சென்னை, திருவள்ளூர்**
தோழர் வேதராஜ், 9894872108

**வேலூர்**
தோழர் தியாகராஜன், 9159014401

**திருப்பத்தூர்**
தோழர் பர்வீன், 8489712338

**கள்ளக்குறிச்சி, விழுப்புரம்**
தோழர் மகாதேவன், 8220900652
தோழர் பூபாலன், 7639721968

**கடலூர்**
தோழர் வெங்கடேஷ், 9786625655

**அரியலூர், பெரம்பலூர்**
தோழர் சரவணன், 9626675108
தோழர் ஆனந்தராஜ், 9865641202

**திருச்சி**
தோழர் வேணுகோபால், 9787882728

**கரூர்**
தோழர் சாமிவேல், 9360601940

**சேலம், தருமபுரி, ஈரோடு**
தோழர் குமரேசன், 9865212298
தோழர் ரமேஷ்பாபு, 9843649067
தோழர் சிவக்குமார், 9629798455

**கிருஷ்ணகிரி**
தோழர் சாந்தகுமார், 9566995839

**திருப்பூர்**
தோழர் பாலமுருகன், 9943936422

**கோவை**
தோழர் சரவணக்குமார், 9688313601
தோழர் தங்கப்பாண்டியன், 9688896457

**நாமக்கல்**
தோழர் சந்திரன், 9965624256

**நீலகிரி**
தோழர் ஞானப்பிரகாஷ், 9442374726

**தஞ்சாவூர், திருவாரூர்**
**நாகப்பட்டிணம், மயிலாடுதுறை**
தோழர் ஆசைத்தம்பி, 9585651874
தோழர் அருண், 9790852087

## ஒற்றைக் கட்டுரை பின்னணி ..... 2 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

நிலவுகிறது. அதற்கான காரணம் இந்த அமைப்புகளின் அரவணைப்பிற்குள் இருக்கக்கூடிய தொழிற்சங்கங்கள் அனைத்தும் மிகப்பெரும்பாலும் அரசுத்துறைகள் மற்றும் அரசாங்கத்தின் அரவணைப்பிலுள்ள பொதுத்துறைகள்ஆகியவற்றை மையம் கொண்டுள்ளவையாக இருப்பதேயாகும். தற்போது ஏற்பட்டுள்ள இந்த நாசகர தன்மை வாய்ந்த தொழிலாளர் சட்டத் தொகுதிகள் அந்த அமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளரை உடனடியாகப் பாதிக்காது என்ற எண்ணத்தில் அவை ஆளும் கட்சியின் உழைக்கும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்குத் தாளம் போடக் கூடியவைகளாக கூச்சநாச்சம் இல்லாமல் இருந்து கொண்டு இருக்கின்றன.

இந்தப்பின்னணியில் தமிழக தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தி தமிழக உழைக்கும் வர்க்கத்திற்கு அது தற்போது இருந்து கொண்டிருக்கும் அவல சூழ்நிலையை உணர வைப்பதும் புரிய வைப்பதும் மிகவும் அவசியமானதாகும். அந்த நோக்கத்தை மனதில் கொண்டு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் தமிழகத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையில் நடைபெறும் முறைகேடான தொழிலாளர் நடவடிக்கைகளையும் சட்டமீறல்களையும் அவற்றைத் தட்டிக் கேட்கும் இடத்தில் இருக்கக்கூடிய அரசு அமைப்புகளின் வேலியே பயிரை மேயும் தன்மை வாய்ந்த போக்குகளையும் முன்னிலைப்படுத்தி இந்த ஒற்றைக் கட்டுரையை இந்த இதழின் ஒட்டுமொத்தக் கட்டுரையாக மாற்றுக்கருத்து கொண்டு வந்துள்ளது. அவ்வாறு கொண்டு வந்ததன் மூலம் பல தமிழகம் குறித்த இந்தியா பற்றிய மற்றும் உலகம் சார்ந்த பிரச்சனைகள் இந்த இதழில் இடம் பெறாமல் போனது நமது வாசகர்கள் மத்தியில் ஒரு ஏமாற்றத்தை நிச்சயம் உருவாக்கவே செய்யும். இருந்தாலும் தருணத்தின் தேவையைக் கருதி இந்த இதழ் இந்த வகையில் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை நமது இதழின் தரமான வாசகர்கள் புரிந்து கொண்டு அவர்கள் நமக்கு வழங்கிக் கொண்டுள்ள நல்லாதரவினை தொடர்ந்து வழங்குவர் என்ற நம்பிக்கையோடு இந்த இதழை தற்போது கொண்டு வந்துள்ள வழக்கத்திற்கு மாறான விதத்தில் கொண்டு வருகிறோம். நிச்சயமாக கடந்த காலங்களில் நமது இதழ் மக்கள் பிரச்சனைகளை முன்னிலைப் படுத்தி அவர்களுக்குத் தேவையான அரசியல் சமூகப் பொருளாதார உளவியல் ரீதியான கருத்துக்களைக் கொண்டு வந்து அதன் கடமையை ஆற்றியதைபோல் இந்த இதழும் நிச்சயமாக தமிழக உழைக்கும் வர்க்கத்திற்கு அது ஆற்றுவதற்கு கடமைப்பட்டுள்ள அதன் தலையாய கடமையினை ஆற்றும் என்று நம்புகிறோம்.

**ஆசிரியர் குழு**
**மாற்றுக்கருத்து**

### பதிப்பாசிரியர் குறிப்பு

மாற்றுக்கருத்து இதழில் வெளிவரும் கட்டுரைகளில் அக்கட்டுரைகளை எழுதியவர் பெயர் குறிப்பிடாமல் வெளிவரும் கட்டுரைகள் அனைத்தும் ஆசிரியர் குழுவின் கூட்டு விவாதத்தின் அடிப்படையில் வெளியிடப்படும் கட்டுரைகள் ஆகும்.

**புதுக்கோட்டை, இராமநாதபுரம்**
தோழர் பாஸ்கரன், 9047524272
தோழர் சிந்தன், 9790265241

**திருநெல்வேலி, தென்காசி,**
**தூத்துக்குடி, விருதுநகர்**
தோழர் சுகதேவ், 9087442558
தோழர் வரதராஜ், 9080495656

**தேனி, திண்டுக்கல்**
தோழர் காளிதாஸ், 9626702108
தோழர் அழகர்சாமி, 9843598719

**மதுரை, சிவகங்கை**
தோழர் பிரேம்குமார் 9442508754
தோழர் நிம்ரோத், 9442486786

**கன்னியாகுமரி**
தோழர் மகிழ்ச்சி, 9443347801

**தொடர்பு முகவரி:** அபிநவ் பிஸியோதெரபி கிளினிக் அருகில்,
அமீர் மஹால் ஹோட்டல் எதிரில், மீனாட்சி நகர் பஸ் ஸ்டாப்,
தபால் தந்தி நகர் மெயின்ரோடு, மதுரை - 625017.

## 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் சேவையைப் பாதுகாக்க மேற்கொண்ட போராட்டங்களின் புகைப்படத் தொகுப்பு



# தண்டனைக்குத் தப்பிய குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்ட நிரபராதிகளும்

## 108 ஆம்புலன்ஸ் சேவைக்குத் தூணாக நின்ற தொழிலாளர்களாகிய நாங்கள் உங்களின் ஆதரவு கரம் வேண்டி துணை தேடி வலம் வருகிறோம் சேவையைப் பாதுகாக்க சிரம் இணைப்போம்! கரம் கோர்ப்போம்!

பொது சுகாதாரத்திற்கு மிகக் குறைவாக செலவு செய்யும் நாடுகளில் முக்கியமான நாடாக இந்தியா விளங்குகிறது என்பது அனைவரும் அறிந்ததே. நமது உற்பத்தி குறியீட்டு எண்ணில் வெறும் ஒரு சதவீதம் மட்டுமே என்னும் அளவிற்கு பொது சுகாதாரத்திற்கு செலவிடப்படுகிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இந்த சூழ்நிலையில் பொது சுகாதார சேவையில் ஒரு மைல்கல் போல் தோன்றியதொரு சேவை 108 ஆம்புலன்ஸ் சேவையாகும். உலகின் பல வளர்ச்சியடைந்த நாடுகளின் பெருமக்கள் பின்தங்கிய நாடுகள் மற்றும் வளரும் நாடுகளில் வாழக்கூடிய மக்கள் முறையான சுகாதார சேவை கிட்டாமல் சிரமத்தில் உள்ளனர் என்பதை புரிந்து கொண்டு அவர்களது நாடுகளின் அரசுகளிடமும் மக்களிடமும் இந்த குறைபாட்டை போக்குவதற்கு முன்வருமாறு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அவர்கள் வழங்கும் நன்கொடைகள் போன்றவற்றைக் கொண்டு உலக சுகாதார நிறுவனம் அதன் முன்முயற்சியில் இந்தியாவில் அறிமுகம் செய்த திட்டமே 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டமாகும்.

இவ்வாறு உலக பொது சுகாதார நிறுவனத்தின் ஆலோசனை மற்றும் நிதியுதவி கொண்டு தேசிய சுகாதார மிஷன் என்ற பெயரில் ஒரு அரசுத் துறையை ஏற்பாடு செய்து அதன்மூலம் இந்த 108 ஆம்புலன்ஸ் சேவைக்கான செலவினங்கள் எதிர் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு உருவான இந்த சேவை அறிமுகமான வேளையில் ஏதோ சுகாதாரத் துறையில் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்தி விட்டதைப் போல் இந்தியாவின் பல மாநில அரசாங்கங்கள் இந்த சேவையை கொண்டு வந்தது தாங்களே என்று மார்தட்டிக் கொண்டன. அதுமட்டுமின்றி அந்த சமயத்தில் மத்திய சுகாதார அமைச்சராக இருந்ததமிழகத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரான அன்புமணி ராமதாசும் தானே இந்த சேவையை கொண்டு வந்ததாக பெருமை அடித்துக் கொண்டார். இந்த சேவை தாங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது தான் கொண்டுவரப்பட்டது என்று அதன் பங்கிற்கு தற்போது தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகமும் தற்பெருமை பாராட்டிக் கொண்டது.

### கையகப்படுத்தும் போக்கு

ஆனால் நடந்தது என்னவென்றால் இந்த சேவைக்கு சுகாதாரத்திற்கான தேசிய கமிஷன் ஒதுக்கிய தொகைகளில் குறிப்பிடத்தக்க அளவிற்கான பணத்தை மாநில அரசுகளை சேர்ந்தவர்கள் பல்வேறு வகைகளில் கையகப்படுத்திக் கொண்டனர். உண்மையில் இந்த சேவை தமிழகத்தில் தொடங்கப்பட்ட போது இந்த சேவையின் மேன்மைகள் குறித்த விளம்பரங்கள் ஏராளமாக ஆளும் திராவிட முன்னேற்ற கழகத்தின் முதன்மை குடும்பங்களுக்கு சொந்தமான கே டி.வி. போன்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. அந்த வகையில் விளம்பர செலவு என்ற பெயரில் அந்த தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் பணம் கொடுக்கப்பட்டது. அவ்வாறு தங்களுக்கு சாதகமானதொரு சூழ்நிலையை இந்த சேவையை மையமாக வைத்து உருவாக்கிக்கொண்ட மாநில அரசு அந்தசேவையினால் பயன்பெறக்கூடிய மக்களுக்கு எந்த வகையில் சேவை சரியான முறையில் சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையை கணக்கில் கொள்ளாமலும் அந்த சேவையை முன்னின்று நடத்தும். களப் பணியாளர்களின் வேலைச் சூழ்நிலைகள் எந்த வகையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து எந்த வகையான அறிவுறுத்தலும் இல்லாமலும் ஒப்பந்தம் ஒன்றினை ஜி.வி.கே. இ.எம்.ஆர்.ஐ என்ற தனியார் நிறுவனத்தோடு

செய்துகொண்டது.

**அனைத்து செலவுகளும் அரசின் உடையது**

அந்த நிறுவனம் இந்த சேவைக்கான அதன் கையில் இருந்து எந்த தொகையும் போடத் தேவையில்லை; அது செய்ய வேண்டியது எல்லாம் இந்த சேவை குறித்த மென்பொருளை கொண்டு சேவையை நடத்துவதுதான்; இந்த சேவையில் ஈடுபடக்கூடிய வாகனங்கள் வாங்கும் பொறுப்பு; அந்த வாகனங்களில் வைத்திருக்கப்படும் உயிர் காக்கும் மருந்துகள் வாங்கும் பொறுப்பு; நோயாளிகளை ஏற்றி இறக்கி செல்வதற்கும் அவர்களை மருத்துவமனையில் கொண்டு சென்று சேர்க்கும் வரை அவர்களுக்கு வைத்தியம் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் போன்றவையும் வாங்குவதற்கும் பராமரிப்பதற்கான செலவினங்கள்; இந்த சேவையில் ஆம்புலன்ஸ் வாகனங்களை இயக்கும் ஓட்டுநர்களுக்கும் நோயாளிகளுடன் பயணம் செய்து அவர்களுக்கு மருத்துவமனை செல்லும் வரை சரியான வசதிகளை உடனிருந்து பார்த்துக் கொள்ளும் அவசர மருத்துவ தொழில்நுட்பம் பணியாளர்களுக்கும் எந்த இடத்துக்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பது குறித்ததகவலை பல்வேறு மையங்களில் இருக்கக்கூடிய ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கு கைப்பேசி மூலமாக அறிவுறுத்தும் கால்சென்டர் ஊழியர்களுக்கான ஊதியம்; ஆண்டுதோறும் வழங்கப்படும் சம்பள உயர்வு தொகைகள்; பிற பணப்பலன்கள் இவை அனைத்தும் அரசிடம் இருந்தே பெறப்படும். இவையே தமிழக அரசு ஜி வி கே எம் ஆர் ஐ நிறுவனத்துடன் இந்தச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டபோது செய்து கொண்ட ஒப்பந்தத்தின் சாராம்சம். அவ்வாறு அரசு இந்த செலவினங்களுக்காக வழங்கும் தொகை தேசிய சுகாதார மிஷன் என்று சொல்லப்படும் நிறுவனத்திடமிருந்து வழங்கப்படுகிறது. ஜி.வி.கே.இ. எம்.ஆர்.ஐ நிறுவனத்தை பொறுத்தவரை அது இந்த சேவையின் கட்டுப்பாட்டிலுள்ள வாகனங்கள் மருத்துவமனைகளுக்கு எத்தனை நோயாளிகளை ஏற்றி செல்கிறதோ அத்தனை நோயாளிகளுக்கும் ஒரு நோயாளிக்கு இவ்வளவு பணம் என்ற வகையில் கணக்கீடு செய்து அந்த பணத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்கிறது. இந்தஅடிப்படையில் தான் 108 ஆம்புலன்ஸ் சேவை இயங்கிக் கொண்டு இருக்கிறது
.

**தனியாரிடம் கொடுத்ததன் நோக்கம்**

இந்தச் சேவையை அரசுகள் இவ்வாறு தனியார் நிறுவனங்களிடம் கொடுத்தது பொது சுகாதார துறைக்கு அரசு செலவிடும் தொகையினை கணிசமாக குறைப்பதற்காகவே ஆகும். மற்றபடி அனைத்து வகைகளிலும் தமிழக பொது சுகாதார சேவையில் ஒரு நிரந்தரமான முக்கியமான அங்கமாக இருப்பதே ஆம்புலன்ஸ் சேவையாகும். இதே சேவைக்கு அரசுத் துறையில் இருந்து வாகன ஓட்டுநர்களும் அவசர தொழில்நுட்பம் கற்றவர்களும் நியமிக்கப்பட்டால் அவர்களுக்கு அரசுத் துறையில் வழங்கப்படும் சம்பளத்தை ஒட்டிய ஊதியம் வழங்கப்பட வேண்டி இருக்கும். அவ்வாறு வழங்கினால் அது தற்போது இந்த சேவையில் இருக்கும் களப் பணியாளர்களுக்கு ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ என்ற தனியார் நிறுவனத்தால் வழங்கப்படுவதை போல் பலமடங்கு இருக்கும். அந்த அடிப்படையில் கணிசமான தொகைகளை மிச்சப் படுத்துவதற்காகவே அரசுகள் இந்த சேவையை தனியாருக்கு தாரை வார்த்து உள்ளன. பொதுவாக இப்படிப்பட்ட சேவைகள் தனியாரிடம் ஒப்படைக்க படும்போது அதனை எடுத்து நடத்துவதற்காக இருக்கக்கூடிய தனியார் நிறுவனங்கள் சேவை மனப்பான்மை அடிப்படையில் செயல்பட கூடியவையாக குறைந்தபட்சம் இருக்க வேண்டும். லாப நோக்கம் இல்லாதது என்று கருதப்படும் செஞ்சிலுவை சங்கம் போன்ற அமைப்புகள் இந்த சேவையை நடத்தினால்தான் இந்த சேவை செவ்வனே இயக்க முடியும். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை பங்குதாரர்களாக கொண்டு நடத்தப்படும் நிறுவனம் என்ற அடிப்படையில் நடைபெறும் இந்த சேவையை இந்தியாவில் பத்துக்கும் மேற்பட்ட மாநிலங்களில் தற்போது ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிறுவனம் நடத்திக் கொண்டு உள்ளது. இது ஒரு அப்பட்டமான கார்ப்பரேட் நிறுவனம் ஆகும். அதாவது எதனைச் செய்தாலும் அதனை அதிகபட்ச லாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்குடன் நிறுவனங்களை நடத்தக்கூடிய ஒரு நிறுவனமாகும். அத்தகைய நிறுவனமாக அது இருப்பதால் இந்த சேவையிலும் அதிகபட்ச லாபம் ஈட்ட வேண்டும் என்ற அடிப்படையிலேயே

செயல்படுவதாகவே அது உள்ளது.

## சட்டவிரோத வேலைப்பளு திணிப்பு

அதனுடைய அந்த நோக்கத்தை நிறைவேற்றும் விதத்தில் இந்த சேவை ஆரம்பித்த காலகட்டத்திலேயே இதில் களப்பணி ஆற்றுபவர்களுக்கு வேலைப்பளுவினை மிகவும் கடுமையானதாக ஆக்கியது. அதாவது சமூகத்தில் நிலவக்கூடிய கடுமையான வேலையின்மை பிரச்சனை வேலை தெரிந்தவர்களை எத்தனை குறைவான சம்பளம் கொடுத்து வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற சூழ்நிலையில் வைத்துள்ளது. இந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தச் சேவையை நடத்தும் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிறுவனம் ஆரம்பத்திலேயே தொழிலாளர் சட்டங்களுக்கு விரோதமாக இந்த சேவையில் பணியாற்றுபவர்களுக்கான வேலை நேரம் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் என்பதாக இருக்கும் என்று அறிவித்தது. எட்டு மணி நேர வேலை நாள் என்பது உலகெங்கிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழிலாளர் சட்டமாக இருக்கக் கூடிய நிலையில் அந்த சட்டத்தை முற்றிலுமாக தூக்கி எறிந்துவிட்டு இப்படிப்பட்ட மிகக் கூடுதலான வேலை நேரத்தை ஒரு நாளைக்கான வேலை நேரம் என்று அந்த நிறுவனம் தீர்மானித்தது. இவ்வாறு வேலை செய்யக்கூடிய களப்பணியாளர்கள் மீது நிர்வாகம் நினைத்தால் எந்த வகையான நடவடிக்கையும் எடுக்க முடியும் என்ற வகையிலான வேலைச் சூழ்நிலையையும் அந்த நிறுவனம் இந்த சேவையில் கொண்டுவந்து அறிமுகம் செய்தது. அந்த சட்டவிரோத செயலை அப்போதிருந்த தமிழக அரசும் அங்கீகரித்தது.

## நிலையாணை விதிகள் இல்லை

அதாவது ஒவ்வொரு நிறுவனத்திலும் வேலை செய்யக் கூடியவர்களின் வேலை சூழ்நிலையை முறைப்படுத்துவதற்கான நிலையாணை விதிகள் என்ற ஒன்று இருப்பது வழக்கம். அத்தகைய நிலை நிலையாணை விதிகளை அந்த நிறுவனத்தில் செயல்படக் கூடிய தொழிலாளர் அமைப்புகளோடு கலந்து பேசி நிர்வாகம் தொழிலாளர் இருவரும் ஏற்றுக்கொண்ட அடிப்படையில் வரைவு செய்வதே சட்டப்படி இருந்து கொண்டிருக்கக்கூடிய வழக்கம் ஆகும். வரைவு செய்யப்பட்ட நிலையாணை விதிகள் தொழிலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தை பெற்ற பின் நிறுவன அலுவலகங்களில் அது அனைவரது பார்வையிலும் படும் விதத்தில் அனைவரும் பார்க்கக்கூடிய இடத்தில் அனைவரின் பார்வைக்கும் வைக்கப்பட வேண்டும். இந்த நிறுவனத்தை பொருத்தவரையில் அப்படிப்பட்ட நிலையாணை விதி என்று எதுவும் கிடையாது. விதிகள் என்று எதுவும் இல்லாதது மட்டுமல்ல. சேவை விதிகள் என்ற அடிப்படையில் யார் யார் மீது எப்போதெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நிர்வாகம் நினைக்கிறதோ அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ற விதத்தில் அதுவரை யாரும் அறிந்திராத புது விதிகளை உருவாக்கி அவற்றின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு தண்டனை வழங்கும் வேலையையும் இந்த நிறுவனம் தொடர்ந்து செய்து வருகிறது

## நிமிர்ந்து எழ விடாமல் செய்வதற்கே

இத்தகைய கடுமையான நடவடிக்கைகளை தொழிலாளர்களுக்கு எதிராக எடுக்கும் தன்மை வாய்ந்ததாக இந்த நிறுவனம் இருப்பதற்கு காரணம் களப் பணியாளர்களை நிமிர்ந்து நிற்க முடியாதவர்களாக வைத்திருக்க வேண்டும் என்ற அதன் எண்ணம்தான். அவ்வாறு அவர்களை வைத்திருந்தால் தான் அவர்கள் அரசிடமிருந்து களப் பணியாளர்களின் ஊதியத்திற்கென பெறக்கூடிய தொகைகளிலும் பிற பணப்பலன்களிலும் வாகன பராமரிப்பிற்கு என அரசிடம் இருந்து பெறக்கூடிய தொகைகளிலும் கணிசமான பங்கினை தாங்கள் கையகப்படுத்துவதை கண்டுகொள்ள மாட்டார்கள் என்பதற்காகத்தான் தொழிலாளரின் வேலை சூழ்நிலையை இந்த அளவிற்கு கடுமையானதாக நிர்வாகம் வைத்திருந்தது. இது போன்ற சட்டவிரோதமான நடைமுறை குறித்தும் இந்த சேவை அறிமுகம் செய்யப்பட்டபோது அதிகாரத்திலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை. இத்தகைய கடும் வேலைச் சூழ்நிலையை எதிர்த்து கேள்வி கேட்கும் நோக்குடன் தொழிற்சங்கம் ஒன்று உருவாக்கப்பட்ட சூழ்நிலையில் அந்த தொழிற்சங்க உறுப்பினர்களில் நூற்றுக்கணக்கானோரை அவர்கள் வேலை செய்யும்

இடங்களில் இருந்து பலநூறு கிலோமீட்டர்களுக்கு அப்பால் உள்ள இடங்களுக்கு இடமாற்றம் செய்யும் சட்டவிரோத செயலையும் இந்த நிறுவனம் செய்தது. இத்தகைய அதீதமான தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை கூட அப்போது அதிகாரத்திலிருந்த தி.மு.க. அரசு கண்டுகொள்ளவில்லை. அதாவது அரசின் தலையீட்டை தவிர்க்கும் நோக்குடன் இந்த சேவை குறித்த விளம்பரங்களை ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு இந்த நிறுவனம் அரசின் வாயை அடைத்து விட்டது.

**அறுவடை செய்தபின் கண்டுகொள்ளாது இருக்கும் போக்கு**

அரசுகளை பொறுத்தவரையில் இந்த சேவையை அறிமுகம் செய்து இது போன்ற மக்களுக்கு நன்மை பயக்கும் நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய அரசுகளே தங்களுடைய அரசுகள் என்ற நல்ல பெயரினை எடுத்து அதன் அடிப்படையில் ஆட்சியில் இருக்கும் கட்சி தங்களுடைய கட்சி என்று காட்டிக்கொள்வதில் அக்கறை காட்டுபவையாகவே இருந்தன. அவ்வாறு எடுத்த நற்பெயரை பயன்படுத்தி ஓட்டுகள் வாங்கி மீண்டும் அதிகாரத்துக்கு வரக்கூடிய வாய்ப்புகளை மேம்படுத்திக் கொள்ளும் வேலைகளை திறம்பட அவை செய்தன. ஆனால் இந்த சேவை அறிமுகம் செய்யப்பட்டதற்கு சில காலங்களுக்கு பின்பு படிப்படியாக இந்த சேவையை கண்காணிக்கும் பொறுப்பு, அதனுடைய விரிவாக்கத்திற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவற்றையும் அரசுகள் செய்யவில்லை. மாறாக படிப்படியாக இந்த சேவை முடங்கிப்போன ஒன்றாக ஆகும் சூழ்நிலையை அரசுகள் ஏற்படுத்தின. ஏனெனில் தற்போது அரசியல் என்பது லாபகரமான தொழில் என்பது போல் ஆகிவிட்ட நிலையில் எந்தெந்த வாய்ப்புகளை யெல்லாம் பயன்படுத்தி நற்பெயரை சம்பாதித்து அதன்மூலம் அதிகாரத்திற்கு வந்து தாங்கள் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சம்பாதித்துவிட்டு அதன் பின்னர் அவ்வாறு சம்பாதிப்பதற்கு வாய்ப்பளிக்க கூடிய வேறு ஏதாவது ஒரு வழிமுறையைப் பார்த்து அதை பயன்படுத்தி அதன் மூலம் சம்பாதிப்பது என்பதே தற்போது ஆட்சி அதிகாரத்திற்கு வரக்கூடியவை என்ற விதத்தில் வலிமையுடன் இருக்கக்கூடிய கட்சிகளின் வழக்கமாக ஆகிவிட்டது. அது தவிர பொதுவாகவே நினைவாற்றல் என்பது குறுகிய காலமே நீடிக்கக் கூடியது அத்துடன் பொதுமக்களின் நினைவாற்றல் என்பது இன்னும் குறுகிய காலமே நீடிக்கக் கூடியது என்ற பழமொழிக்கு இணங்க எவ்வாறு இந்த சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நடத்தப்பட்டதோ அதைப்போல் இப்போதும் நடத்தப்படுகிறதா என்று கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு யார் பார்க்கப் போகிறார்கள் என்ற அடிப்படையிலேயே இதுபோன்ற சேவைகளை நடத்துவதற்கு இருந்த அரசுகளின் முனைப்பு பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக குன்றும் சூழ்நிலை தோன்றிவிட்டது.

**பிற மாநிலங்களில் பெயர் அளவிற்கானதாக ஆகிப்போனது**

இன்று இந்தியாவின் பல மாநிலங்களில் இந்த சேவை மக்களுக்கு அவர்களின் தேவை அடிப்படையில் கிடைத்துக் கொண்டு இருக்கிறதா என்று பார்த்தால் அவ்வாறு கிடைக்கவில்லை என்பதே கண்கூடான காட்சியாக உள்ளது. இதே ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிறுவனம்தான் இந்த சேவையை உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடத்திக் கொண்டுள்ளது. அங்கு கொரோனா பெரு நோய்த்தொற்று தலைவிரித்தாடிய சூழ்நிலையில் இந்த நிறுவனம் அந்த சூழ்நிலைக்கு ஏற்ற விதத்தில் சேவையை நடத்தாமல் கைகளைக் கட்டிக்கொண்டு நின்று விட்டது. இதைப்போல் இந்தியாவின் பல மாநிலங்களிலும் தற்போது இந்த சேவை பெயரளவிற்கான ஒன்றாகவே இருந்து கொண்டு உள்ளது. கடுமையான வேலையின்மை, விலை உயர்வு, அதனால் அனுதினமும் எங்கெல்லாம் இரண்டு வேளை வயிற்றை கழுவுவதற்கு தேவையான பணத்தை பெறுவதற்கான வேலைகள் கிட்டுகின்றனவோ தோன்றியுள்ள வறுமையினை எதிர்கொள்வதற்காக அங்கெல்லாம் ஓடியாக வேண்டிய என்ற நிலையில் தான் இன்று நமது நாட்டின் பொதுமக்கள் உள்ளனர். அவ்வாறு இருக்கக் கூடிய அவர்களுக்கு பசிப்பிணியை காட்டிலும் வேறு எந்தப் பிணியும் பெரிதாக படுவதில்லை. அந்த நிலையில் தங்களுக்கு ஏதாவது ஒரு சூழ்நிலையில் நோய்நொடி என்பது ஏற்பட்டால் என்ன செய்வது என்ற தொலைநோக்குப்

பார்வையுடன் சிந்திக்க முடியாதவர்கள் ஆகவே மிகப் பெரும்பான்மை எண்ணிக்கையிலான பொதுமக்கள்

**பொதுவாகவே நினைவாற்றல் என்பது குறுகிய காலமே நீடிக்கக் கூடியது. அத்துடன் பொதுமக்களின் நினைவாற்றல் என்பது இன்னும் குறுகிய காலமே நீடிக்கக் கூடியது என்ற பழமொழிக்கு இணங்க எவ்வாறு இந்த சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நடத்தப்பட்டதோ அதைப்போல் இப்போதும் நடத்தப்படுகிறதா என்று கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு யார் பார்க்கப் போகிறார்கள் என்ற அடிப்படையிலேயே இதுபோன்ற சேவைகளை நடத்துவதற்கு இருந்த அரசுகளின் முனைப்பு பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக குன்றும் சூழ்நிலை தோன்றிவிட்டது.**

உள்ளனர். இவ்வாறு அடிப்படையான சேவைகள் அரசுகளால் புறக்கணிக்கப்படுவதை மக்களின் கவனத்திற்கு கொண்டுவரக் கூடியவைகளாக பெரிய அரசியல் கட்சிகளும் இல்லை. ஏனெனில் அவர்கள் அதிகாரத்துக்கு வந்தாலும் நிலவக் கூடிய சூழ்நிலை இதுவாகவே இருக்கும் என்பது அவர்களுக்கு தெரியும். அதனால் இன்றைய காலகட்டத்தில் அரசியல் கட்சிகளை பொருத்தவரையில் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை புறக்கணித்து இன, மொழி, பிராந்திய, ஜாதிய வெறி வாதங்களை கிளப்பி அரசியல் நடத்த கூடியவைகளாக உள்ளன. அவை மக்களின் பிரச்சனைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படக் கூடியவைகள் ஆக இல்லை என்பதைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அரசின் சார்பாக இது போன்ற சேவைகளை நடத்தும் நிறுவனங்கள் சட்டவிரோதமான மற்றும் நியாய விரோதமான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு சேவையை முடிந்த அளவிற்கு முடக்கும் வேலையையும் அந்த சேவையின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய தொழிலாளர்களை ஒடுக்கும் வேலையையும் வரைமுறையின்றி செய்கின்றன.

## தமிழகத்தில் நிலவும் மாறுபட்ட போக்கு

இந்தியா முழுவதும் நிலவிய சூழ்நிலை இத்தகையதாக இருக்கக்கூடிய நிலையில் தமிழகத்தை பொறுத்தவரையில் இந்த சேவை நடத்தப்பட்ட விதம் சற்று மாறுபட்டதாக இருந்தது. அதாவது ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிறுவனம் களப்பணியாளர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட இடமாற்றம், வேலைநீக்கம் போன்ற நடவடிக்கைகள் இங்கு பணியாற்றிய களப்பணியாளர்களை ஆழமாக சிந்திக்க வைத்தது. ஏனெனில் இங்கு இந்த சேவையை நடத்திய நிர்வாகம் பல நூதனமான வழிமுறைகளில் தொழிலாளர்களை ஒடுக்கி அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்களை கையகப்படுத்தும் வேலையை வெட்டவெளிச்சமாக செய்து வந்தது களப்பணியாளரை அந்த இடத்தில் கொண்டு சென்று நிறுத்தியது. எடுத்துக்காட்டாக தொழிலாளர்களை தொலைதூர இடங்களுக்கு இடமாற்றம் செய்வது; அவ்வாறு இடமாற்றம் செய்யப்படும் நிலையில் தங்களுடைய குடும்பத்தைத் தாங்கள் முன்பு வேலை செய்த இடத்தில் விட்டுவிட்டு புதிதாக இடமாற்றம் செய்யப்படக் கூடிய இடங்களுக்கு வேலைக்கு சென்றால் அவ்வாறு செல்லக்கூடிய தொழிலாளர்களது வாழ்க்கை செலவினங்கள் இரட்டிப்பு ஆகும். அதாவது அவர்களது குடும்பங்கள் இருக்கக்கூடிய இடங்களில் குடும்பத்தினர் செலவினையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படும். அதே சமயத்தில் அவர்கள் புதிதாக வேலைக்கு சென்று பணியமரக்கூடிய இடமாற்றம் செய்யப்பட்ட இடங்களில் அவர்களுடைய வீட்டு வாடகை உணவு போன்ற செலவினங்களையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டும். இடமாற்றம் செய்யப்பட்ட உடனேயே அவர்கள் குடும்பத்தை புது இடங்களுக்கு அழைத்துச் செல்ல முடியாது. ஏனெனில் அவர்களது குழந்தைகளின் கல்வி போன்றவை அதனால் கடுமையாக பாதிக்கப்படும் இப்படிப்பட்ட சூழ்நிலையியின் கடுமையான தாக்குதலினால் பல தொழிலாளர்கள் இந்த வேலையை ஒட்டுமொத்தமாக விட்டு விட்டே சென்று விட்டனர்.

## அரசை ஏமாற்றி ஊதியம் பெற்ற நிர்வாகம்

அவ்வாறு வேலையை விட்டு சென்றுவிட்ட தொழிலாளர்களுக்கு என அரசிடமிருந்து ஜி.வி.கே.டி.எம்.ஆர்.ஐ நிறுவனம் அதன் பின்னரும் ஊதியம் பெற்றுக் கொண்டே இருந்தது. இவ்வாறு தங்களுடைய சுய லாபத்திற்காக தொழிலாளரை பழிவாங்கும் விதத்தில் தொலை தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்து அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள முடியாத

சூழ்நிலையை உருவாக்கி அந்த நிலையில் வேலையை விட்டு செல்லும் அவர்களை கிரிக்கெட் விளையாட்டில் உருளும் விக்கெட்டுகள் என்ற அடிப்படையில் இன்று எத்தனை விக்கெட்டுகள் விழுந்தன என்று இந்த நிர்வாகத்தின் அதிகாரிகள் தங்களுக்கிடையே பேசிக் கொள்வது ஒரு காலகட்டத்தில் வழக்கமாக இருந்தது.

**இன்றைய காலகட்டத்தில் அரசியல் கட்சிகளை பொருத்தவரையில் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை புறக்கணித்து இன, மொழி, பிராந்திய, ஜாதிய வெறி வாதங்களை கிளப்பி அரசியல் நடத்த கூடியவைகளாக உள்ளன. அவை மக்களின் பிரச்சனைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படக் கூடியவைகள் ஆக இல்லை என்பதைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அரசின் சார்பாக இது போன்ற சேவைகளை நடத்தும் நிறுவனங்கள் சட்டவிரோதமான மற்றும் நியாய விரோதமான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு சேவையை முடிந்த அளவிற்கு முடக்கும் வேலையையும் அந்த சேவையின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய தொழிலாளர்களை ஒடுக்கும் வேலையையும் வரைமுறையின்றி செய்கின்றன**

பராமரிப்பிற்கு என்று அரசாங்கத்தால் வழங்கப்படும் தொகைகளில் பெரும்பகுதியை இந்த நிர்வாகத்தின் மாவட்ட அதிகாரிகள் அபகரித்துக் கொள்ளும் வேலையைச் செய்தனர். அதாவது அங்கீகரிக்கப்பட்ட பெரிய பழுதுபார்க்கும் நிறுவனங்களில் வாகனங்களை விட்டு பழுது பார்ப்பதற்கு பதிலாக ஆங்காங்கே தெருவோரங்களில் இருக்கக்கூடிய பழுதுபார்க்கும் நிறுவனங்களில் குறைந்த அளவிலான பணத்தைக் கொடுத்து அதனை ஏனோ தானோ வென்று பழுது பார்த்து விட்டு அங்கீகரிக்கப்பட்ட பெரிய நிறுவனங்களில் கூடுதல் தொகை செலுத்தி பழுது பார்த்ததாக அரசிற்கு கணக்குக் காட்டி முறைகேடாக சம்பாதிக்கும் வேலையை இந்த நிறுவனத்தில் பணியாற்றிய மாவட்ட நிர்வாகிகள் செய்து வந்தனர்.

### சேவை பாதிப்பு

அதன் விளைவாக முறையான சேவை பராமரிப்பு இல்லாமல் போனது. இதனால் வாகனங்கள் ஆங்காங்கே அடிக்கடி நின்றுவிடுவது வழக்கமா கிவிட்டது. அவ்வாறு வாகனங்கள் நோயாளிகளை ஏற்றிச் செல்லும் போது இடையில் நின்று விட்டால் நோயாளிகளுடன் வருபவர்களின் மனநிலை எத்தகையதாக இருக்கும் என்பதை அந்த நிலையில் தங்களை வைத்து பார்க்கும் எவராலும் யூகிக்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கடும் அதிருப்திக்கும் கோபத்திற்கும் ஆளான இந்த சேவையின் பயனாளிகளின் உறவினர்கள் பலசமயங்களில் களப்பணியாளர்களை தாக்கக்கூடிய போக்குகளும் இந்தச் சேவையில் பணிபுரியும் களப்பணியாளர்களுக்கு ஏற்பட்டன. இது போன்ற செய்திகளும் எழுத்து ஊடகங்களில் அடிக்கடி வரத்தொடங்கின. அந்த சூழ்நிலையில் சேவையில் தங்களது முறைகேடான நடவடிக்கையால் ஏற்படும் பாதிப்பிற்கும் காரணமானவர்களாக களப்பணியாளர்கள் கொண்டுவந்து நிறுத்தும் வேலையை நிர்வாகம் செய்தது. ஒரு பக்கம் பயனாளிகளின் உறவினர்களால் அடித்துத் துன்புறுத்துவது போன்ற நடவடிக்கையும் மறுபுறம் தாங்கள் உருவாக்கிய சூழ்நிலையில் நேர்ந்த தவறுகளுக்கு களப்பணியாளளை பொறுப்பாக ஆக்கி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதும் போன்ற இரண்டு வகை நடவடிக்கைகளும் நிர்வாகத்தால் மேற்கொள்ளப் பட்டது.

### தொழிற்சங்கத்தின் உதயம்

இத்தகைய தாங்கமுடியாத சூழ்நிலை தோன்றிய பின்னணியில் இதனை எதிர் கொள்வதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் களப் பணியாளர்களுக்கு உருவானது. அதன் விளைவாக 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை பதிவு செய்து அந்த சங்கத்தின் முன் முயற்சியில் சேவையின் பாதுகாப்பையும் ஊழியரின் நலன்களையும் பாதுகாப்பது என்ற அடிப்படையில் அந்த சங்கம் செயல்பட தொடங்கியது. தற்போது தொழிற்சங்கங்கள் என்று செயல்படக்கூடிய வைகளின் போதாமைகளிலிருந்து படிப்பினை எடுத்துக்கொண்டு அந்த சங்கம் செயல்பட தொடங்கியது. பொதுவாக தொழிலாளர்கள் ஒட்டு மொத்த சமூகத்தின் மிக முக்கியமான அங்கமாக மட்டும் இன்றி சமூகத்தின் மிகப் பெரும்பான்மையானவர்கள் ஆகவும் இருக்கின்றனர். இருந்தாலும் கூட

அரசுத்துறைகள் போன்றவற்றில் செயல்படக்கூடிய தொழிற்சங்கங்கள் பொதுமக்களின் நலன்களை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் அவர்களது ஊதிய உயர்வு போன்ற சொந்த நலன்களை முன்னிலைப்படுத்தும் வருந்தத்தக்க போக்கினையே கடைப்பிடிக்கின்றன. இத்தகைய சுயநல மற்றும் சந்தர்ப்பவாத போக்கு தொழிற்சங்கங்களில் ஒருகட்டத்தில் தலைதூக்கி விட்டது. அதனால் பொதுமக்களிடம் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒருவகை வெறுப்புடன் பார்க்கும் மனநிலை உருவாக்கிவிட்டது. அது தவிர பொதுமக்கள் சேவை சம்பந்தப்பட்ட துறைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் கூட அவர்களது உரிமைகளை வலியுறுத்தும் அளவிற்கு கடமைகளை செய்வதில் அக்கறை காட்டாது இருக்கும் போக்கும் வளர்ந்துவிட்டது.

**அதிருப்திக்கான காரணம்**

அதனாலும் தொழிற்சங்கங்களின் மேல் சாதாரண மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் சூழ்நிலை உருவானது. இது தவிர அரசின் சேவைகள் தனியாரிடமிருந்து பெறும் சேவைகளைக் காட்டிலும் மலிவானவைகளாக இருந்ததாலும் அந்த சேவைகளைச் செய்பவர்கள் கேட்கும்போது அவர்களுக்கு கையூட்டாக பணம் கொடுக்கும் வழக்கமும் பொதுமக்களிடம் வளர்ந்துவிட்டது. அந்த சூழ்நிலையில் ஒரு தொகையை அரசுத் துறையில் பணி புரியும் ஊழியர்கள் கேட்கும்போது அதை கொடுக்கும் போக்கு பொதுமக்களிடையே கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து விட்டது. அதன் விளைவாக கையூட்டு வாங்கும் போக்கு பொது சுகாதாரத் துறையின் கீழ் வரும் மருத்துவ மனைகளில் பெருமளவிற்கு நிலவுவதை நாம் கண்கூடாகவே பார்க்க முடிகிறது. இத்தகைய சூழ்நிலையை பார்க்கக்கூடிய பொதுமக்கள் பொது அரசுத் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் குறித்து ஒரு நல்ல அபிப்பிராயத்தைக் கொண்டவர்களாக இருப்பதில்லை.

**அருகி போனவை ஆகிவிட்ட போக்குகள்**

தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலனை பொதுவாகவும் அதன் பெரும்பான்மைப் பங்கும் பகுதியுமாக இருக்கக்கூடிய தொழிலாளர் நலனை குறிப்பாகவும் பேண முடிந்தவையாக இருக்க வேண்டும். ஆனால் அத்தகைய தன்மை வாய்ந்த தொழிற்சங்கங்கள் அரிதாகிப் போனவைகளாக ஆகிவிட்டன. ஏனெனில் பணம் சம்பாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கும் எதையும் செய்யலாம் என்ற நிலை இந்த சமூகத்தில் நிலவுவதால் உயர்ந்த நோக்கங்களுடன் ஒரு கட்டத்தில் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் கூட நாளடைவில் பணம் கருதி செயல்பட கூடியவைகளாக ஆக சீரழிந்து போய் விட்டன. அதன் விளைவாக தொழிலாளர்கள் எப்போது தங்கள் சங்கத்தில் கூடுதல் எண்ணிக்கையில் உறுப்பினராக இருப்பார்கள் என்றால் அவர்களுக்கான பணப் பலன்களை மென்மேலும் பெற்றுத்தர முடிந்தவர்களாக தாங்கள் நிர்வகிக்கும் சங்கங்கள் இருக்கும் வரையில்தான் என்ற தவறான கருத்தின் அடிப்படையில் செயல்படக்கூடியவைகளாக தொழிற்சங்கங்கள் ஆகிவிட்டன. அதன் விளைவாக பல கேடுகள் சமூகத்தில் தோன்றத் தொடங்கின. ஆசிரியர்களுக்கான அமைப்புகள் அவர்களின் ஊதிய விகிதங்கள் குறித்தே பெரிதும் கவலைப்பட கூடியவைகள் ஆகி கல்வியில் தோன்றும் பிரச்சனைகள் குறித்து அவர்களுக்கு எந்த அக்கறையும் காட்டாத நிலை தோன்றிவிட்டது.

**பணம் சம்பாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கும் எதையும் செய்யலாம் என்ற நிலை இந்த சமூகத்தில் நிலவுவதால் உயர்ந்த நோக்கங்களுடன் ஒரு கட்டத்தில் உருவாக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் கூட நாளடைவில் பணம் கருதி செயல்பட கூடியவைகளாக ஆக சீரழிந்து போய் விட்டன.**

அது மட்டுமின்றி அரசினால் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்கு கிட்டும் ஊதியத்தில் பத்தில் ஒரு மடங்கு கூட ஊதியம் பெறாதவர்களாக பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் தனியார் கல்விக்கூடங்களில் வேலை செய்யும் நிலையையும் அவர்களது உரிமைகளையும் ஊதியங்களையும் உயர்த்துவதற்கு நாம் பாடுபட வேண்டும் என்பது போன்ற சரியான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தயாராக ஆசிரியர் அமைப்புகள் இல்லாமல் போய்விட்டன. அவைகளைப் பொறுத்தவரையில் அரசு ஒரு மாதிரி முதலாளியாக இருப்பதால் அங்கு சட்டப்படியான பல்வேறு

சலுகைகளை அரசு ஊழியர்களுக்கு கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் அது போன்ற நிறுவனங்களில் பேச்சுவார்த்தை என்ற பெயரில் அரசு அதிகாரிகளோடு நயமாக பேசியே அதிக சிரமமும் போராட்டங்களும் இன்றி தொழிற்சங்கங்கள் நடத்தும் ஒரு சாவுகிராக்கி தனமான நிலைக்கு வந்து விட்டன. அரசு துறைகளில் வேலைவாய்ப்புகள் குறைக்கப்படும் போதும் அந்த வேலைவாய்ப்புகள் ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு தாரை வார்க்க படும்போதும் அவற்றை எதிர்த்து கூட உரிய முறையில் குரல் எழுப்ப முடியாதவைகளாக அங்கு செயல் படும் தொழிற்சங்கங்கள் ஆகிவிட்டன. அவர்களிடம் ஏன் இப்படி இருக்கிறீர்கள் என்று அதன் உறுப்பினர்கள் என்று வினவினால் அதற்கு அவர்கள் அளிக்கக்கூடிய பதில்கள் எத்தகையவையாக இருக்கின்றனவென்றால் இருக்கும் உறுப்பினர்களின் நலன்களை பாதுகாப்பதே எங்களது முழு முதல் வேலை; வேலைவாய்ப்புகள் சுருங்குகின்றன என்றால் அதனை பார்ப்பது அரசியல்வாதிகளின் வேலை என்று கம்யூனிஸ்ட் கட்சிகளின் வழிகாட்டுதலில் செயல்படக்கூடிய அரசு ஊழியர் அமைப்புகள் கூட பதில் கூறுவது வழக்கமாக ஆகிவிட்டது. இதனால் தொழிற்சங்கங்களை பொறுத்தவரையில் பொதுமக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் ஏறக்குறைய அறவே இழந்து விட்டவை ஆகவே உள்ளன.

### கணக்கில் கொள்ள வேண்டிய விஷயங்கள்

இந்த விஷயங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஒரு தொழிற்சங்கத்தை முறையாக நடத்த முடியாது என்பதை 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கிய அதன் தலைமை சரியாக புரிந்து கொண்டது. மேலும் நிர்வாகங்களில் பலதரப்பட்ட நிர்வாகங்கள் உள்ளன. அரசு நிர்வாகமாக இருந்து செயல்படும் அரசு மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கார்ப்பரேட் நிர்வாகங்கள் உள்ளன. இவற்றில் அரசு நிர்வாகத்தில் இருக்கும் நிறுவனங்களை பொறுத்தவரையில் அது ஒரு மாதிரி முதலாளியாக இருந்து ஆக வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் அங்கு சட்டப்படி எழுப்பப்படும் கோரிக்கைகள் சட்டரீதியான வழிமுறைகள் மூலமே நிறைவேற்றப் படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அரசின் கைவசம் உள்ள பொதுத்துறை நிறுவனங்களை பொருத்தவரையில் அது தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதில் அரசாங்கத்தைப் போல் ஒரு மாதிரி நிறுவனமாக இருப்பதில்லை. இருந்தாலும் கூட அப்பட்டமான சட்டமீறல்களில் பொதுத்துறை நிறுவனங்களும் பெருமளவிற்கு ஈடுபடுவதில்லை. ஏனெனில் அவை பொதுத்துறை நிறுவனங்களாக இருப்பதால் சட்டத்திற்கும் சமூகத்திற்கும் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பவையாக உள்ளன. எனவே இவ்விரண்டு துறைகளிலும் தொழிற்சங்கங்கள் நடத்துவது அத்தனை கடினமானதல்ல. சட்டரீதியாக கோரிக்கைகளை முன்வைத்து வலியுறுத்தினாலே போதும்; அவற்றில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வெற்றி பெற்றுவிடலாம் என்ற நிலை நிலவுகிறது. ஆனால் இங்கு நிலவும் சூழ்நிலைகளுக்கு மாறாக தனியார் நிறுவனங்களை பொருத்தவரையில் அங்கு சட்டத்தை துச்சமென மதித்து செயல்படும் போக்கே நிலவுகிறது. அந்த நிறுவனங்களிலும் கூட சில சட்ட நியதிகள் அமுல் ஆக்கப்படுகின்றன. குறிப்பாக எட்டு மணி நேர வேலை என்பது அந்த நிறுவனங்களில் கடைப்பிடிக்கப் படுகிறது. எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய ஒரு தொழிலாளி பணிக்கப்பட்டால் அவருக்கு ஓவர் டைம் ஊதியம் வழங்கும் நடைமுறை அந்த நிறுவனங்களில் உள்ளது.

### தட்டிக்கேட்க சங்கம் இல்லாததால் தடுமாறிப்போன சேவை

ஆனால் இந்த போக்குகள் அனைத்துக்கும் மாறாக 108 ஆம்புலன்ஸ் சேவையை தமிழகம் உள்பட 10 மாநிலங்களுக்கு மேற்பட்ட வற்றில் நடத்தும் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிறுவனம் எந்த சட்டங்களையும் நியதிகளையும் மதிக்காத ஒரு நிறுவனமாகவே உள்ளது. அதற்கான காரணம் தொழிற்சங்க செயல்பாடுகள் பெருமளவிற்கு இருக்கக்கூடிய மாநிலங்களாக தமிழகம் தவிர்த்த இந்த சேவையை அந்த நிறுவனம் நடத்தும் பல மாநிலங்கள் இந்தியாவில் இல்லாததேயாகும். மேலும் தொழிலாளர் சட்டங்களை அமுலாக்குவது, நிர்வாகத்தை ஜனநாயகப் பூர்வமாக நடத்துவது தொழில் உறவு பிரச்சனைகளை கையாளும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய

சட்டங்கள் மற்றும் மரபுகள் ஆகியவற்றையும் கிஞ்சித்தும் அறியாதவர்களைத்தான் இந்த நிறுவனம் தனது மாவட்ட மண்டல நிர்வாகிகளாக வைத்துள்ளது. அவர்களுக்கு தெரிந்த நிர்வாக நடைமுறை ஒன்றே ஒன்றுதான். தொழிலாளர்களை அச்சுறுத்துவது; மிரட்டுவது; அவர்கள் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் எடுப்பது; அவர்கள் முன் வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக பொய் ஆவணங்கள் திரட்டுவது ஆகியவையே. அவற்றைத் தவிர வேறு நிர்வாக நடைமுறைகள் எவற்றையும் அறியாதவர்களாகவே இவர்களது நிர்வாகிகள் உள்ளனர்.

**ஆசிரியர்களுக்கான அமைப்புகள் அவர்களின் ஊதிய விகிதங்கள் குறித்தே பெரிதும் கவலைப்பட கூடியவைகள் ஆகி கல்வியில் தோன்றும் பிரச்சனைகள் குறித்து அவர்களுக்கு எந்த அக்கறையும் காட்டாத நிலை தோன்றிவிட்டது. அது மட்டுமின்றி அரசினால் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்கு கிட்டும் ஊதியத்தில் பத்தில் ஒரு மடங்கு கூட ஊதியம் பெறாதவர்களாக பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் தனியார் கல்விக்கூடங்களில் வேலை செய்யும் நிலையையும் அவர்களது உரிமைகளையும் ஊதியங்களையும் உயர்த்துவதற்கு நாம் பாடுபட வேண்டும் என்பது போன்ற சரியான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தயாராக ஆசிரியர் அமைப்புகள் இல்லாமல் போய்விட்டன.**

அதாவது சர்க்கஸில் மிருகங்களை சாட்டை முனையில் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ரிங் மாஸ்டர் போல் செயல்படக்கூடியவர்களே இந்த நிறுவனத்தில் அதிகாரிகளாக உள்ளனர். மேலும் நாம் ஏற்கனவே கூறியது போல் தொழில் உறவு பிரச்சனைகளைக் கையாள்வதற்கு நிலையாணை விதிகள் என்று எவையும் இந்த நிறுவனத்தில் கிடையாது. சட்ட விதிகளை அப்பட்டமாக மீறி 12 மணிநேர வேலை நாளை இந்த நிறுவனம் அமுலாக்கி வருகிறது. மொத்தமாக உள்ள களப் பணியாளர்களின் கணிசமான எண்ணிக்கையில் இருக்கக்கூடிய பெண்களுக்கு கழிப்பறை ஆடை மாற்றுவதற்கான வசதிகள் உள்ள ஓய்வு அறைகள் ஆகிய எவற்றையுமே ஏற்பாடு செய்யாமல் இந்த நிறுவனம் இந்த சேவையை அநாகரீக முறையில் நடத்தி வருகிறது. இந்தச் சேவையை நடத்தும் நிறுவனத்திற்கு அதன் கோளாறுகளினால் ஏற்படும் சேவை பாதிப்பு களப்பணியாளர் தலைமீது போடும் வாய்ப்பு பெருமளவிற்கு இருக்கிறது.

இத்தகைய அனைத்து சந்தர்ப்பவாத போக்குகளுக்கு சாவு மணி அடிக்க வேண்டும் என்ற நிலை அவசர அவசியமாக அகியுள்ள இந்த சூழ்நிலையில் இங்கு தொழிற்சங்கம் ஒன்றை கொண்டுவர வேண்டுமென்றால் இன்று தொழிற்சங்க இயக்கங்களில் தலைதூக்கியுள்ள பொருளாதாரவாதம், காரியவாதம், தரகுத்தன்மை வாய்ந்த விதத்தில் சங்கங்களை நடத்துவது போன்ற தொழிற்சங்கங்களை பீடித்துள்ள வியாதிகள் அனைத்தையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இத்தகைய போக்குகளை கொண்டவைகளாக தொழிற்சங்கங்கள் இருந்தால் அவை பொதுமக்களின் ஆதரவினை பெற முடியாது. அந்த நிலையில் தான் இன்றுள்ள பெரும்பான்மையான தொழிற்சங்கங்கள் உள்ளன. பொதுமக்களின் ஆதரவு இல்லாமல் எந்த ஒரு சரியான தொழிற்சங்கத்தையும் முறையாக நடத்த முடியாது. இறுதியில் மக்களின் ஆதரவு இருந்தால் தான் தொழிலாளர்களின் கோரிக்கைகள் வெற்றி பெறும். மேலும் மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்காமல் அவர்களது மனங்களை இனவாதம், மொழி வெறி வாதம், பிராந்தியவாதம், மதவாதம், சாதியவாதம் ஆகிய அடிப்படைகளில் பிரித்து அரசியல் செய்யும் நடைமுறையே தற்போது ஆளும் கட்சியாக வருவதற்கு வாய்ப்புள்ள பல்வேறு அரசியல் கட்சிகளால் கடைப்பிடிக்கப் படுகிறது. இதுபோன்ற சேவைக் குறைவு குறித்த பிரச்சனைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் பணியாற்றும் களப் பணியாளர்களின் பிரச்சனைகள் ஆகியவற்றிற்கு அரசியல் கட்சிகள் எந்த முன்னுரிமையும் தருவதில்லை. மேலும் அரசியல் லாபகரமான தொழிலாக ஆக்கப்பட்டு விட்டதால் எந்த ஒரு மக்கள் பிரச்சினையை எடுத்தாலும் அதை கையில் எடுப்பதால் தங்களுக்கு ஆதாயம் எதுவும் உள்ளதா என்று கணக்கிட்டுப் பார்த்து அந்த அடிப்படையில் அந்தப் பிரச்சினைகளை கையில் எடுப்பதையே இன்றுள்ள அரசியல் கட்சிகள் தங்களது கைவந்த கலையாக கடைப்பிடித்து வருகின்றன.

### மக்கள் ஆதரவு அணுகுமுறையோடு

இந்தப் பின்னணியில் முறையான தொழிற்சங்கம் ஒன்றினை நடத்த வேண்டுமானால் அந்த

தொழிற்சங்கத்தை மக்கள் ஆதரவு அணுகுமுறையோடு நடத்தவேண்டும். மக்கள் ஆதரவு மனநிலையை சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள களப்பணியாளர்களிடம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து கொண்டு வர வேண்டும். அதை செய்வதில் முதல்கட்டமாக சுகாதாரத் துறை முழுவதும் புரையோடிப்போயுள்ள கையூட்டு வாங்கும் வழக்கத்தை களப்பணியாளர்கள் கைவிடும் நோக்கில் தொழிற்சங்கத்தை நடத்தவேண்டும். இந்தச் சேவையை பொறுத்தவரையில் இதில் கணிசமான எண்ணிக்கையில் பெண் ஊழியர்கள் பணிபுரியும் சூழ்நிலை நிலவுகிறது. அடுத்ததாக இதில் கணிசமான எண்ணிக்கையில் ஆம்புலன்ஸ் வாகனங்களை ஓட்டக் கூடிய பைலட்டுகள் என்று அழைக்கப்படும் ஓட்டுநர்கள் உள்ளனர். இன்று சமூகத்தில் தலைவிரித்தாட கூடிய குடிப்பழக்கம் ஓட்டுநர்களையும் பிடித்து இருக்கக்கூடிய ஒன்றாக ஆகிவிட்டது. பல விபத்துகள் ஏற்படுவதற்கு வழிவகுத்து இந்த சேவையின் பயனாளிகளின் உயிருக்கு உலை வைக்கும் நடவடிக்கையாக இந்தப் போக்கு நாளடைவில் ஆகிவிடும். அது தவிர பெண் ஊழியர்களிடம் நிதானம் இழந்த நிலையில் தவறான பேச்சு செயல் ஆகியவற்றில் குடிக்கு அடிமையான ஆண் ஊழியர்கள் நடந்துகொள்ளும் போக்கும் அதிகரித்துவிடும். அதையும் சங்கம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று தொழிற்சங்க இயக்கங்களில் தலைவிரித்து ஆடக்கூடிய போக்காக தங்களது உரிமைகளை மட்டும் மிதமிஞ்சிய விதத்தில் வலியுறுத்தும் போக்கு உள்ளது. அதாவது மக்கள் பயனாளிகளாக உள்ள போக்குவரத்து சுகாதாரம் கல்வி போன்றவற்றில் மக்களின் நலனை கருத்திற் கொள்ளாமல் எதற்கெடுத்தாலும் சட்டம் பேசும் போக்கு அந்த துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர் இடையே தலைவிரித்து ஆடுகிறது. ஒரு காலகட்டத்தில் வீரியம் மிக்கவையாக இருந்த தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டங்களின் விளைவாக பல்வேறு தொழிலாளர்களின் கோரிக்கைகளை சாதிக்க முடிந்த வையாக தொழிற்சங்கங்கள் இருந்தன. அத்தகைய போக்கு மாறி இப்போது தொழிலாளர்களிடம் அதிகார வர்க்க மனநிலையோடு மக்களை அணுகும் மோசமான போக்கு தலையெடுத்து விட்டது. மக்கள் எதிர்கொண்டுள்ள அன்றாடப் பிரச்சனைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு பரிவுடன் சேவை வழங்கும் மனநிலையோடு மக்களை அணுகாமல் அவர்களை மிரட்டும் போக்கு பெருமளவிற்கு அரசுநிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் மத்தியில் விதத்தில் நிலவுகிறது.

**பெரும்பாலான தொழில்களில் சங்கங்கள் இல்லை**

நமது சமூகத்தை போல் அமைப்பு ரீதியாக பெரும்பாலான தொழிலாளர்கள் அணிதிரட்ட படாதுள்ள சூழ்நிலையில் அணிதிரட்ட பட்ட தொழில்களில் சங்கங்கள் நடத்தி ஓரளவிற்கு தொழிலாளருக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெறும் நிலைக்கு ஒரு சிறு பகுதி தொழிலாளர்கள் வந்துள்ளனர். அந்த தொழிலாளர்களை மையம் கொண்டு தான் பெரும்பாலான இந்திய தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. அதாவது இந்தியாவின் ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கத்தின் 5% அளவிற்கு குறைவானவர்களே இப்படிப்பட்ட தொழிற்சங்க மயமாக்கப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளராக உள்ளனர். சுரண்டலின் விகிதாச்சாரம் மிக அதிக அளவு இருக்கும் போதும் தொழிற்சங்க ரீதியான தலையீடு கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு தேவைப்படுவதாக இருக்கும்போதும் இங்குள்ள தொழிற்சாலைகள் அனைத்திலும் தொழிற்சங்கங்கள் கொண்டு வரப்படவில்லை; அதற்கான காரணம் என்ன என்று கேட்டால் பெரிய தொழிற் சங்கங்களின் தலைவர்கள் தொழிற்சங்கங்களை உருவாக்குவதற்கு அந்தப் பகுதி தொழிலாளர்கள் தயாராக இல்லை என்று கூறுகின்றனர்.

**பொதுமக்களின் ஆதரவு இல்லாமல் எந்த ஒரு சரியான தொழிற்சங்கத்தையும் முறையாக நடத்த முடியாது. இறுதியில் மக்களின் ஆதரவு இருந்தால் தான் தொழிலாளர்களின் கோரிக்கைகள் வெற்றி பெறும்.**

ஆனால் உண்மை அதுவல்ல. அமைப்புரீதியான ஒருங்கு திரட்ட படாத தொழில்களில் பணிபுரியும் தொழிலாளரை ஒருங்கு திரட்டுவதற்கு பெரும் முயற்சியும் உத்வேகமும் தேவை.

மேலும் அது போன்ற தொழில்களில் வேலை செய்பவர்களிடம் இருந்து பெரும் அளவிற்கு சந்தா மற்றும் நன்கொடை தொகைகளும் பெறமுடியாது. இன்று இருக்கக்கூடிய தொழிற்சங்கங்களில் பெரும்பாலானவை அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் இருப்பதால் அங்கு பணிபுரியக்கூடிய தொழிலாளர் இடமிருந்து அந்த சங்கங்கள் மாதம்தோறும் நூற்றுக் கணக்கான ரூபாய்களை சந்தாவாகவும் எப்போதெல்லாம் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கிட்டுகிறதோ அப்போதெல்லாம் அதில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் நன்கொடை ஆகவும் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

**தொழிலாளர் துரைத்தனம் தலைவிரித்தாடும் போக்கு**

அதனால் தொழிற்சங்க தலைவர்களில் பெரும்பாலோர் உள் விசாரணை போன்றவற்றில் கலந்து கொள்வதற்கு கூட விமானங்களில் கூடுதலாக கட்டணம் கொடுக்க வேண்டுமே என்பதை பொருட்படுத்தாது பயணிப்பது சர்வசாதாரணமாக ஆகிவிட்டது. வசதியான ஆடம்பர விடுதிகளில் தங்குவது விமான பயணம் மேற்கொள்வது வசதியான உணவு போன்றவை கிட்டுவது ஆகிய அனைத்து ஆடம்பரங்களையும் இன்றைய தொழிற்சங்க தலைவர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் கொடுக்கும் கணிசமான சந்தா தொகை சாத்தியமாக்கியுள்ளது. இது போன்ற துறைகளில் செயல்படும் தொழிற்சங்கங்கள் லட்சக்கணக்கான ரூபாய்களை அவற்றின் கணக்கில் வைத்திருக்கின்றன. இந்த விதத்தில் செயல்படக்கூடிய தொழிற் சங்கங்களின் தலைவர்கள் ஒருவகையான தொழிலாளர் துரைத்தன போக்குள்ளவர்களாக ஆகிவிட்டனர். அத்தகைய வாழ்க்கை முறையினை கடைப்பிடிக்கும் தலைவர்கள் அமைப்பு ரீதியாக ஒருங்கு திரட்டப்படாத தொழில்களில் உள்ள தொழிலாளரை தங்களது பணத்தை செலவு செய்து அணிதிரட்டும் வேலைகளை செய்ய தயங்குகின்றனர். ஒரு காலகட்டத்தில் சரியான கட்சித் தலைமைகளால் அவர்களிடம் உருவாக்கப்பட்ட அர்ப்பணிப்பு, தியாகம்,தொழிலாளர் நடத்தும் வாழ்க்கை அளவிற்கான வாழ்க்கையை அவர்களும் நடத்துவது போன்ற போக்குகள் தற்போது இல்லாமல் போய் விட்டன. இந்தக் காரணத்தினாலும் பெரும்பாலான இந்திய உழைப்பாளி மக்களை தொழிற்சங்க வட்டத்திற்குள் கொண்டுவரும் போக்கு பெரிதும் தடைபட்டு நிற்கிறது. இந்த விஷயத்தையும் 108 ஆம்புலன்ஸ் சேவையில் தொழிற்சங்கத்தை உருவாக்க விரும்பிய தலைமை கணக்கில் எடுத்துக் கொண்டது.

**உரிமையோடு கடமையையும் கருதவேண்டும்**

அந்த அடிப்படையில் தொழிற்சங்கத்தை முதற்கண் சேவைக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற விதத்தில் தொழிற்சங்க தலைமை நடத்த விரும்பியது. அடுத்ததாக சங்க உறுப்பினர்களிடையே உரிமைக்கு மட்டுமல்ல நாம் ஆற்ற வேண்டிய கடமைக்கும் முக்கியத்துவம் தரவேண்டும் என்ற எண்ணத்தை ஆழமாக பதிக்க வேண்டும் என்ற முடிவினையும் எடுத்தது. அடுத்ததாக சமூகத்தில் பொதுவாகவும் சுகாதாரத் துறையில் குறிப்பாகவும் புரையோடிப் போயிருக்கும் கையூட்டு வாங்கும் போக்கினை எந்த காலகட்டத்திலும் அனுமதிக்கக்கூடாது என்ற முடிவினையும் எடுத்தது. அது தவிர களப்பணியாளர் இடையே குடிப்பழக்கம் பெண் தொழிலாளரிடமும் பெண் பயனாளிகளிடமும் நாகரீகம் இன்றி நடந்து கொள்ளும் போக்கு இவை அனைத்தையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

**இதுபோன்ற சேவைக் குறைவு குறித்த பிரச்சனைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் பணியாற்றும் களப் பணியாளர்களின் பிரச்சனைகள் ஆகியவற்றிற்கு அரசியல் கட்சிகள் எந்த முன்னுரிமையும் தருவதில்லை. மேலும் அரசியல் லாபகரமான தொழிலாக ஆக்கப்பட்டு விட்டதால் எந்த ஒரு மக்கள் பிரச்சினையை எடுத்தாலும் அதை கையில் எடுப்பதால் தங்களுக்கு ஆதாயம் எதுவும் உள்ளதா என்று கணக்கிட்டுப் பார்த்து அந்த அடிப்படையில் அந்தப் பிரச்சினைகளை கையில் எடுப்பதையே இன்றுள்ள அரசியல் கட்சிகள் தங்களது கைவந்த கலையாக கடைப்பிடித்து வருகின்றன.**

அத்துடன் களப்பணியாளர்கள் பெறவேண்டிய அனைத்து உரிமைகளையும் பெறுவதற்காக பாடுபட வேண்டும். அவர்களுக்கு என நிர்வாகம் அரசிடமிருந்து பெறக்கூடிய தொகையில் பெரும்பகுதியை நிர்வாகமே கையகப்படுத்திக்

கொள்ளும் போக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்; தொழிற்சங்கத்தை நடத்துவதில் சட்டரீதியான வழிமுறைகளை மட்டுமே நம்பி இருந்தால் போதாது. அத்துடன் போராட்ட மனப்பான்மையுடனும் இயக்க ரீதியாகவும் அதனை நடத்த வேண்டும் என்ற முடிவினை எடுத்தது. எந்த சூழ்நிலையிலும் பண மற்றும் பயனாளிகளை மன உளைச்சலுக்கு ஆட்படுத்தும் நடவடிக்கைகளில் களப்பணியாளர்கள் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடுவதை முதற்கண் கட்டுப்படுத்துவதற்கும் அடுத்ததாக முற்றிலுமாக தடுப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கத்தின் தலைமை விரும்பியது. தொழிலாளர்களை உழைக்கும் வர்க்க அரசியல் வழிநடத்த வேண்டும்; உடைமை வர்க்கங்களின் சந்தர்ப்பவாத அரசியல் தொழிற்சங்க இயக்கத்தை வழிநடத்த அனுமதிக்கக்கூடாது என்ற முடிவினையும் தொழிற்சங்கத்தின் தலைமை எடுத்தது.

### கையூட்டு வாங்குவதை கட்டுப்படுத்த நடவடிக்கை

மேலே கூறிய அடிப்படைகளில் சங்கத்தை செயல்படச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் பல புதிய அணுகுமுறைகளை சங்கத் தலைமை கடைப்பிடித்தது. அவற்றில் முக்கியமானது கையூட்டு வாங்குவது போன்ற முறைகேடுகளை செய்பவர்களுக்கு குற்றச்சாட்டு குறிப்பாணைகள் போன்றவை வழங்கப்பட்டால் அதற்கு தொழிற்சங்கம் பதில் எழுதி தராது என்றவாறு எடுத்த மிக முக்கியமான முடிவாகும். அதுகுறித்து யாரேனும் தொழிலாளி ஒருவருக்கு குற்றச்சாட்டு குறிப்பாக வழங்கப்பட்டால் அதற்கு பதில் எழுதித் தருவது தொழிற்சங்கத்தின் கடமைதானே என்று வினவினால் அதற்கு பதிலளிக்கும் விதத்தில் தொழிற்சங்கத்தை கேட்டா அவர்கள் அந்ததவறை செய்தீர்கள்? அவ்வாறு தொழிற்சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் செயல்பட்ட நிலையில் உங்களுக்கு பதில் எழுதி தரும் பொறுப்பை சங்கம் எடுத்துக் கொள்ளும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள் என்று தெளிவாக களப்பணியாளர் இடம் கேட்க வேண்டும் என்று தொழிற்சங்கத்தின் கீழ் மட்டங்களில் உள்ள தலைவர்களுக்கு சங்கம் அறிவுறுத்தல் வழங்கியது. அதுமட்டுமின்றி சேவையில் பயனாளிகளை மன ரீதியான பண ரீதியான எந்த உளைச்சலுக்கும் ஆளாக்க மாட்டோம் என்ற உறுதிமொழியை சங்கத்தின் அனைத்து பொது நிகழ்ச்சிகளிலும் எடுக்கும் நடைமுறையை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தியது.

சமூக நலன் பேணுவது என்ற சங்கத்தின் கருத்து வெறும் வாய் வார்த்தையாக போய்விடக்கூடாது என்ற அடிப்படையில் 108 ன் ஊழியர்கள் பொதுமக்கள் நல்லுறவு கமிட்டி என்ற ஒரு புதிய அமைப்பினை சங்கம் உருவாக்கியது. அந்த அமைப்பின் கூட்டங்களில் 108 ஊழியர்களின் சேவையில் போதாமைகள் எவையேனும் இருந்தால் அவற்றை கலந்து கொள்பவரை எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொண்டு அங்கு அரங்கேறும் கருத்துக்களை கணக்கில் எடுத்துக்கொண்டு சேவை மேம்பாட்டு நடவடிக்கைகளை களப்பணியாளர்கள் எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தும் அரும் பணியினையும் செய்தது.

### வாகனங்களை இயக்காமல் சேவையை முடக்கும் போக்கு

அதே சமயத்தில் பல இடங்களுக்கு ஆம்புலன்ஸ் தேவை இருந்தும் அதனை நிறைவேற்றும் வகையில் வாகனங்கள் வழங்கப்படாததால் மக்கள் அவதிப்படும் சூழ்நிலை நிலவும் வேளையில் வாகனங்கள் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை பொதுமக்களோடு சேர்ந்து எடுத்து சேவையின் விரிவாக்கத்திற்கான உரிய நடவடிக்கையை எடுத்தது. அதுமட்டுமின்றி சேவையில் இருப்பதாக கணக்கு காட்டப்படும் வாகனங்கள் அனைத்தும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன என்பது போன்ற பொய்த் தோற்றத்தை அரசாங்கத்தின் முன் ஏற்படுத்திவிட்டு பல வாகனங்களை இயங்காமல் வைத்திருக்கும் போக்கினை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் கடைப்பிடித்தது. அதுபோன்ற சமயங்களில் இயங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை அந்த வாகனங்களின் இருப்பிடங்கள் குறித்ததகவல்கள் ஆகிய அனைத்தையும் அரசின் சுகாதாரத் துறையின் கவனத்திற்கு கொண்டுசென்று சேவை செவ்வனே நடைபெற தேவைப்படக் கூடியவற்றை சங்கம் செய்தது. இந்த அடிப்படைகளில் தொழிற்சங்கத்தை மாமேதை மார்க்ஸ் கனவுகண்ட விதத்தில் கம்யூனிச பாடசாலையாக

நடத்தும் திசைவழியில் நடத்தியது. தொழிற்சங்கம் ஏறுபோல் பீடு நடை போட்டது.

**பணியாளர் நலனையும் பொதுமக்கள் நலனையும் ஒருசேர கருதி**

இவ்வாறு சேவையின் மேம்பாட்டையும் பயனாளிகளின் நலனையும் மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு அந்த பின்னணியில் பொதுமக்களின் நல்லாதரவினை களப்பணியாளர் பக்கம் திருப்பி களப்பணியாளர் நலனையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை சங்கம் ஒருசேர எடுத்தது. அதன் விளைவாக நிர்வாகத்தின் பல முறைகேடான நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன. அரசாங்கம் களப்பணியாளர்கள் வருடாந்திர ஊதிய உயர்வுக்கென வழங்கும் தொகையில் பெரும்பகுதியை கையகப்படுத்தும் நோக்குடன் ஒரு முறைகேடான அப்ரைசல் திட்டத்தை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் கடைப்பிடித்து வந்தது. அதாவது சேவையில் பணியாற்றும் தொழிலாளர் அவர்கள் குறித்து ஒரு மதிப்பீட்டை நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும் என்றும் நிர்வாகம் அதை தனது அதிகாரிகளை கொண்டு ஆய்வு செய்து அதை மையமாகக் கொண்டும் களப்பணியாளர்கள் சேவைத்திறனை கணித்து அந்த அடிப்படையிலும் புதிய மதிப்பீடு ஒன்றினை களப்பணியாளர்கள் வேலை குறித்து செய்து அதன் அடிப்படையில் அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்ற பெயரில் அரசிடம் இருந்து பெறக்கூடிய தொகைகளில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கினை நிர்வாகமே கையகப்படுத்திக் கொண்டு மூன்றில் ஒரு பங்கு தொகையை மட்டும் கணப் பணியாளருக்கு ஊதிய உயர்வாக வழங்கும் நாசகார திட்டத்தை அமுல் ஆகிக்கொண்டு இருந்தது. அந்த அப்ரைசல் முறை எத்தனை முறை கேடானது என்பதை அரசின் சுகாதாரத் துறையிடம் இடைவிடாமல் எடுத்துரைத்து அம்பலப்படுத்தி அப்ரைசல் முறையை கைவிட வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த அப்ரைசல் முறையை கைவிடும் நிலைக்கு நிர்வாகத்தை சங்கம் கொண்டு சென்றது.

**ஊதியக் கொள்ளையை தடுத்து நிறுத்திய சாதனை**

அதன் விளைவாக பெரும்பாலான களப் பணியாளருக்கு அரசு வழங்கிய ஊதியத்தில் பெரும் பகுதி கிட்டுமாறு செய்தது. அது தவிர வாகனங்கள் முறையாக பழுது நீக்க படாததால் ஆங்காங்கே நின்று போகும் சூழ்நிலையையும் மக்களின் கவனத்திற்கும் கண்காணிப்பு கமிட்டியின் கவனத்திற்கும் கொண்டு வந்து அதில் நடந்துள்ள முறைகேடுகளை வெளிக்கொண்டு வந்தது. இதன் விளைவாக வாகன பராமரிப்புக்கு ஆக அரசிடமிருந்து ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் பெரும் தொகைகளில் முறைகேடுகள் செய்வதை பெருமளவிற்கு கட்டுப்படுத்தியது. சங்கத்தின் இத்தகைய சேவை ஆதரவு செயல்பாட்டின் காரணமாக பெருமளவிற்கு முறைகேடுகள் செய்த சிவகங்கை போன்ற இடங்களில் பணிபுரிந்த நிர்வாகத்தின் அதிகாரிகள் சேவையை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலையை தொழிற்சங்கம் உருவாக்கியது. அத்துடன் களப்பணியாளர்கள் குடுமி தன் கையில் சிக்கியதாக எப்போதும் இருக்கவேண்டும் என்ற விதத்தில் நிர்வாகம் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வேலை என்ற ஒரு புதிய வழிமுறையை கடைபிடிக்கத் தொடங்கியது. இந்த சேவை தொடங்கப்பட்ட காலத்தில் இது நிரந்தரமான வேலை இதன் மூலம் பரவலான விதத்தில் மக்களின் ஆம்புலன்ஸ் சேவை முழு அளவில் தீர்க்கப்பட போகிறது என்று அறிவித்து களப்பணியாளர்களை பணியமர்த்திய நிர்வாகம் அதன் பின் 11 மாதம் மட்டுமே வேலை அதன்பின் நிர்வாகம் மனது வைத்தால் மட்டுமே அந்த வேலையில் களப்பணியாளர்கள் நீடிக்க முடியும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தியது. அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டு அதனை ஏற்றுக்கொண்டு களப்பணியாளர்கள் கையொப்பம் இட்டால் தான் கடந்த காலங்களில் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்க வேண்டிய ஆனால் வழங்கப்படாத பணப்பலன்களை அரியர் தொகையாக வழங்க முடியும் என்ற அப்பட்டமான நியாய விரோத நிலையை நிர்வாகம் எடுத்தது.

**அடிமை சாசனத்தை ஏற்கமாட்டோம் என்று எடுத்த முடிவு**

எந்த சூழ்நிலையிலும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்ற நிலைப்பாட்டினை எடுத்து அனைவருக்கும் நிர்வாகம் வழங்கவேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வு நிலுவைத் தொகைகள் வழங்கப்பட்டாக வேண்டும் என்ற அடிப்படையில் போராட்ட நடவடிக்கைகள்

உட்பட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அனைத்து ஊழியர்களுக்கும் அந்த தொகையை தொழிற்சங்கம் தனது இடைவிடாத முயற்சியால் பெற்றுத் தந்தது. நிர்வாகத்தை பொறுத்தவரையில் களப்பணியாளர்கள் பொதுமக்களிடம் கையூட்டு பெறும் சூழ்நிலையை ஊக்குவித்து அந்த அடிப்படையில் அவர்களது பொருளாதாரத் தேவை முறைகேடான விதத்தில் ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டால் அவர்கள் அரசாங்கம் சேவையை நடத்துவதற்கு முதுகெலும்பாக இருக்கக்கூடிய களப் பணியாளர்களுக்கான ஊதியமாக வழங்கும் தொகை முழுவதையும் பெற வேண்டும் என்று எண்ண மாட்டார்கள். அதனை பயன்படுத்தி நிறைய சம்பாதிக்கலாம். அத்துடன் ஒழுக்கக்கேடான கையூட்டு பெறுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் களப்பணியாளருக்கு நிமிர்ந்து நின்று நிர்வாகத்தை கேள்வி கேட்கும் மனநிலை வராது; அதை பயன்படுத்தி எந்தெந்த தாக்குதல்களையெல்லாம் களப்பணியாளர் மீது கட்டவிழ்த்து விட முடியுமோ அந்ததாக்குதல்களை எல்லாம் கட்டவிழ்த்துவிட்டு அவர்களை தங்களது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கலாம் என்று நிர்வாகம் எண்ணியது. அந்த எண்ணத்தில் மண்ணைப் போடும் நோக்குடன் பண ரீதியான மன உளைச்சலை பயனாளிகளுக்கு கொடுக்கும் விதத்தில் செயல்பட மாட்டோம் என்ற உறுதிமொழி ஏற்கும் நடவடிக்கையை சங்கம் எடுக்கும் பொது நிகழ்ச்சிகள் அனைத்திலும் அறிமுகம் செய்து களப்பணியாளர் மனங்களில் ஊழலுக்கு எதிரான வித்தினை ஊன்றியது. இடைவிடாமல் உறுதிமொழி ஏற்கும் நடைமுறையை கடைப்பிடித்து அது ஓங்கி வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையையும் உருவாக்கியது. இதன் விளைவாக இப்போதும் கூட விபத்து போன்றவற்றில் சிக்கி உயிருக்கு போராடிக்கொண்டு இருப்பவர்களின் உடைமைகள் அனைத்தும் முறையான விதத்தில் ஏறக்குறைய அனைத்து சமயங்களிலும் விபத்தில் சிக்குண்டவரின் உறவினர்களிடம் ஒப்படைக்கும் கடமை உணர்வு மிக்க நடைமுறை தங்கு தடையின்றி இச்சேவையில் நடைபெற்று கொண்டு இருப்பதை ஒட்டுமொத்த தமிழ் சமூகமே பார்த்துக்கொண்டு உள்ளது. இதுகுறித்து அடிக்கடி எழுத்து ஊடகங்களிலும் செய்திகள் வந்து கொண்டு இருப்பது அனைவரும் அறிந்ததாக உள்ளது.

**நிர்வாகம் உருவாக்கிய போட்டி சங்கங்கள்**

இந்த பின்னணியில் வகையிலும் தான் நினைத்த விதத்தில் இந்த சேவையை நடத்துவதன் மூலம் பிற மாநிலங்களில் சம்பாதிக்கும் அளவிற்கு தமிழ்நாட்டில் சம்பாதிக்க முடியவில்லை என்ற ஆதங்கம் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்திற்கு தொடர்ச்சியாக இருந்து வந்தது. அந்த ஆதங்கத்தை மனதிற்கொண்டு களப்பணியாளர் ஒரு சிலரிடம் இருந்த இந்தப் போக்கை ஊக்குவித்து அவர்கள் செய்யும் அனைத்து முறைகேடுகளையும் தட்டிக்கேட்கும் தொழிற்சங்கத்திற்கு எதிராக ஒரு போட்டி தொழிற்சங்கத்தை உருவாக்கும் வேலையையும் நிர்வாகம் செய்தது. பொதுமக்களிடம் கையூட்டு பெறும் ஊழியரை காப்பாற்றும் வேலையை தொழிற்சங்கம் செய்யாது என்ற வகையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் எடுத்த நிலையினை முன்னிலைப்படுத்தி இத்தகைய முறைகேடுகளில் நீங்கள் ஈடுபட்டால் கூட நிர்வாகத்தினை உங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் செய்ய வைக்க முடியும்; அதற்கான முன் நிபந்தனை தொழிலாளர் நலனை அனைத்து வகையிலும் பாதுகாப்பது என்ற பெயரில் நிர்வாகத்தின் வருவாய் குறைவதற்கு பலவகைகளில் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் சங்கத்திலிருந்து விலகி நிர்வாக ஆதரவு மனநிலையோடு செயல்பட உத்தேசித்துள்ள எங்களது சங்கத்தில் வந்து இணைவதே என்ற அடிப்படையில் களப்பணியாளர் மத்தியில் துஷ் பிரச்சாரம் மேற்கொண்டு போட்டி சங்கம் ஒன்று உருவாவதற்கு ஆன அடித்தளத்தை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் போட்டுக் கொடுத்தது. அதன் விளைவாக விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கையூட்டு வாங்கும் புல்லுருவித் தன்மை வாய்ந்த களப்பணியாளர்கள் அந்த சங்கங்களில் உறுப்பினர்கள் ஆகினர். நிர்வாகம் எடுக்கும் அனைத்து களப்பணியாளர் விரோத நடவடிக்கைகளுக்கும் அந்த சங்கத்தினர் ஆமாம் சாமி போட்டனர். அதற்கு பிரதிபலனாக பொதுமக்களிடம் பணம் வாங்குகிறார்கள் என்ற அடிப்படையில் இந்த நிர்வாகத்தின் கைப்பாவை சங்கத்தில் இருப்பவர்கள் மீது குற்றச்சாட்டுகள் வந்தால் அதனை மூடிமறைத்து கையூட்டு வாங்குபவர்களை காக்கும் நடவடிக்கையை நிர்வாகம்

செய்தது.

**சங்கம் கடைப்பிடித்த கோட்பாடு**

தொழிற்சங்கத்தை பொறுத்தவரையில் அது தொழிலாளரை பாதுகாப்பதற்காக இருக்கக்கூடிய அமைப்பு. அது ஊழியர் மீது நடவடிக்கை எடுங்கள் என்று கேட்கும் நிலைக்கு ஒரு போதும் செல்லக்கூடாது. அந்த விதத்தில் செயல்பட்ட 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் உயர்ந்த உழைக்கும் வர்க்க கலாச்சாரத்தைத் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு இந்த கருங்காலி சங்கத்தினர் உறுப்பினர் சேர்க்கும் வேலையை மேற்கொண்டனர். எந்த வகையான நடவடிக்கை எடுத்தாலும் பெருமளவிற்கு அதுபோன்ற கருங்காலி சங்கத்தில் களப்பணியாளர்கள் உறுப்பினர்களாக ஆகவில்லை. அதனால் அத்தகைய சங்கத்தை கொண்டு 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தை ஒழித்துக்கட்டும் எண்ணத்துடன் இந்த இழிவான வேலையில் இறங்கிய நிர்வாகத்திற்கு ஏமாற்றமே மிஞ்சியது. இருந்தாலும் ஊழியரின் உரிமைகள் மற்றும் பலன்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் அதுவும் ஒரு சங்கம் அதையும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற கேடுகெட்ட நிலையினை நிர்வாகம் எடுத்து அதன் மூலம் எந்த அளவிற்கு களப்பணியாளர்களின் வயிற்றில் அடிக்கும் தனது திட்டத்தை அமலாக்க முடியுமோ அந்த அளவிற்கு அதனை அமுலாக்கம் வேலையை செய்தது. அத்தகைய இடர்பாடுகள் எத்தனை ஏற்படுத்தப்பட்டும் அவ்வாறு ஏற்படுத்தப்படும் தடைக்கற்களை படிக்கற்களாக பாவித்து பல்வேறு நடவடிக்கைகளை முறைகேடான நிர்வாகத்திற்கு எதிராக எடுத்து சங்கம் சேவையின் நலனையும் அதன் முதுகெலும்பாக உள்ள களப்பணியாளர் நலனையும் பாதுகாக்கும் கடமையை செவ்வனே செய்து வந்தது.

**சபையின் நிலையை மக்களிடம் எடுத்துரைக்க தயாரான பிரசுரங்கள்**

முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் மக்களிடம் சேவை மேம்பாட்டினை வலியுறுத்தும் விதத்தில் தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளையும் சேவையை நிர்வாகம் செய்கிறேன் என்ற பெயரில் அதனை நிர்மூலமாக்கி கொண்டிருந்த ஜி.வி.கே.எம்.இ.எம்.ஆர்.ஐ நிறுவனத்தின் சேவை விரோத செயல்பாடுகளையும் மக்களிடம் தொடர்ச்சியாக பல்வேறு பிரசுரங்கள் மூலம் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் கொண்டு சென்றது. அதன்மூலம் மக்களிடம் ஜி.வி.கே.எம்.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டும் வேலையை செய்தது. அதன் விளைவாக அரசின் கவனத்திற்கு இடைவிடாமல் நிர்வாகம் செய்யும் முறைகேடுகள் கொண்டு செல்லப்பட்டதால் அரசு இந்த நிர்வாகத்தை ஓரளவிற்கு புரிந்து கொண்டு அவர்கள் செய்யும் முறைகேடுகளை தட்டிக்கேட்கும் வேலையை செய்தது. கள நிலவரம் அறிந்த அரசின் விசேஷ பிரிவு காவல்துறையினர் அரசிடம் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் அதன் பிரசுரங்களில் மூலம் கொண்டு வரும் விஷயங்கள் அனைத்தும் உண்மையானவை என்பதையும் அதனை எதிர்கொள்வதற்காக நிர்வாகம் முன்வைக்கும் வாதங்கள் அனைத்தும் பொய்யானவை என்பதையும் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

**விழாக்கால பணப்பலன்**

தமிழகத்தில் அனைத்து துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் தீபாவளி போன்ற விழா காலங்களில் போனஸ் என்ற பெயரிலோ நன்கொடை என்ற பெயரிலோ விழாக்கால செலவினங்களை எதிர்கொள்வதற்காக குறிப்பிடத்தக்க தொகைகள் பெறும் நிலை நிலவி வந்த வேளையில் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிறுவனம் மட்டும் அத்தகைய விழாக்கால போனஸ் வழங்காமல் இந்த சேவையை நிர்வகித்து வந்தது. கண்துடைப்பு நடவடிக்கையாக தீபாவளி சமயங்களில் இனிப்பு பலகாரங்கள் அடங்கிய பொட்டலம் ஒன்றினை மட்டும் வழங்கி களப்பணியாளரின் விழாக்கால தேவைகளை ஈடு கட்டுவதாக பாவனை காட்டி வந்தது. இந்த பிரச்சனையை கையில் எடுத்து மற்ற அனைத்து துறை தொழிலாளர்களுக்கும் வழங்குவது போல் 108 ஆம்புலன்ஸ் சேவையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி ஒரு வேலை நிறுத்த அறைகூவலை 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் எடுத்தது. அதாவது வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்தால் தான் பேச்சுவார்த்தை மேடைக்கு நிர்வாகத்தை கொண்டு வர

முடியும் என்ற காரணத்தால் அந்த நடவடிக்கையினை தொழிற்சங்கம் எடுத்தது. அதன் விளைவாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பின்னணியில் நிர்வாகம் தீபாவளி போனஸ் தொகைக்கு பதிலாக ஒரு தொகையை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது.

**ஊக்கத்தொகை அபகரிக்கப்பட்ட கொடுமை**

இந்த பிரச்சனை தோன்றிய போது தான் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் பல காலமாக செய்து வந்த மற்றொரு முறைகேடு வெளிச்சத்திற்கு வந்தது. அதாவது களப்பணியாளர்கள் ஆண்டுதோறும் ஊக்கத் தொகை என்ற பெயரில் மாதமொன்றுக்கு 400 வீதம் கணக்கிட்டு ரூபாய் 4800 வழங்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் அரசால் நிர்வாகத்திடம் செய்யப்பட்டிருந்தது என்ற விஷயம் வெளிவந்தது. போனஸ் என்ற பெயரில் எந்தத் தொகையையும் வழங்க கூடாது என்பதில் திட்டவட்டமாக இருந்த நிர்வாகம் தாங்கள் வழங்காமல் இருந்த முன்பணத் தொகையினை தீபாவளி சமயத்தில் வழங்கியதாக நிர்வாகம் உலவ விட்ட கருத்தோட்டத்தை எதிர்கொள்ளும் விதத்தில் ஒப்பந்தப்படி போனசுக்கு பதிலாக நிர்வாகம் வழங்க வேண்டிய தொகையையும் அது ஊழியருக்கு ஆண்டுதோறும் வழங்க கடமைப்பட்டு இருந்த ஊக்கத் தொகையையும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் பல்வேறு வழக்குகளை தமிழ்நாடு முழுவதும் தொடுத்தது. அந்த வழக்குகள் தற்போது நிலுவையில் இருந்து கொண்டுள்ளன. அந்த விதத்தில் விழாக்கால செலவினங்களை எதிர்கொள்வதற்காக தீபாவளி சமயத்தில் களப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் பண பலன்கள் தற்போது ஏறக்குறைய ரூபாய் பத்தாயிரம் என்னும் அளவிற்கு வழங்கப்பட்டுக் கொண்டுள்ளன. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் இத்தகைய விழாக்கால பணம் வழங்கும் நடைமுறை தமிழகத்தை தவிர ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ இந்த சேவையை நிர்வகிக்கும் பிற மாநிலங்கள் எதிலும் அமலாக்கப் படவில்லை என்பதாகும்.

**ஆதாயம் கருதி நடத்தப்பட்ட சட்டவிரோத சம்பளப் பிடித்தம்**

இவ்வாறு மற்ற மாநிலங்களில் அது தானடித்த மூப்பாக செயல்பட்டு சம்பாதிக்க முடிந்த அளவிற்கான லாபத்தை தமிழ்நாட்டில் சம்பாதிக்க முடியாததால் வேறு வகைகளில் சம்பாதிக்கும் நோக்குடன் அரசாங்கம் மக்களின் கோரிக்கைகளை ஏற்று புதிதாக சேவையில் ஈடுபடுத்திய ஆம்புலன்ஸ் வாகனங்களை சேவையில் ஈடுபடுத்தாமல் நிறுத்தி வைத்து அந்த வாகனங்களும் சேவையில் இருப்பதுபோல் பொய்யாக கணக்கு காட்டி அரசிடமிருந்து பணம் பெறுவது போன்ற நடவடிக்கைகளை நிர்வாகம் மேற்கொள்ள தொடங்கியது. அதுமட்டுமின்றி களப்பணியாளர்கள் சம்பவங்களில் இருந்தும் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி சம்பளப் பிடித்தம் செய்யும் நடவடிக்கைகளையும் நிர்வாகம் மேற்கொண்டு அவற்றின் மூலமும் சம்பாதிக்க தொடங்கியது. எந்த அளவிற்கு இந்த போக்கு சென்றது என்றால் பேறுகால இடுப்பில் உள்ள பெண் களப்பணியாளருக்கு அவர்கள் சட்டப்படி சம்பளத்துடன் கூடிய விடுப்பில் இருந்தும் அவர்களுக்கு ஊதிய உயர்வை மற்றவர்களுக்கு வழங்குவது போல் வழங்காமல் இருப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்கும் நிர்வாகம் வந்தது.

**அநாகரிக வேலைச் சூழ்நிலை**

கணிசமான எண்ணிக்கையில் பெண் ஊழியர்கள் பணி புரியும் இந்த சேவையில் அவ்வாறு வேலை செய்யும் பெண் ஊழியர்களுக்கு கழிப்பறை வசதிகள் கூட செய்து தராத ஒரு அநாகரீகமான நிர்வாகமாகத்தான் இந்த நிர்வாகம் இருந்தது என்பதை ஏற்கனவே பார்த்தோம். அவர்கள் பணிக்கு செல்லும் போதும் பணி முடித்து செல்லு ம்போதும் உடை மாற்றங்கள் செய்வதற்கு தங்குமிட வசதி கூட அவர்களுக்கு செய்து தரப்படவில்லை. அதன் விளைவாக வெளியில் சொல்ல முடியாத பல்வேறு வகையான மன உளைச்சல்களுக்கு பெண் களப்பணியாளர்கள் ஆளானார்கள். அந்தப் பிரச்சினையையும் தற்போது தொழிற்சங்கம் கையில் எடுத்து உள்ளது. சட்டவிரோதமாக களப்பணியாளர்கள் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை செய்ய நிர்ப்பந்திக்கும் நிர்வாகத்தை எதிர்த்து 8 மணி நேர வேலை என்பது உறுதி செய்யப்பட வேண்டும் மீதமுள்ள நான்கு மணி நேர வேலை நேரத்திற்கு ஓவர் டைம் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் பிற பல சட்டபூர்வமான கோரிக்கைகளையும் முன்வைத்து

தொழில் தாவா எழுப்பி அவற்றில் பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்படாத நிலையில் அவ்வாறு எட்டப்படாத பல கோரிக்கைகள் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு தமிழக தொழிலாளர் துறையினால் அனுப்பப்பட்டுள்ள சூழ்நிலையையும் தொழிற்சங்கம் தனது உரிய நடவடிக்கைகள் மூலம் உருவாக்கியது.

**அனைத்து முறை கேடுகளுக்கும் பதில் சொல்லியாக வேண்டிய நிலை**

நிர்வாகம் செய்யும் எந்த முறைகேடும் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தினால் தட்டிக்கேட்க படாமல் போகாது என்ற அடிப்படையில் அனைத்து முறைகேடுகளுக்கு எதிராகவும் சட்டபூர்வமான அல்லது ஸ்தாபனபூர்வமான நடவடிக்கைகளை தொழிற்சங்கம் இடைவிடாமல் எடுத்து வந்துள்ளது. அதன் விளைவாக பல்வேறு வழக்குகளில் தோல்வி கண்ட நிர்வாகம் நீதிமன்ற ஆணைகளை நிறைவேற்றாமல் நீதிமன்ற அவமதிப்பு வேலையை தொடர்ச்சியாக செய்து கொண்டு உள்ளது. களப் பணியாளர்களின் வேலை சூழ்நிலை ஒரே தன்மை வாய்ந்ததாக உள்ள 108 ஆம்புலன்ஸ் சேவை துறையில் இரண்டு வகையான வேலை சூழ்நிலையை பராமரிக்கும் சட்ட விரோத நடவடிக்கையையும் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் செய்து கொண்டுள்ளது. அதாவது புதிதாக அது வேலைக்கு எடுக்கும் ஊழியர்களின் பணிக்காலம் வெறும் 11 மாதங்கள் மட்டுமே என்பதாக இருக்கும்; 11 மாதங்களுக்கு மேல் நிர்வாகம் மனது வைத்தால் தான் களப்பணியாளர் வேலை நீடிக்கும் என்ற வகையிலான நித்திய கண்டம் பூரண ஆயுள் என்ற தன்மை வாய்ந்த வேலை சூழ்நிலையை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் தமிழகம் உள்பட அது சேவையை நடத்தும் அனைத்து மாநிலங்களிலும் கொண்டு வந்து உள்ளது.

**வேலையில் இல்லாதவருக்கும் அரசை ஏமாற்றி சம்பளம் பெற்ற கொடுமை**

இதனை எதிர்த்து தொழில்தாவா எழுப்பி அதன் மூலம் புதிதாக வேலைக்கு சேர்ந்த இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்து கொடுத்துள்ள தொழிலாளரின் வேலை பாதுகாப்பையும் தொழிற்சங்கம் முடிந்த அளவிற்கு பராமரித்து வருகிறது. நிர்வாகம் வேலையை விட்டு பல காலங்களுக்கு முன்பு வெளியேறி வேறு துறைகளில் வேலைக்குச் சேர்ந்தவர்களையும் 108 சேவையில் வேலையில் இருப்பவர்களாக காட்டி அரசிடமிருந்து முறைகேடாக அவர்களுக்கும் சம்பளம் பெற்று அதனை கையகப்படுத்திக் கொண்டுள்ளது. அவை போன்ற முறைகேடுகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுத்து அதுகுறித்து விஜிலன்ஸ் காவல்துறையிடம் புகார் கொடுத்து நிர்வாகத்தின் முறைகேட்டை அம்பலத்துக்கு கொண்டுவரும் வேலையையும் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் செய்தது.

**கண்ணுக்கு கண்ணாக கண்டுகொண்ட அரசு**

இதற்கு முன்பு அதிகாரத்திலிருந்த அ.இ.அ.தி.மு.க அரசாங்கம் நிர்வாகத்தின் இந்த வகையான சேவை விரோத நடவடிக்கையை கண்ணுக்கு கண்ணாக அறிந்து கொண்ட நிலையில் அதாவது 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தினால் அம்பலப்படுத்த பட்டதன் மூலம் அறிந்து கொண்ட நிலையில் அந்த நிர்வாகத்தை வைக்க வேண்டிய இடத்தில் வைத்திருந்தது. ஆனால் தற்போது உள்ள அரசாங்கம் ஒருபோதும் வாய் வார்த்தையில் ஒப்பந்தத் தொழில் முறையை தமிழ்நாட்டில் இல்லாமல் செய்யப்போவதாக அறிவித்து அத்துடன் பத்திரிக்கைகளில் செய்திகள் வெளிவர செய்து தொழிலாளி வர்க்கத்திற்கு சாதகமாக ஒரு பெரும் செயலை செய்தது போல் பாவனை காட்டிக்கொண்டு மறுபுறம் அனைத்துத் தொழில்களையும் ஒப்பந்த அடிப்படையில் நடைபெறுவதற்கு அனுமதிக்கும் வேலையை செய்து கொண்டுள்ளது. ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களை யும் வேலைநீக்கம் செய்துவிட்டு அந்த இடங்களுக்கு புதிதாக ஆட்களை எடுப்பதற்கும் எத்தனித்து கொண்டுள்ளது. வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடும் நிலையில் இதுபோன்ற வேலைகளுக்கு கூட கையூட்டு கொடுப்பதற்கு வேலையில்லாதவர்கள் தயாராக உள்ள நிலையில் அதனை பயன்படுத்தி ஒருபுறம் சம்பாதிப்பதற்காகவும் மறுபுறம் நிறைய வேலை வாய்ப்புகள் இந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளன என்பது போன்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் இத்தகைய வேலைகளை அரசாங்கம் செய்து வருகிறது. அரசாங்கத்தின் இந்த மனநிலையைப் புரிந்து கொண்டு

தனது தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில்ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் செயல்பட தொடங்கியுள்ளது.

**தொழிற்சங்கத்தை முடக்க நிர்வாகத்திற்கு பயன்பட்ட ஊரடங்கு**

ஏற்கனவே இவ்வாறு சேவைப் பாதுகாப்பையும் ஊழியர்களின் உரிமைகள் மற்றும் ஊதியங்கள் பாதுகாப்பையும் கருதி செயல்பட்ட 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தை எப்படியாவது செயலிழக்கச் செய்து விட வேண்டும் என்ற அடிப்படையில் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் தொடர்ச்சியாக பல்வேறு முறைகேடான தொழிலாளர் நடவடிக்கைகளை இடைவிடாமல் எடுத்து வந்தது. அவை அனைத்தையும் ஊழியர்களை அணிதிரட்டி இயக்க ரீதியாக களத்தில் இறங்கியும் இந்த நிர்வாகத்தின் சேவை விரோத மனநிலையை மக்களிடம் அம்பலப்படுத்தியும் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் உரிய முறையில் எதிர்கொண்டு வந்தது. அந்த சூழ்நிலையில் 2019 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கி இப்போது வரை முடிவுக்கு வராத இருக்கக்கூடிய கொரோனா பெருந் தொற்று ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்திற்கு மிகப்பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இந்த காலகட்டத்தில் தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவுகள் அடுத்தடுத்து பிறப்பிக்கப்பட்டன. இந்த ஊரடங்கு அமலில் உள்ள காலத்தில் எந்த பொது நடவடிக்கைகளையும் தொழிற்சங்கம் எடுக்க முடியவில்லை. அதை சாதகமாக்கிக் கொண்டு சங்கத்தின் பொருளாளரை ஒரு இட்டுக்கட்டப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் நிர்வாகம் வேலை நீக்கம் செய்தது. அதாவது நிர்வாகத்தின் மாவட்ட அதிகாரியை தாக்கினர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 5 தொழிலாளர்கள் மீது போலீஸ் புகார் கொடுக்கப்பட்டது அந்த ஐவரில் ஒருவர் தொழிற்சங்கத்தின் பொருளாளர் ஆவார். அதுகுறித்து காவல் நிலையத்தில் தாக்கல் செய்யப்பட்ட புகாரில் அவர் தாக்கியதாக கூறப்படவே இல்லை. அதுமட்டுமின்றி ஒட்டுமொத்தமாக அந்த புகாரே பொய் புகார் என்று கருதப்பட்டு தற்போது அதன் மீதான விசாரணை கைவிடப்பட்டு விட்டது.

இருந்தாலும் அந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட பொருளாளர் மட்டும் திரும்பி வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது குறித்து தொடர்ச்சியாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நிர்வாகத்தின் தரப்பில் எந்த வகையான பதிலும் இல்லை. ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் இவ்வாறு பெரு நோய்த்தொற்று காலத்தைத் தனது தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை கண்மூடித்தனமாக கட்டவிழ்த்து விடுவதற்காக பயன்படுத்திக் கொண்ட நிலையில் தொழிற்சங்கத்தை பொறுத்தவரையில் அது பெரு நோய்த்தொற்று காலகட்டத்தில் சேவையை பாதுகாக்கும் நோக்குடன் நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தது. நிர்வாகத்தின் தூண்டுதலின் பேரில் அதாவது இது போன்ற தருணத்தில் நீங்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து போராடுவது போல் பாவனை காட்டினால்தான் ஆழமாக ஊழியர் மனங்களில் தனது அப்பழுக்கற்ற சேவையின் மூலம் இடம் பிடித்து உள்ள சங்கத்தின் அரவணைப்பில் உள்ள களப்பணியாளர்களை உங்கள் பக்கம் கொண்டுவர முடியும் என்ற அடிப்படையில் நிர்வாகம் போட்டுக் கொடுத்த பாதையில் பயணித்து பெரு நோய்த்தொற்று காலத்தில் சேவையை முடக்கும் நோக்குடன் சில நடவடிக்கைகளை நிர்வாகத்தின் கைக்கூலி சங்கங்கள் மேற்கொண்டன. அந்த நிலையில் இந்த காலகட்டம் முழுமையான ஒத்துழைப்பை அரசின் சுகாதாரத் துறைக்கு வழங்கி ஒருமித்த விதத்தில் இந்த நோய்த்தொற்றை எதிர்கொள்ள வேண்டிய காலமாகும்; நமக்கு இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சனைகள் வலியுறுத்தப் பட வேண்டியவை தான்; ஆனால் அவற்றை வலியுறுத்துவதற்கு இது ஏற்ற தருணம் அல்ல; தார்மீக அடிப்படையில் பார்த்தால் இது நமது முழுமையான ஒத்துழைப்பை தமிழகத்தில் சுகாதாரத் துறைக்கு வழங்குவதற்கும் பெரு நோய்த்தொற்றை எத்தனை உறுதியுடன் எதிர்கொள்ள முடியுமோ அத்தனை உறுதியுடன் எதிர்கொள்ள வேண்டியதற்குமான தருணமாகும் என்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளை 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் அதன் ஊழியர்களை அணியுமாறு கேட்டுக் கொண்டதன் மூலம் புல்லுருவிகள் இன் உள்நோக்கம் கொண்டதும் விஷமத்தன்மை வாய்ந்ததுமான

சேவை விரோத நடவடிக்கைகளை சங்கம் முறியடித்தது.

**கடமை உணர்வோடு வேலை செய்தது நாம் பெயர் எடுத்துக்கொண்டதோ நிர்வாகம்**

இந்த காலகட்டத்தில் சேவையை பாதுகாக்க வேண்டும் என்ற வகையில் சங்கம் எடுத்த முயற்சிகளை எல்லாம் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு சேவையை தான் தான் நல்ல முறையில் பராமரிக்கிறேன் என்று அரசாங்கத்திடம் காட்டிக் கொண்ட ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் அதே சமயத்தில் ஊழியர்களின் சம்பவங்களில் கை வைப்பதையும் பேறுகால விடுப்பில் சென்ற பெண்களின் ஊதியத்தில் கை வைப்பதையும் கைவிடாமல் உறுதியாக செய்து வந்தது. அதே சமயத்தில் நூற்றுக்கணக்கான குற்றச்சாட்டு குறிப்பாணை இட்டுக்கட்டப்பட்ட விதங்களில் களப்பணியாளர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக நிர்வாகத்தால் வழங்கப்பட்டன. அதாவது எத்தனை நடவடிக்கை எடுத்தாலும் ஊரடங்கு அமலில் இருப்பதால் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் எதிர் நடவடிக்கை எதையும் எடுக்க முடியாது என்பதை நன்கு அறிந்துகொண்டு இந்த தார்மீக நெறி முறையற்ற சட்ட விரோத நடவடிக்கைகளை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் மேற்கொண்டது.

**சேவையை தனியார்மயமாக்க நிர்வாகம் தீட்டிய திட்டம்**

இந்தப் பின்னணியில் இந்த சேவையினை அரசு தனியார் பங்கேற்பின் மூலம் நடைபெறக்கூடிய சேவை என்ற அடிப்படையிலிருந்து மாற்ற வேண்டும் என்ற முயற்சியை நிர்வாகம் செய்யத் தொடங்கியது. அதாவது அது இந்த சேவை குறித்து தமிழக அரசோடு செய்து கொண்ட ஒப்பந்தம் முடிவுக்கு வந்து விட்ட நிலையில் அடுத்து இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டுமானால் முழுக்க முழுக்க தனியார் நிறுவனமாக நடத்த அனுமதிக்கப்பட்டால் தான் தன்னால் இந்த சேவையை நடத்த முடியும் என்ற நிலையினை வலியுறுத்தி அரசாங்கத்திடம் இடைவிடாமல் கோரிக்கைகள் வைக்கத் தொடங்கியது. அதனை இத்தனை சிரத்தை யுடன் நிர்வாகம் மேற்கொண்டதற்கான காரணம் முழுக்க முழுக்க தனியார் துறையில் இந்த சேவை நடத்தப்பட்டால் இந்த சேவை அரசின் கண்காணிப்பு வரையறைக்குள் இல்லாததாக ஆகிவிடும்; அந்த நிலையில் அரசு களப்பணியாளர்களுக்கு வழங்கும் பணத்தை தன்னிச்சையாக கையாடல் செய்யலாம்; நிறைய பேர் வேலைக்கு காத்திருப்பவர்களாக இருப்பதால் மிகக்குறைந்த ஊதியத்தை புதிதாக வேலைக்கு எடுக்கப்படுபவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்து அதில் பெரும் லாபம் ஈட்டலாம்; நினைத்த விதங்களில் எல்லாம் இந்த சேவையை தன்னிச்சையாக நடத்தி பிற மாநிலங்களில் இந்த சேவை பெயரளவிற்கு நடத்தப்படுவது போல் நடத்தி அதற்கென அரசால் ஒதுக்கப்படும் தொகைகளை மிகப் பெருமளவிற்கு கபளீகரம் செய்யலாம் என்ற எண்ணத்தில் இந்த கோரிக்கையை அரசாங்கத்தின் முன் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் வைத்தது. இதுபோன்ற முழுக்க முழுக்க தனியார் நிறுவனமாக இந்த சேவை ஆக்கப்பட்டால் அதன் விளைவு இந்த சேவை ஏறக்குறைய ஊற்றி மூடுவதாக தான் இருக்கும் என்பதை உணர்ந்துகொண்ட 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் அதற்கு எதிராக ஊரடங்கு சூழலிலும் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தது. நிர்வாகத்தின் இந்த நாசகார திட்டம் அமலுக்கு வந்தால் அதன் விளைவாக சேவை எந்த அளவிற்கு நிர்மூலமாகும் என்பதை துண்டுப் பிரசுரங்கள் மூலம் தமிழக மக்களின் கவனத்திற்கு 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் கொண்டு வந்தது. அதன் விளைவாக அந்த முயற்சி ஏறக்குறைய முறியடிக்கப்பட்டது.

**பிழைப்பூதியம் கிடைக்க நடவடிக்கை எடுத்த சங்கம்**

இதைப்போல் தான் எடுக்கும் நடவடிக்கைகள் எல்லாம் அதற்கு எதிரான உரிய எதிர் நடவடிக்கைகள் மூலம் முறியடிக்க படுவதை கண்ட நிர்வாகம் குற்றச்சாட்டு குறிப்பாணை, பணிநீக்கம், சம்பளப் பிடித்தம், வாய்மொழி உத்தரவுகள் மூலமாக களப்பணியாளர்களை வேலைக்கு வராமல் தடுப்பது அதன்பின் அவ்வாறு தடுக்கப்பட்டவர்கள் பல நாட்கள் வேலைக்கு வரவில்லை என்று குற்றம் சுமத்தி அவர்கள் மீது விசாரணைகள் என்ற பெயரில் நாடகங்களை அரங்கேற்றி விட்டு அவர்களுக்கு பணி வழங்காமல் வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த இடத்தில் சங்கம் மேற்கொண்ட மற்றொரு நடவடிக்கையையும் நினைவு கூறாமல் இருக்க முடியாது. 108

ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் செயல்பட தொடங்குவதற்கு முன்பு நிறைய பேர் தற்காலிக பணி நீக்கம் என்ற பெயரில் பணி நீக்கம் செய்யப்பட்டனர் அவ்வாறு தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு பிழைப்பூதியம் வழங்கவேண்டும் என்ற நடைமுறை நிர்வாகத்தால் சுத்தமாகவே கடைப்பிடிக்கப் படவில்லை. அந்த நிலையை மாற்ற தொழிற்சங்கம் அதனை கையில் எடுத்து பிழைப்பூதியம் வழங்கும் நடைமுறையை இந்த சேவையில் ஈடுபட்டிருக்கும் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளருக்கும் அமலாவதற்கான ஏற்பாடுகளை செய்தது.

### சட்டபூர்வ அணுகுமுறைகளின் அரிச்சுவடி தெரியாத நிர்வாகம்

இந்த நிர்வாகம் தொழிலாளர் சட்டங்கள் எதையும் கடைப்பிடிக்க விரும்பாத ஒரு நிர்வாகமாகவே ஆரம்பம் முதற்கொண்டு இப்போது வரை இருந்து வருகிறது. அதாவது ஒரு நிறுவனத்தை நடத்தினால் அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க உரிமை உள்பட பல உரிமைகளை நிர்வாகம் வழங்க வேண்டும்; அவ்வாறு செயல்படக்கூடிய தொழிற்சங்கங்களில் மிகப்பெரும்பாலான தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள சங்கத்தோடு கலந்து பேசி சேவையில் உருவாகும் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்; அவ்வாறு பிரச்சனைகள் உருவாகும் போது அந்த பிரச்சனைகளை ஊழியர்களின் கவனத்திற்கும் இது பொது சுகாதாரத்தில் எழும் பிரச்சனையாக இருப்பதால் பொது மக்களின் கவனத்திற்கும் கொண்டு வருவதற்கு இந்த சேவையில் செயல்படும் தொழிற்சங்கங்களுக்கு முழு உரிமை உண்டு ஆகிய எதையும் ஏற்றுக்கொள்ளாத கடைப்பிடிக்காத நிர்வாகமாகவே இது உள்ளது. இந்த சேவை அரசு மற்றும் தனியார் கூட்டு பங்கேற்பின் மூலம் நடைபெறக் கூடிய ஒன்றாக இருப்பதால் இதில் உருவாகும் சேவையை மற்றும் ஊழியர்களை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்து அரசாங்கத்திற்கு கடிதங்கள் அல்லது மனுக்கள் மூலம் தெரிவிக்கும் உரிமை இதில் செயல்படும் தொழிற்சங்கங்களுக்கு உண்டு என்ற அடிப்படை விஷயங்களைக்கூட இந்த நிர்வாகம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது. இந்த சேவையில் நிர்வாகத்தின் தவறான போக்குகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளால் ஏற்படும் கோளாறுகள் குறித்து கடிதங்கள் மூலம் கருத்துக்களை எடுத்துச் சென்றால் அது ஒழுங்கீனமான நடவடிக்கை என்று கருதுவதாக இந்த நிர்வாகம் உள்ளது. அதாவது சட்டபூர்வமாக நிர்வாகத்தை நடத்துவது என்பதன் அடிப்படையே ஏற்றுக்கொள்ள முடியாததாக இந்த ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் உள்ளது.

அந்த அடிப்படையில் சங்கத்தின் பொதுச் செயலாளருக்கு பல்வேறு குற்றச்சாட்டு குறிப்பாணைகளை இந்த நிர்வாகம் வழங்கியது அதனடிப்படையில் ஒரு அப்பட்டமான போலி விசாரணையையும் மேற்கொண்டது. இதுபோன்ற சட்டபூர்வமான தொழிற்சங்க நடவடிக்கைகளை தடுப்பதற்கு எந்த சட்டபூர்வ வாய்ப்பும் நிர்வாகத்திற்கு இல்லாததால் இது போன்ற நடவடிக்கைகள் குற்றங்கள் அல்லது ஒழுங்கீனங்கள் என்று காட்ட முடிந்தவையாக எந்த நிலையாணை விதிகளையும் உருவாக்க முடியாது என்பதால் நிலையாண விதிகளின் அடிப்படையில் தான் ஊழியர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற முறையையே கருத்தில் கொள்ளாமல் தன்னிச்சையாக தான் சேவை விதிகள் என்று சில விதிகளை வைத்திருப்பதாகவும் அவற்றின் அடிப்படையில் தான் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற வகையிலான சட்ட விரோத நடைமுறையை இந்த நிர்வாகம் தொடர்ச்சியாக பின்பற்றிக் கொண்டு வருகிறது.

### சங்கப்பலகை ஆகிவிட்ட சேவை விதிகள்

அதாவது அந்த சேவை விதிகள் எத்தகையவையாக இருக்குமென்றால் யார் யார் மீதெல்லாம் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க விரும்புகிறதோ அவர்கள் செய்தவற்றை எல்லாம் அவை தற்போது அமலில் உள்ள நடைமுறையில் சட்டபூர்வமானவைகளாக இருந்தாலும் கூட அவற்றை சட்டவிரோதமானவை என்று அறிவிக்கக் கூடிய விதத்தில் நிர்வாகத்திற்கு முற்றிலும் சாதகமாக இருக்கும் வகையில் ஒரு சேவை விதியை உருவாக்கி அதன்மூலம் நடவடிக்கை எடுக்கலாம் என்ற வகையிலான சேவை விதிகள் என்ற பெயரிலான ஒரு

*மோசடிதனத்தைதான் இந்த நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த விஷயங்களில் அமுலாக்கி வருகிறது. இதில் வினோதம் என்னவென்றால் அந்த சேவை விதிகள் தான் என்ன என்று தொழிலாளர் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோ அல்லது தொழிற்சங்கமோ அதனை கேட்டால் ஒருபோதும் இவைதான் எங்களது சேவை விதிகள் என்று இந்த நிர்வாகம் கொடுத்ததே இல்லை. அதற்கான காரணம் இவைதான் சேவை விதிகள் என்று இந்த நிர்வாகம் ஒன்றை கொடுத்து விட்டால் பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிர வேறு விஷயங்களின் அடிப்படையில் தொழிலாளர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது; அவ்வாறு அத்துமீறி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் சங்கப்பலகை போல் நிர்வாகத்தின் விருப்பத்திற்கு உகந்த விதத்தில் அதிகரித்துக் கொண்டே போகும் சேவை விதிகளை இந்த நிர்வாகம் கடைப்பிடித்து வருகிறது; இந்தச் சூழ்நிலையில் இந்தப் சட்டவிரோத போக்கை எதிர்த்து தொழிலாளர் துறையிடம் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் ஒரு தொழிற்தாவாவினை எழுப்பி அது தற்போது நிலுவையில் இருந்து கொண்டு இருக்கிறது. இவ்வாறு பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்ற அடிப்படையிலான விதிகளையும் மரபுகளையும் நியதிகளையும் தன்னிச்சையாக உருவாக்கி தான்தோன்றித்தனமாக அமலாக்கி வந்த ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தை தமிழகத்தின் முன்பிருந்த சுகாதாரத்துறை ஏற்கனவே பார்த்தது போல் சரியாக கணித்து வைத்திருந்தது. அதனால் ஓரளவிற்கு அதன் தொழிலாளர் விரோத கோர தாண்டவத்தை 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தால் கட்டுப்படுத்த முடிந்தது. தற்போது தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் அதனை தனக்கு சாதகமாக அப்பட்டமாக மாற்றுவதற்கான ஒரு வேலையை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் தற்போது மேற்கொண்டு வருகிறது.*

**பயனாளிகளுக்கு பலனளிக்கும் சங்க நடவடிக்கைகள்**

*108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் அதனுடைய இந்த குறுகியகால வரலாற்றில் உறுப்பினர்களுக்கும் சேவையின் பயனாளிகளுக்கும் பயனளிக்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து களப்பணியாளர்களின் வருடாந்திர ஊதிய உயர்வு அப்ரைசல் முறையை கைவிட செய்தது தீபாவளி சமயத்தில் அதற்குப் பதிலாக ஒரு தொகையை தொழிலாளர்களுக்கு பெற்றுத்தந்தது பிழைப்பூதியம் பெற்றுத்தந்தது போன்ற பல்வேறு சாதனைகளையும் சேவையில் பயனாளிகளை பொறுத்தவரையில் பல இடங்களுக்கு ஆம்புலன்ஸ் சேவையை விரிவாக்கி தந்தது. தன்னால் முடிந்த அளவிற்கு பயனாளிகளுக்கு பண ரீதியாகவோ மன ரீதியாகவோ மன உளைச்சல் ஏற்படுத்தும் வகையில் களப்பணியாளர்கள் செயல்படாமல் தடுப்பது இந்த சேவை தமிழ்நாட்டில் மட்டுமே அது எந்த நோக்கத்திற்காக தொடங்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் செயல்படச் செய்தது ஆகிய விஷயங்களை அது செய்துள்ளது என்பதை முந்தைய பகுதிகளில் பார்த்தோம். இவ்வாறு சங்கத்தை மாமேதை மார்க்ஸ் கனவு கண்ட விதத்தில் கம்யூனிச பாடசாலையாக நடத்தும் போக்கில் பல நல்ல தலைவர்களையும் சங்கம் உருவாக்கியுள்ளது. ஒரு நல்ல தொழிற்சங்கத்தின் தலைமை என்பது மேலிருந்து திணிக்கப்படுவது அல்ல மாறாக தொழிற்சங்கத்தில் இருந்தே உருவாகக் கூடியதாகும். தொடர்ச்சியாக சங்கப் பணிகளில் அர்ப்பணிப்போடும் ஈடுபாட்டோடும் செயல்பட்டு வந்தால் அவ்வாறு செயல்படுபவர்களில் முதன்மை தன்மை பொருந்தியவராக இருக்கக்கூடியவர் சங்கத்தின் தலைவராக அவராகவே உருவாவார். அப்படி உருவாகக்கூடியவருக்கான அங்கீகாரத்தை சங்கம் வழங்கும் இந்த விஷயத்தில் சங்கம் கடைப்பிடிக்கும் சரியான அணுகுமுறை சரியான இடத்திற்கு சரியான நபர் என்ற அடிப்படையிலானதாகும். அந்த விதத்தில் 108 ஆம்புலன்ஸ் தொழிற்சங்கத்தை பொறுத்தவரையில் பல தலைவர்களை அதாவது சட்டரீதியாக சேவையில் பணி புரியும் களப்பணியாளர்களின் வழக்குகளை நடத்தக்கூடிய அளவிற்கு உருவாக்கித் தந்துள்ளது. தங்கள் சங்கத்தில் வழக்குகளை வழக்கறிஞர் வைக்காமலேயே வாதிடும் பல கீழ்மட்ட ஊழியர்களை சங்கம் உருவாக்கியுள்ளது. தாங்களே வாதம் நடத்தும் தனித்தன்மை பெற்ற பலரை கொண்டதாக 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் உள்ளது. சங்கத்தை பொருத்தவரையில் அதன் மற்றொரு தலையாய கண்ணோட்டம் ஒரு உழைக்கும் வர்க்கம் அமைப்பில் தலைமை*

இணைத் தலைவர்களை கொண்டதாக இருப்பதில்லை. மாறாக தலைவர்களின் தலைவர் என்ற கண்ணோட்டத்தை கொண்டதாகவே இருக்கும் அத்தகைய ஒருவரை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தலைவராக உருவாக்க முடிந்ததாகவும் சங்கம் இருந்தது. அந்த அடிப்படையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தை பொருத்தவரையில் அதன் தன்னிகரற்ற தலைவராக தோழர் இரா. இராஜேந்திரன் உருவானார்

**அர்ப்பணிப்பு மிக்கவராக உருவான பொதுச்செயலாளர்**

எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வோடும் ஈடுபாட்டோடும் தொழிலாளி வர்க்கத்தின் மீது மாறாத அன்போடும் பாசத்தோடும் செயல்படக் கூடியவர் யார் என்று 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் யாரைக் கேட்டாலும் அவர் தோழர் ராஜேந்திரன் தான் என்பதை அனைவரும் கூறுவர் தன்னுடைய சொந்த வேலைகளுக்கு ஒரு போதும் முக்கியத்துவம் கொடுக்காமல் சங்க பணிகளுக்கே அதீத முக்கியத்துவம் தரும் ஒரு அபாரமான மனநிலை அவரிடம் மிகவும் இயல்பாகவே அமைந்திருந்தது 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் மட்டுமின்றி சுகாதாரத்துறையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த தொழிற்சங்கங்கள் உருவாவது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத் தேவை என்ற அடிப்படையில் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் சங்கம் அமைத்து; அவ்வாறு உருவாக்கப்பட்ட சங்கங்கள் செவ்வனே செயல்பட வழிகாட்டுதல்களும் வழங்கி அதை சீரும் சிறப்புடன் திகழ முக்கிய காரணமாக இருப்பார் ராஜேந்திரன்; இன்று எந்த இடத்தில் இருப்பார் என்று எந்திர கதியில் யாரும் சொல்லிவிட முடியாது எங்கெல்லாம் தொழிலாளர்களுக்கு பிரச்சனைகள் உள்ளதோ அங்கெல்லாம் அவர் இருப்பார் என்று மட்டும் கூற முடியும் என்னுமளவிற்கு பல்வேறு வகைப்பட்ட தொழிலாளர்களின் பிரச்சனைகள் மனநிலைகள் ஆகிய அனைத்தையும் புரிந்துகொண்டு அவர்களுக்கு ஏற்ற விதத்தில் உரையாடி அவர்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அரும் பாடுபடுவார்; நிர்வாகம் எந்த நடவடிக்கை மேற்கொண்டாலும் அதில் உள் பொதிந்துள்ள கெட்ட நோக்கத்தை உடனடியாக புரிந்து கொள்ளும் போக்கும் புத்திக்கூர்மையும் அவருக்கு உண்டு; 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தில் அவர் ஆற்றிய பணி மிகப்பெரும் எண்ணிக்கையில் பலரை சிறந்த தொழிற்சங்க வாதிகளாக ஆக்கியது; தொழிலாளர் மத்தியில் இருந்தே தொழிற் சங்கங்களுக்கு தலைவர்கள் உருவாவது பல தொழிற்சங்கங்களை பொறுத்தவரையில் இப்போதும் கூட பகற்கனவாகவே இருக்கிறது. ஆனால் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தை பொறுத்தவரையில் அது கனவல்ல; அது வர்க்க அடிப்படையில் செயல்படக்கூடிய தொழிற்சங்கத்தின் நடைமுறை. அந்த வகையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் அதன் மிக உயர்ந்த தலைவரை அதுவே உருவாக்கியது; அவர் தான் தோழர் இரா. இராஜேந்திரன்.

**தகுதிகளும் திறமைகளும் தலைவர்களுக்கு தானாகவே வந்தவை அல்ல**

தனிமனித தலைவர்களுக்கான தகுதியும் திறமையும் அவர்களோடு ஒட்டிப் பிறந்து வருவதல்ல. மாறாக அவர்கள் சுயநலம் இல்லாமல் அப்பழுக்கற்ற விதத்தில் நிலவும் யதார்த்த சூழ்நிலையை சரியாகப் புரிந்து கொண்டு சுற்று சூழல்களில் உள்ள எதிர்மறை தன்மைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படுவதன் மூலமே அவர்கள் மிகச்சரியான தலைவர்களாக உருவாகின்றனர். அதற்கு பொருத்தமான எடுத்துக்காட்டு தோழர் ராஜேந்திரன் ஆவார். ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தை பொருத்தவரையில் அதன் ஊனக் கண்களுக்கு தெரிந்தது எல்லாம் தோழர் ராஜேந்திரனை வேலையை விட்டு நிறுத்திவிட்டால் அதன்பின் சங்கம் கவிழ்ந்து படுத்து விடும் என்ற தப்புக் கணக்குத்தான். 108 ஆம்புலன்ஸ் சேவையை தமிழகத்தில் நடத்தும் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்திற்கு ராஜேந்திரன் தான் சங்கம் என்பது போன்ற புரிதல் இருந்தது. அவர் எப்போது சங்கத்தின் தலைமை பொறுப்பிற்கு வந்தாரோ அப்போதிலிருந்தே அவரை எப்படி பணி நீக்கம் செய்வது என்பது குறித்து நிர்வாகம் கங்கணம் கட்டிக்கொண்டு இருந்தது. ஆனால் கடந்த ஆட்சியின் போது ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் மக்களிடையே கட்சிக்கும் ஆட்சிக்கும் கெட்ட பெயர் வந்து விடக்கூடாது என்பதை மனதில்

*நிறுத்தி செயல்பட்டார்கள். செல்வி ஜெயலலிதா அவர்கள் சேவை செவ்வனே நடைபெற வேண்டும்; அதுகுறித்து மக்களிடமிருந்து புகார் எதுவும் வந்துவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். அவர் மறைவிற்குப் பின் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தவர்களும் ஏறக்குறைய அத்தகைய மனநிலையுடனேயே செயல்பட்டனர். அதற்கான காரணம் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அ.இ.அ.தி.மு.க ஆட்சி அதிகாரத்திற்கு வந்து ஒரு ஆண்டு மட்டுமே நிறைவுற்ற நிலையில் அவர் இயற்கை எய்தினார்*

**சுகாதாரத் துறைக்கு இருந்த அபிமானம்**

*மீதமுள்ள நான்கு ஆண்டுகளையும் அவர் ஆட்சி நடத்திய வழியில் முடிந்த அளவிற்கு நடத்தி ஆட்சியையும் கட்சியையும் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் நடந்ததோ என்னவோ அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆட்சியும் அரசு நடத்தும் எந்த சேவை குறித்தும் மக்களிடமிருந்து முணுமுணுப்பு வந்துவிடக்கூடாது என்பதில் அக்கறையுடன் இருந்தது. அதன் காரணமாக பயனாளிகளோடு பின்னிப்பிணைந்த வகையிலான ஒரு உறவினை பராமரித்து செயல்பட்டு வந்த 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் மீது தமிழக சுகாதாரத் துறைக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அது தற்செயலாக ஏற்பட்டது அல்ல. 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் வெறுமனே பொருளாதார கோரிக்கைகளுக்காக கொடி பிடித்து கோஷம் போடும் ஒரு சங்கமாக மட்டும் இருக்கவில்லை; தமிழகத்தில் புயல் மழை பாதித்த போது அந்த சங்கம் நாகப்பட்டினம், கடலூர் போன்ற பகுதிகளில் ஏராளமான நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. மாநிலம் முழுவதுமே அந்ததருணத்தில் தொற்று நோய்களின் பாதிப்பில் இருந்தது. அந்நோய்கள் எவையும் பரவாமல் அவற்றின் பாதிப்பிற்கு மக்கள் ஆட்படாமல் இருக்க வேண்டுமானால் அதற்கு மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து சங்கத்தின் சார்பாக துண்டுப்பிரசுரங்கள் தயாரித்து அவற்றைப் பத்தாயிரக் கணக்கில் அச்சடித்து 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் மக்களிடையே விநியோகம் செய்தது.*

**தீப்பிடித்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம்**

*பெரு நோய்த்தொற்று காலகட்டத்தில் தமிழக சுகாதாரத் துறைக்கு மேலே விவரித்த விதத்தில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி நோய்த்தொற்றை கட்டுப்படுத்த உதவியதோடு தீப்பிடித்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்ற அடிப்படையில் செயல்படத் தொடங்கிய புல்லுருவிகளை அம்பலப்படுத்தி, அவைகளால் சேவைக்கு பங்கமும் பாதிப்பும் வராமல் தடுப்பது; பெரு நோய்த்தொற்றின் இரண்டாவது அலையின் போது பலருக்கு தடுப்பூசிகள் போடுவதற்கான முகாம்களையும் ஏற்பாடு செய்து எண்ணிறந்த மக்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு உரிய விதத்தில் உதவியது. அது தவிர இரண்டாவது அலையின் போது பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் ஏராளமாக இருந்த சூழ்நிலையில் அதற்கான காரணங்கள் என்ன என்பது குறித்து சுகாதார துறையின் செயலருக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதி அதனடிப்படையில் சுகாதாரத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்தது ஆகிய பணிகளை தொழிற்சங்கம் ஆற்றியது.*

**மினி கிளினிக் கருத்தோட்டம் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட ஒன்று**

*பெரு நோய்த்தொற்றின் முதல் அலையின் போதே துண்டுப்பிரசுரம் ஒன்றினை 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் வெளியிட்டது; அதில் ஊரடங்கு நோய்த்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மிகச் சரியான நடவடிக்கை என்று ஊரடங்குப் பிறப்பித்ததைக் கூற முடியாது. ஏனெனில் ஊரடங்கினால் பல ஏழை எளிய மக்களின் உழைப்பாளர் வாழ்வாதாரங்கள் கேள்விக்குறி ஆகிவிட்டன. அதனால் ஊரடங்கைத் தளர்த்தி அவர்கள் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடித்து பணிகளுக்கு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்; அதே சமயத்தில் அவர்கள் பணி புரியும் தொழிற்சாலைகளுக்கு அருகாமையில் ஒரு அரசாங்கத்தின் ஆதார சுகாதார நிலையத்தைத் தற்காலிகமாக ஏற்பாடு செய்யலாம்; நோய்த் தொற்றின் பாதிப்பு ஏற்பட்டுள்ள தொழிலாளரை உடனடியாக இந்த சுகாதார நிலையங்களுக்கு கொண்டு சென்று வைத்தியம் செய்யலாம் என்ற ஆலோசனையையும் கூறியிருந்தது. உண்மையிலேயே கடந்த அரசாங்கம் கொண்டுவந்த மினி கிளினிக் என்ற ஏற்பாடு இந்த ஆலோசனையின்*

அடிப்படையில்தான் செய்யப்பட்டது என்றே கூற வேண்டும். அதைப்போல் பொது சுகாதாரத் துறையில் பணியாற்றுவோர் உறுதிமொழி ஏற்கும் ஏற்பாடும் கடந்த அரசாங்கத்தால் பல துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் கடைப்பிடிக்கப்பட்டது. அது 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் அதன் நிகழ்ச்சிகளில் உறுதிமொழி ஏற்பதை வழக்கமாக கொண்டிருந்த பின்னணியில் நடந்ததேயாகும். இதுபோல் பொறுப்புணர்வுடன் சங்கம் செயல்பட்டதால் அதன்மீது தமிழக சுகாதாரத் துறைக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் எப்போதுமே இருந்தது. அதனால் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் சேவை குறித்தும் அதில் உள்ள பிரச்சனைகள் குறித்தும் இட்டுக்கட்டியும் கூட்டிக்குறைத்தும் கூறிய பல கட்டுக்கதைகளை சங்கத்தின் சேவை குறித்த கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறிந்து கொண்டு இந்தப் புரிதலின் அடிப்படையில் நிர்வாகத்தை சரியான விதத்தில் முறையாக நடத்துமாறு செய்தது. பல இடங்களில் ஆம்புலன்ஸ் வாகனங்களை இயக்காமல் நிறுத்தி வைத்து அதன்மூலம் எரிபொருள் செலவையும் அவற்றில் வேலை செய்யும் களப் பணியாளர்களின் ஊதியத்தையும் மிச்சம் பிடித்து லாபமாக ஈட்டும் வேலைகளை நிர்வாகம் செய்து வந்தது. 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் இதனை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் பல இடங்களில் சோதனைகள் தமிழக சுகாதாரத் துறையால் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய சோதனைகளில் நிர்வாகம் பல்வேறு ஆம்புலன்ஸ் வாகனங்களை இயக்காமல் நிறுத்தி வைத்திருந்தது உண்மை என்பது தெரியவந்தது. இதுபோல் சேவை உரிய முறையில் நடைபெற பல விதங்களில் சங்கம் உதவியதால் அதனை அடிப்படையாகக் கொண்டு சங்கத்தின் மீது தமிழக சுகாதாரத் துறைக்கு ஏற்பட்ட அபிப்பிராயமாகவே அது 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் மீது வைத்திருந்த அபிப்பிராயம் இருந்தது.

### கூட்டு முடிவுகள் சார்ந்த நடவடிக்கைகளே

இந்த அனைத்து நடவடிக்கைகளும் சங்க உறுப்பினர்களின் கூட்டங்களில் பேசி முடிவெடுக்கப்பட்டு அந்த முடிவுகளின் அடிப்படையில் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகும். ஆனால் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இந்த நடவடிக்கைகள் எல்லாம் சங்கத்தின் பொதுச் செயலாளரான ராஜேந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டவை என்றே எண்ணியது. அதனால் எப்பாடு பட்டும் அவரை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று துடியாய் துடித்தது. இலைமறை காயாக தமிழக சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் அதன் நோக்கத்தை கூறவும் செய்தது. ஆனால் அன்றைய ஆட்சியில் இருந்த அதிகாரிகள் அதற்கு செவிசாய்க்கவில்லை. இந்த இடத்தில் இன்னொரு விஷயத்தையும் நாம் பார்க்கத் தவறக்கூடாது; பொதுவாக ஒரு அரசு எந்திரத்தின் பங்கும் பகுதியாக செயல்படக்கூடிய அதிகார வர்க்கம் ஒரு எந்திரத்தில் உள்ள உபகரணங்கள் போலவே எந்திர கதியில் செயல்படக் கூடியதாகவே இருக்கும். ஆனால் அதற்கு விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை; அவ்வாறு விதிவிலக்குகளாக இருக்கக்கூடிய ஒரு சிலரும் அவர்கள் தங்களின் தனிப்பட்ட இயல்புகளால் அவ்வாறு இருந்தனர் என்றால் நாளடைவில் ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தின் எந்திர கதியிலான செயல்பாடுகளுடன் ஒத்துப் போகக் கூடியவர்களாக அவர்களும் ஆகிவிடுவர். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அரசு இயந்திரத்தின் அதிகாரிகளாக இருந்த ஒரு சிலர் உள்ளபடியே மக்களின் தேவைகளை கணக்கில் கொண்டு செயல்படக் கூடியவர்களாக இருந்தனர். அப்படிப்பட்ட நிலை தமிழகத்தில் தோன்றியதற்கும் ஒரு சில துறைகளில் நின்று நிலவியதற்கும் காரணங்கள் இருக்கவே செய்தன

### எம்.ஜி.ஆர் கடைப்பிடித்த நிர்வாக நடைமுறை

மறைந்த முன்னாள் முதல்வரும் தமிழகம் உருவாக்கிய தலைசிறந்த மனிதாபிமானியும் மக்களின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் அரசு நிர்வாகத்தை நடத்துவதற்கு கடைப்பிடித்த நடைமுறை அதற்கு முன்பு இருந்த முதலமைச்சர்கள் கடைப்பிடித்த நடைமுறைகளில் இருந்து பெரிதும் வேறுபட்டதாக இருந்தது. எம்.ஜி.ஆர் அவர்களின் நிர்வாகத்தில் கட்சிக்காரர்களின் தலையீடு முற்றிலும் இல்லாத ஒரு நிலை தொடர்ச்சியாக பராமரிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர் அவர்களைப் பொறுத்தவரையில் சரியான துறைகளுக்கு அப்பழுக்கற்ற சரியான அதிகாரிகளை நியமித்து அவர்கள் பொறுப்பில் அந்த துறைகளை விட்டு விட்டு அந்தத் துறைகளின்

செயல்பாடுகள் குறித்து புகார்கள் எவையேனும் வந்தால் மட்டும் அதில் தலையிடும் ஒரு நடைமுறையை கடைப்பிடித்தார். அந்த நடைமுறை அவர் தலைமையில் அ.இ.அ.தி.மு.க ஆட்சி நடைபெற்ற காலம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. அவ்வாறு பல பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மக்களிடமிருந்து புகார்கள் எதுவும் தாங்கள் நிர்வகிக்கும் துறைகளிலிருந்து அரசாங்கத்திற்கு வராமல் பார்த்துக்கொள்வதில் மிகவும் சிரத்தையும் சிரமமும் எடுத்து செயல்பட்டனர். அதாவது ஆட்சியாளர்கள் தங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக தாங்கள் இருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணினர். இந்தப் பின்னணியில் தமிழகத்தில் பொது சுகாதாரத் துறை குறிப்பாக அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் மிகவும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டது. பொது சுகாதாரத்திற்கான ஒதுக்கீடுகள் மிக அதிக அளவில் அதிகரிக்க படவில்லை என்றாலும் ஒதுக்கும் தொகை முறையாக செலவிடப்படுகின்றனவா என்று கண்காணிக்கும் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக பொது சுகாதாரத் துறையில் அதிகாரிகள் அவரது ஆட்சிக் காலத்தில் இருந்தனர். அதன் காரணமாகத்தான் பொது சுகாதாரம் தமிழகம் இந்தியாவின் பிற பல மாநிலங்களை காட்டிலும் தலைசிறந்து விளங்கியது. 108 ஆம்புலன்ஸ் சேவையும் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிகவும் நல்ல முறையில் செயல்படுகிறது என்று பெயர் எடுத்துள்ளது. அதற்கான ஒரு முக்கிய காரணம் இத்துறையை கடந்த ஆட்சிக்காலத்தில் நிர்வாகம் செய்த சுகாதாரத்துறை அதிகாரிகள் ஆவர்.

## தப்புக்கணக்கு

இந்த அணுகுமுறை புதிதாக ஏற்பட்டுள்ள ஆட்சியில் நீடிக்காது என்பதை புரிந்து கொண்டே ஜி,வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் தோழர் ராஜேந்திரனை பணிநீக்கம் செய்தால் மீண்டும் தான் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் உருவாவதற்கு முன்பு எந்த வகையான நிர்வாகத்தை நடத்தி களப்பணியாளர்களின் வருடாந்திர ஊதிய உயர்வை கொள்ளையடித்து கோடி கோடியாய் சம்பாதித்ததோ அந்த,நிலையினை மீண்டும் கொண்டுவந்துவிடலாம் என்ற அடிப்படையில் சட்டங்கள், நியதிகள் என்ற எதையும் கடைப்பிடிக்காமல் அவசர அவசரமாக அவரது வேலை நீக்க உத்தரவை வழங்கியுள்ளது. இதனையொட்டி உடனடியாக பெரும் கூக்குரலும் கொந்தளிப்பும் உருவாகும்; நிதானம் இழந்து 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் நிர்வாகத்திற்கு எதிராக களமிறங்கி எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செயல்படுவர் என்று ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் எண்ணியது. அதாவது தப்புக் கணக்குப் போட்டது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் வேலை நீக்க உத்தரவினை வழங்கிய மறுகணமே அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட்டால் அதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது அவசியம் என்று மாவட்ட மண்டல மேலாளர்களுக்கு அறிவுறுத்தியது. பொதுவாக முதலாளித்துவ நிர்வாகங்களை பொறுத்தவரையில் அவை தனிநபர் தலைமைகளின் கீழ் நடைபெற கூடியவை ஆகும். முதலாளித்துவ சமூக அமைப்பே தனிநபர்களுக்கு மிதமிஞ்சிய முக்கியத்துவம் தரும் போக்குடன் தான் அதனுடைய வாழ்நாளை தொடங்கியது.

## தனிமனித வாதம் முதலாளித்துவ சமூக அமைப்பால் உருவானது

ஏனெனில் முதலாளித்துவ சமூக அமைப்பிற்கு முன்பிருந்த நிலவுடைமை பொருளாதார அமைப்பில் அந்த அமைப்பிற்கு உள்ளேயே இருந்து உருவான முதலாளி வர்க்கம் ஆரம்பத்திலேயே வலிமைமிக்க ஒரு வர்க்கமாக வெளிப்பட்டு விடவில்லை. ஏனெனில் அந்த அமைப்பில் முதலாளிகளாக ஆனவர்கள் அடிப்படையில் அடிமைகளை ஒத்த வாழ்க்கை நடத்தியவர்கள் ஆவர். அதே சமயத்தில் சிறு தொழில்கள் பட்டறைகள் போன்றவற்றை நடத்தியவர்களும் அத்தகையவர்களாகவே அந்தக் காலத்தில் இருந்தனர். அவர்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் பொருட்களை குறைந்த செலவில் உற்பத்தி செய்து உலகம் முழுவதும் அவற்றை விற்பனை செய்து செல்வ செழிப்பு மிக்கவர்களாக ஆன சூழ்நிலையில் அவர்களிடம் செல்வச்செழிப்பு இருந்தாலும் சமூக அங்கீகாரம் மட்டும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஏனெனில் நிலவுடமை காலத்தில் கோலோச்சிய சமூக கண்ணோட்டம் சமூகத்தில் இயற்கையாகவேஅதாவது பிறப்பாலேயே சாதாரண மக்களைக் காட்டிலும் மேலானவர்கள் என்று சிலர் இருக்கின்றனர். அவர்களை மதிப்புடனும் மரியாதையுடனும்

நடத்துவது கீழ்த்தட்டு மக்களின் தலையாய கடமையாகும் என்பதாகும். அப்படிப்பட்ட இயற்கையிலேயே உயர்ந்தவர்கள் என்று அந்த சமூகத்தில் யார் கருதப்பட்டனர் என்றால் நிலப்பிரபுக்கள் அவர்கள் அனைவருக்கும் தலைமை ஏற்று ஆட்சி அதிகாரத்தை நடத்திய குறுநில மன்னர்கள் மற்றும் மன்னர்கள் ஆகியோரே அவ்வாறு இயற்கையிலேயே மேலானவர்கள் என்று கருதப்பட்டனர்.

**அங்கீகாரம்**

ஆனால் முதலாளித்துவ தொழில் உற்பத்தி முறை ஓங்கி வளர்ந்து அந்த உற்பத்தி முறையில் நீராவியைப் பயன்படுத்துதல், ரசாயன பொருட்களை உபயோகித்தல் போன்றவை அதிகரித்து உற்பத்தி கண்மண் தெரியாமல் வளர்ச்சியடைந்த நிலையில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த இயற்கையிலேயே உயர்ந்தவர்கள் என்று கருதப்பட்ட நிலப்பிரபுக்கள் வளர்ந்து வந்த முதலாளிகளோடு ஒப்பிடும்போது ஒன்றும் இல்லாதவர்கள் போல் ஆகிவிட்டனர். அந்த நிலையிலும் சமூக கண்ணோட்டம் இயற்கையிலேயே உயர்ந்தவர்கள் என்ற நிலையிலிருந்து மாறவில்லை. தங்களுக்கு தங்களிடம் இருந்த செல்வச் செழிப்பை வைத்து அதீத முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்தை புதுப் பணக்காரர்கள் ஆன முதலாளிகள் அவர்களது சிந்திக்கும் பிரதிநிதிகளைக் கொண்டு சமூகத்தில் வளர ஏற்பாடுகளைச் செய்தனர். அவ்வாறு உருவான தனிமனித வாதம் இன்று முதலாளித்துவ சமூக அமைப்பின் அனைத்துத் துறைகளிலும் அனைத்து மட்டங்களிலும் கோலோச்ச கூடிய முதன்மை கண்ணோட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த கண்ணோட்டத்தின் அடிப்படையில் ராஜேந்திரன் என்ற ஒருவர் மீது நடவடிக்கை எடுத்தால் சங்கமே சீர்குலைந்து சிதறுண்டு போகுமென்று ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் நினைத்தது; மனப்பால் குடித்தது.

**கூட்டு வாதத்தின் நாற்றங்கால் தான் தொழிற்சங்கம்**

முதலாளித்துவத்தின் கண்ணோட்டம் இத்தகையதாக இருக்கையில் தொழிலாளி வர்க்கத்தின் கண்ணோட்டம் இதற்கு நேர் எதிரிடையானதாக இருந்தது. தொழிலாளி வர்க்க அமைப்புகளை குறிப்பாக தொழிற்சங்கங்களை வழிநடத்தும் கண்ணோட்டம் கூட்டுவாத கண்ணோட்டமாகும். அதாவது தனிமனிதவாதக் கண்ணோட்டம் தனிச்சொத்து மனநிலையை அடிப்படையாகக் கொண்டதாகும்; உழைக்கும் வர்க்கம் அடிப்படையில் இழப்பதற்கு என்று எதுவும் இல்லாத வர்க்கம். அதனால் தனி சொத்தை அடிப்படையாகக் கொண்டு வளரும் தன்மையுள்ள தனிமனித வாதக் கண்ணோட்டத்திற்கு உழைக்கும் வர்க்க அமைப்புகளில் இடமில்லை. இதன் பொருள் தொழிலாளர்கள் யாருமே தனிமனித கண்ணோட்டம் பொருந்தியவர்களாக இருக்க மாட்டார்கள் என்று கூறுவதல்ல. எந்த ஒரு சமூக அமைப்பிலும் ஆளும்வர்க்கத்தின் கருத்தோட்டங்களும் கண்ணோட்டங்களும் தான் அந்த சமூக அமைப்பினை ஆளும் கண்ணோட்டங்களாகவும் கருத்தோட்டங்களாகவும் இருக்கும். ஆனால் உழைக்கும் வர்க்கம் சமூகத்தில் இருக்கும் நிலை, அதன் சூழல் ஆகியவை தனிமனித கண்ணோட்டம் உழைக்கும் வர்க்கத்திற்கு ஏற்படுவதற்கான இயல்பான வாய்ப்புகளை அளிக்கும் கண்ணோட்டம் அல்ல. ஏனெனில் உழைக்கும் வர்க்கம் இழப்பதற்கு என்று எந்ததனி சொத்தும் இல்லாத வர்க்கம். ஆகவே அத்தகைய அடிப்படையில் உள்ள அதே சமயத்தில் தனிமனித வாதத்தையும், தன்னகங்காரத்தையும் கொண்ட பலர் உழைக்கும் வர்க்க அணிகளிலும் இருக்கவே செய்கின்றனர்.

அது தனிமனித வாதம் போன்ற கேடுகள் நிறைந்த முதலாளித்துவ சமூகத்தில் உழலும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு இருப்பதால் அவர்களிடம் ஒட்டிக் கொண்டுள்ள ஒன்றாகவே உள்ளது. முதலாளி வர்க்கத்தை பொறுத்த வரையில் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடையே போட்டியும் பொறாமையும் பூசல்களும் நிச்சயம் இருக்கும். அதற்கு காரணம் ஒரு முதலாளி நடத்தும் தொழில் லாபகரமானதாக இருந்தால் அந்தத் தொழிலை எப்படியும் தான் கைப்பற்ற வேண்டும் என்று மற்றொரு முதலாளி எண்ணுவார். அதனால் கூட இருந்தே குழிபறிக்கும் போக்கு முதலாளிகளுக்கு இடையில் மிகப்பரவலாக நிலவும். அதே சமயத்தில் உழைக்கும் வர்க்கத்தின் கைகள் எங்கெல்லாம் மேலோங்குகிறதோ அங்கெல்லாம் முதலாளிகள் தங்களுக்கு இடையில் உள்ள

வேறுபாடுகளை மறந்து எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் தங்களை உழைக்கம் வர்க்கத்திற்கெதிராக ஒருங்கிணைத்துக் கொள்வார்கள்.

**தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றை நோக்கம்**

ஆனால் உழைக்கும் வர்க்கத்தை பொறுத்த வரையில் அதனுடைய நோக்கமும் எண்ணமும் அது அதன் தோள்களில் சுமந்து கொண்டு இருக்கக்கூடிய முதலாளித்துவ சுரண்டல் என்ற நுகத்தடியை எப்படி தூக்கி எறிவது என்பதை அடிப்படையாகக் கொண்டதாகத் தான் இருக்கும். அதனால் அதன் நோக்கம் ஒன்றுதான். முதலாளித்துவ கூலி அடிமைத்தனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அதன் அவாவாகவும் வேட்கையாகவும் இந்த வர்க்கம் உயிருடன் இருக்கும்வரை இருக்கும். அதைச் செய்வதற்கு உழைப்பாளி மக்களின் ஒருங்கிணைப்பு அவசியம். அவ்வாறு ஒருங்கிணைந்து அவர்கள் இருந்தால் மட்டும் போதாது. அதையும் தாண்டி அவர்கள் அவர்களை அழுத்திக்கொண்டு உள்ள கூலி அடிமைத்தளையை தூக்கி எறிவதற்கு போராடியும் ஆகவேண்டும். அந்தப் பின்னணியில் அவர்களிடம் போராட்டத்தை அடிப்படையாக கொண்ட ஒரு ஒற்றுமை ஏற்படும். அந்த போராட்ட ஒற்றுமை கண்ணோட்டம் தான் தனிமனித வாத கேட்டினை உடைத்தெறிந்து கூட்டுவாதக் கலாச்சாரத்திற்கு அவர்களை கொண்டு செல்லும். அத்தகைய கூட்டுவாத கண்ணோட்டத்தை வளர்த்தெடுக்கும் நிறுவனமாக விளங்குவது உழைப்பாளி மக்களை ஒன்றிணைக்கும் தொழிற்சங்கங்கள் ஆகும்.

**போராட்ட ஒற்றுமை**

தொழிற்சங்கங்களை பொறுத்தவரையில் அதில் உழைப்பாளி மக்கள் எந்த வகையான தன்னல எண்ணத்தோடும் ஒருங்கிணைவது இல்லை. அவர்களது ஒருங்கிணைப்பிற்கு ஒரு குறிப்பிட்ட நோக்கமும் இலக்கும் இருக்கும். அதாவது முதலாளித்துவச் சுரண்டலின் தாக்குதல்களிலிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற வேட்கையும் எண்ணமும் தான் அவர்களை ஒன்று சேர்க்கிறது. அந்த நிலையில் தன்னலம் கருதாத பிறர்நலன் பேணும் உயர்ந்த நிலை தொழிலாளியிடையே உருவாகிறது. பிறர்நலனில் தன்னுடைய நலனும் பொதிந்திருக்கும் ஒரு சூழல் அங்கு உருவாகிறது. ஒரு சுரண்டல் வாதியின் கீழ் வேலை செய்வது இந்த வாய்ப்பினை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருகிறது. இந்த கூட்டுவாதக் கண்ணோட்டத்தை மையமாகக் கொண்டு உருவாவதுதான் தொழிற்சங்கங்களில் நிலவ வேண்டிய கூட்டுத் தலைமை. அதாவது தொழிற்சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அனைத்து ஜனநாயக உரிமைகளும் தங்கு தடையின்றி வழங்கப்பட வேண்டும்; முதலாளித்துவ சுரண்டல் வெப்பத்திலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்கு இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது குறித்து அனைவருக்கும் கருத்துக்கள் கூற உரிமை உண்டு; அவர்களது கருத்துக்களை வலியுறுத்த அவர்களுக்கு அனைத்து வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும்; அவ்வாறு அனைத்து உரிமைகளும் வழங்கப்படுவது தான் தொழிற்சங்க ஜனநாயகம். அத்தகைய வாய்ப்புகள் வழங்கப் படுவது; அந்த வாய்ப்புகளை பயன்படுத்தி கருத்து மோதல்கள் சங்கத்தின் கூட்டங்களில் ஏற்படுவது; அவ்வாறு ஏற்பட்டதற்கு பின்பு ஒரு ஒருமித்த முடிவு உருவாவது; அவ்வாறு எட்டப்பட அந்த முடிவு அனைவரையும் கட்டுப்படுத்தும் முடிவாக ஆவது; இவை அனைத்தும் சேர்ந்தே தொழிற்சங்க ஜனநாயகம் என்று அழைக்கவும் கருதவும் படுகிறது.

**ஜனநாயகமும் கட்டுப்பாடும்**

அதன் பின் அந்த முடிவில் சங்க உறுப்பினர்கள் எவருக்கும் மாற்றுக் கருத்து என்பது இருக்க முடியாது. இத்தகைய கட்டுப்பாட்டை பராமரிப்பது தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரையில் மிகவும் அவசியமாகும். ஏனெனில் தொழிற்சங்கங்களை நடத்துவது என்பது குழந்தை விளையாட்டு அல்ல. அவை பண பலம், படை பலம் அதிகாரவர்க்கத்தின் பின்பலம் ஆகிய அனைத்தையும் கொண்டிருக்கக்கூடிய முதலாளி வர்க்கத்தை எதிர்த்து களமிறங்கும் நடவடிக்கையாகும். அதாவது தொழிலாளரை முன்னணிப் படையினர் போல் தயாரிக்க வேண்டிய களமும் தளமும் ஆகும். அந்த நிலையில் இத்தகைய உழைக்கும் வர்க்க கண்ணோட்டத்தைத் தன்னுடைய சொந்த வாழ்க்கை கண்ணோட்டமாக பாவித்து அதில் மிதமிஞ்சிய அர்ப்பணிப்பு உணர்வோடும் ஈடுபாட்டோடும் செயல்படக்கூடியவர்கள் தலைவர்களாக உருவாவார்கள். அவர்கள் மட்டும்தான்

தலைவர்கள் என்பது அல்ல. இருக்கும் பிற தலைவர்கள் அனைவருக்கும் அவர்கள் தலைவர்களாக ஆவார்கள். அதன் பொருள் அத்தகைய முறைப்பாட்டில் உருவான ஒரு தலைவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு அந்த அடிப்படையில் செயல்பட முடியாத நிலைக்கு ஆளானார் என்றால் அடுத்து சங்கத்தை எடுத்து நடத்துவதற்கு யாருமே இல்லாமல் போய் விடுவர் என்பது அல்ல. அந்த நிலையில் அடுத்த கட்ட தலைவர்கள் அதனைச் செய்வதற்கு தயார் நிலையில் இருக்கவே செய்வர்.

**தொழிற்சங்கங்களை நடத்துவது என்பது குழந்தை விளையாட்டு அல்ல. அவை பண பலம், படை பலம் அதிகார வர்க்கத்தின் பின்பலம் ஆகிய அனைத்தையும் கொண்டிருக்கக்கூடிய முதலாளி வர்க்கத்தை எதிர்த்து களமிறங்கும் நடவடிக்கையாகும். அதாவது தொழிலாளரை முன்னணிப் படையினர் போல் தயாரிக்க வேண்டிய களமும் தளமும் ஆகும்.**

இந்த வகையிலும் முறையிலும் செயல்பட கூடியவைகளாக தொழிற்சங்கங்கள் என்ற பெயரில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பல தொழிற்சங்கங்கள் இல்லை என்பது உண்மைதான். அதே சமயத்தில்108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தை பொருத்தவரையில் அது வேறு மாதிரி என்பதும் உண்மைதான். அந்தச் சங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு ராஜேந்திரன் இத்தகைய தன்னிகரற்ற தலைவராக இந்த தொழிற்சங்கத்தில் உருவாகியிருக்கிறார் என்றால் அவர் அவ்வாறு உருவானது அவரைப் போன்றவர்களாக முடிந்த பலரோடு இணைந்து செயல்பட்டதால் நடை பெற்றது ஆகும். அவர் கடைப்பிடித்த வழிமுறையில் பயணித்து பாடம் பயின்று அனுபவங்கள் பல கண்ட பலரோடு அவர் கலந்து பழகி வாதிட்டு அவர்களது கருத்துக்களையும் உள்வாங்கி அவ்வாறு அவருக்குக் கிடைக்கப்பெற்ற அனைத்து கருத்துக்களின் சாராம்சத்தையும் ஒருங்கிணைத்து பொதுக்கருத்தை உருவாகி அவர் வளர்ந்ததன் மூலமே அவர் இப்போது இருக்கக்கூடிய விதத்தில் தன்னிகரற்ற தலைவராக ஆனார். இதற்கு மாறாக அவரது வளர்ச்சியினை ஒரு தனிமனித ரீதியான வளர்ச்சி என்று ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் எண்ணுவது உண்மையான தொழிற்சங்கத்தின் அடிப்படையை புரிந்துகொள்ள முடியாததாக அது உள்ளது என்பதையே கோடிட்டுக்காட்டுவதாக இருக்கிறது. இந்த நிலையில் ஒரு ராஜேந்திரனை வேலையை விட்டு நீக்குவதன் மூலம் சங்கத்தை முடக்கி விடலாம் என்று ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் நினைப்பது பகற்கனவு போன்றதாகும்.

**நிர்வாகம் நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால்**

நிர்வாகம் எதிர்பார்த்த விதத்தில் இல்லாமல் தொழிற்சங்கம் ராஜேந்திரனின் பணி நீக்கத்தை ஒருவகை பதற்றத்துடனும் நிதானம் இழந்தும் அணுக போவதில்லை; அது மிகத் தெளிவாக திட்டமிட்டு எந்த உள்நோக்கத்துடன் இதுபோன்ற நடவடிக்கைகள் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தை போன்ற கேடுகெட்ட நிர்வாகங்களால் எடுக்கப்படுகின்றன; அதனால் நேரப்போகும் சேவை பாதிப்புகள் எந்த வகையிலானவைகளாக இருக்கும் என்ற விஷயங்களை தமிழக மக்கள் அனைவரிடமும் பட்டி தொட்டிகள் தோறும் அனைத்து இடங்களிலும் கொண்டு சென்று அந்த நடவடிக்கைக்கு அவர்களது பொதுக்கருத்தை திரட்டி இது போன்ற எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத நடவடிக்கைகளை எதிர்க்கும். அத்துடன் இத்தகைய மக்கள் ஆதரவு மனநிலையோடு சங்கங்கள் செயல்படும் சூழ்நிலை நிலவாத பல மாநிலங்களில் 108 ஆம்புலன்ஸ் சேவையின் நிலை என்ன என்பதை வெளிக்கொண்டு வரும் அதே வேளையில் தமிழகத்தில் அது சீரும் சிறப்புடனும் இருப்பதற்கு யார் காரணம் என்பன போன்ற விசயங்களை தெளிவு படுத்தவும் சங்கம் உறுதி பூண்டுள்ளது. சேவை பராமரிப்பிற்கு காரணமானவர்கள் நியாய விரோதமாக தண்டிக்கப்பட்டால் அதன் விளைவாக எத்தகைய சேவை பாதிப்புகள் ஏற்படும் என்ற அனைத்தையும் இந்த சேவையின் பயனாளிகளிடம் தெருமுனைக் கூட்டங்கள் போட்டும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்தும்

*வாகனங்கள் ஊர்திகள் இவற்றின் மூலம் சென்று அனைத்து இடங்களிலும் இந்த கருத்தினை பரப்பியும் பொதுக் கருத்தை திரட்ட சங்கம் தீர்மானித்துள்ளது.*

*இத்தகைய ஒரு நிர்வாகத்திற்கு துணை போகக் கூடியதாக தமிழக அரசு இருக்குமேயானால் தமிழக அரசும் மக்கள் மன்றத்திற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படும் என்பதை வலியுறுத்தி நீண்ட நெடிய தயாரிப்புகளுடன் டெல்லி நகரின் வாயில்களில் நடைபெற்ற விவசாயிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு அந்த உணர்வை மனதில் சுமந்து இருக்கும் சூழ்நிலைகளுக்கு ஏற்ற விதத்தில் அதனை செயல்களாகவும் நடைமுறைகளாகவும் மாற்றிக் கங்கணம் கட்டி செயல்பட்டால் அந்த நிலையில் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்து விட்டதே என்று எண்ணி தலையைச் சொரிந்து கொள்ளும் நிலைக்கு ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தை நிச்சயமாக தள்ள முடியும் சூழ்நிலை உருவாகும். அந்த நிலைக்கு ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தை சங்கத்தால் நிச்சயம் கொண்டு வந்து நிறுத்த முடியும். அது வறட்டு தன்மை வாய்ந்த ஜம்பமாக முன்வைக்கப்படும் வெற்று முழக்கம் அல்ல. அது உழைக்கும் வர்க்க இயக்கங்களில் அனுபவங்களும் பாடங்களும் படிப்பினைகளும் கற்றுக் கொடுத்தவையாகும். சிலரது பலம் ஆளைப் பார்த்து மயங்காதே ஊதுகாமாலை என்பதை ஒத்ததாக தான் இருக்கும். ஆனால் உழைக்கும் வர்க்கத்தின் போராட்ட ஒற்றுமையை அடிப்படையாக கொண்ட வலிமை உருக்கினை ஒத்ததாக நிச்சயம் இருக்கும். இந்தப் பின்னணியில் தண்டனைக்குத் தப்பிய குற்றவாளியாக மக்கள் மன்றத்தில் நிற்கும் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் சட்டரீதியாகவும் இயற்கை நீதி அடிப்படையிலும் இழைத்துளை குற்றங்களை மக்கள் முன்பு ரத்தினச் சுருக்கமாக வைப்பது வைப்பது 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் அவசர அவசியமும் கடமையமாகும். அதை கண்கூடாக தெரிந்து கொண்டால்தான் தண்டிக்கப்பட்ட நிரபராதியான தோழர் ராஜேந்திரன் பக்கம் உள்ள நியாயத்தை 108 ஆம்புலன்ஸ் சேவையில் பயனாளிகளான பொதுமக்கள் உணர முடியும்.*

**நிர்வாகம் இழைத்த தண்டனைக்குத் தப்பிய குற்றங்கள்**

*108 ஆம்புலன்ஸ் சேவையில் ஓட்டுனராக பணியாற்றி பின்னர் வேறு வேலை கிடைத்து சென்றுவிட்ட ஒருவருக்கு அவர் வேலையில் இருப்பதாக பொய் ஆவணங்கள் சமர்ப்பித்து அரசிடமிருந்து சம்பளம் பெற்று அதை கையாடல் செய்தது. அத்தகைய குற்றத்தை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் இழைத்துள்ளதற்கு சான்று கூறுவதாக உள்ளது விஜிலன்ஸ் காவல்துறையில் இப்போதும் நிலுவையில் இருந்து கொண்டு இருக்கும் சங்கம் தொடுத்த வழக்காகும்.*

*ஆம்புலன்ஸ் வாகனங்களை சாலையோர பழுது பார்க்கும் இடங்களில் பழுது பார்த்து விட்டு தரமான சேவை மையங்களில் பழுது பார்த்ததாக பொய் ரசீது சமர்ப்பித்து அரசிடமிருந்து பராமரிப்பு செலவுக்கான பணத்தை வாங்கி கையாடல் செய்தது. அந்த அடிப்படையில் சிவகங்கையில் இ.எம்.இ பொறுப்பு வகித்த ஒருவர் சங்கம் அவர் மீது சுமத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் கையும் களவுமாக பிடிபட்டு பணிநீக்கம் செய்யப்பட்டது அத்தகைய குற்றத்திற்கு சான்று பகர்வதாக இருக்கக் கூடியது ஆகும். இதை ஒத்த ஒரு சம்பவம் கடலூர் மாவட்டத்திலும் நடந்துள்ள நிலை இது ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல; ஒரு தொடர் நிகழ்வு என்பதை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது.*

*18 சதவிகிதம் என்னும் அளவிற்கு களப் பணியாளர்களுக்கான ஊதியத்தை வருடாந்திர ஊதிய உயர்வுக்கு என அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டு பல ஆண்டுகள் பெரும்பான்மை களப் பணியாளர்களுக்கு 6 சதவிகிதத்தை மட்டும் ஊதிய உயர்வாக கொடுத்துவிட்டு 12 சதவிகிதத்தை கையாடல் செய்த குற்றம்.

*தொழில் தகராறு சட்டப்படி முறையான நீதிவிசாரணையை நிலையாணை விதிகளின்படி நடத்தாமல் நூற்றுக்கணக்கான களப்பணியாளர்களை வேலை நீக்கம் செய்துள்ள மனிதத் தன்மையற்ற குற்றம்.

*கரூர் மாவட்டத்தில் மேலதிகாரியை தாக்கினார்கள் என்று பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அந்த அடிப்படையில் சங்கத்தின் பொருளாளர் உள்பட பலரை வேலைநீக்கம் செய்தது. அதன் பின்னர் அது பொய் புகார் என்ற

அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை ரத்து செய்யப்பட்ட பின்னரும் சங்கத்தின் பொருளாளருக்கு மீண்டும் பணி வழங்காமல் அதன்மூலம் இழைத்துள்ள கொடும் குற்றம்.

* தொழில் தகராறு சட்டப்படி எட்டப்பட்ட ஒப்பந்தங்களின் சரத்துக்களின் படி நடப்பது சம்பந்தப்பட்ட நிர்வாகம் தொழிலாளர் ஆகிய இருவரின் கடமையாகும். இருந்தும் ஒப்பந்தத்தின் சரத்துக்களை மதித்து அந்த அடிப்படையில் இடமாற்றங்கள் செய்யாமல் தன்னிச்சையாக இடமாற்றங்கள் செய்யும் நிர்வாகத்தின் அப்பட்டமான சட்ட விரோதப் போக்கு.

* தொழிற்சாலை சட்டப்படி தொழிலாளர்களுக்கு செய்து தரப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான குடிநீர் கழிப்பறை வசதி பெண் களப் பணியாளர்களுக்கு உடை மாற்றும் வசதி போன்றவற்றை செய்து தராமல் ஒரு அநாகரிகமான பணிச் சூழலில் களப்பணியாளர்கள் வேலை செய்யும் நிலைக்கு அவர்களை தள்ளியுள்ளதன் மூலம் இழைத்துள்ள கொடும் குற்றம்.

* மனிதாபிமானமற்ற முறையில் கர்ப்பிணியாக உள்ள பெண் களப் பணியாளர்களை தொலை தூர இடங்களுக்கு ஒப்பந்தங்களை மீறியும் தன்னிச்சையாகவும் இடமாற்றம் செய்து அவர்களை வதைக்கும் ஈவிரக்கமற்ற கொடுமை.
* பேறுகால விடுப்பில் சென்று மீண்டும் பணிக்கு சேர்ந்த பெண் களப் பணியாளர்களுக்கு மிகக்குறைவாக வருடாந்திர ஊதிய உயர்வினை வழங்கும் சட்ட விரோத நடவடிக்கை.

* முறைகேடான தொழில் நடவடிக்கைகளில் இடைவிடாமல் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் நடந்து கொள்ளும் போக்கு. தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்க வேண்டும் என்ற அடிப்படையில் தொழிற்சங்க தலைவர்களை வேலை நீக்கம் செய்வது; குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்குவது போன்ற நடவடிக்கைகளில் இடைவிடாது ஈடுபடுவது.

* ஒரே துறையில் ஒரே வேலை சூழ்நிலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளரை இருவிதமாக அதாவது நிரந்தர தொழிலாளர், குறிப்பிட்ட காலம் மட்டும் வேலை செய்யும் தொழிலாளர் என்று பாரபட்சமாக நடத்தும் போக்கு.

* வாய் மொழி உத்தரவின் மூலம் இடமாற்றம் செய்வது, வேலை நீக்கம் செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது. எழுத்து மூலமான உத்தரவுகளை பாதிக்கப்பட்டோர் கேட்கும்போது அதனை வழங்காமல் அவர்களை இழுத்தடித்து அந்த வகையில் அவர்கள் வேலைக்கு அனுமதிக்கப்படாத காலகட்டத்தை வேலைக்கு வராத காலகட்டம் என கருதி அவர்களுக்கு சம்பள வெட்டு, குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்குவது போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

* பயிற்சி கொடுக்கிறோம் என்ற பெயரில் அதனை ஒரு கருவியாக பயன்படுத்தி தங்களது உரிமைகளை வலியுறுத்தும் களப்பணியாளரை சட்டவிரோதமாக பொய் கூறி வேலை நீக்கம் செய்யும் போக்கு.

* நிலையாணை விதிகள் இல்லாமல் தன்னிச்சையாக முறைகேடான விதங்களில் குற்றச்சாட்டுகள் சுமத்தி தான் விரும்புபவரை தனது பிரதிநிதியாக நியமித்து உள் விசாரணையில் கலந்துகொள்ள குற்றம் சுமத்தப்பட்டுள்ள களப்பணியாளரை அனுமதிக்காமல் கண்துடைப்பு விசாரணை நடத்தி அவற்றின் அடிப்படையில் களப்பணியாளர் பலரை வேலை நீக்கம் செய்யும் குற்றத் தன்மை வாய்ந்த நடைமுறை.

* சேவை பல பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு கிட்டாத விதத்தில் பல இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த ஆம்புலன்ஸ் வாகனங்களை அங்கிருந்து நகர்த்தி அவற்றின் இயக்கத்தை முடக்கி, அதே சமயத்தில் அவை இயக்கப்படுபவை என்ற வகையில் அரசிடம் பொய் கணக்கு காட்டி அந்த வாகனங்களில் பணி புரியும் களப்பணியாளர்கள் ஊதியத்தை அரசிடமிருந்து பெற்று அதனை கையாடல் செய்வது.

* ஒரு தொழில் தாவா நிலுவையில் இருக்கும்போது அந்தத் தாவாவின் வரையறைக்குள் வரக்கூடிய குற்றத்திற்காக வேலை நீக்கம் செய்யப்படுபவரின் வேலை நீக்கத்தை அனுமதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அதற்கென அரசால் நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் உதவி கமிஷனர் முன்னிலையில் 33 2 பி பிரிவின் கீழ் மனு செய்து முறையாக அனுமதி பெறாது பல களப்பணியாளரை வேலைநீக்கம் செய்துள்ள குற்றம்.
* களப்பணியில் கையூட்டு வாங்கும் போக்கை ஊக்குவித்து

அதன்மூலம் அவர்களது பொருளாதாரத் தேவைகள் நிறைவேறும் சூழ்நிலையை உருவாக்கி அரசு அவர்களுக்கென ஆண்டுதோறும் வழங்கும் ஊதிய உயர்வு தொகையை முழுமையாக கேட்க விடாமல் செய்து அதன் மூலம் ஆதாயம் ஈட்டும் குற்றம்.

*எட்டு மணி நேர வேலை நாள் என்ற உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கு விரோதமாக ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை வாங்கும் கொடுமை .

*நீதிமன்ற தீர்ப்புகளை அமுலாக்கி தீர்ப்புகளை பெற்ற களப் பணியாளர்களுக்கு தீர்ப்புகளின் கண்ட பணப் பலன்களையும் உரிமைகளையும் வழங்க மறுக்கும் அடாவடித்தனமான நீதிமன்ற அவமதிப்பு தன்மை வாய்ந்த சட்ட விரோதப் போக்கு.

*செய்யாத பல மக்கள் நல நடவடிக்கைகளை செய்ததாகவும் எடுக்காத பல நடவடிக்கைகளை எடுத்ததாகவும் காட்டி அரசிடம் இருந்து பணம் பெற்று அதன் மூலம் முறைகேடாக சம்பாதிக்கும் போக்கு.

பாலியல் குற்றங்கள் இழைத்தனர் என்ற அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட சிலரை மாவட்ட மண்டல அதிகாரிகளாக தொடர்ச்சியாக இந்நாள் வரை வைத்திருக்கும் சட்ட மற்றும் நியாய விரோத போக்கு.

*பெண் களப்பணியாளர்களை அச்சுறுத்தலுக்கும் துன்புறுத்தலுக்கும் அடிக்கடி ஆளாக்கும் போக்கு.

*சட்டவிரோதமாக சம்பளத்தை பிடிக்கும் அந்த அடிப்படையில் சம்பளப் பட்டுவாடா சட்டத்தின்படி இழைக்கும் குற்றம்.
*சேவையை நிர்வகிப்பதற்கு பதிலாக நடைமுறையில் சீர்குலைக்கும் வேலியே பயிரை மேயும் கொடுமைகளை இழைத்தல்.

*வேலையை விட்டு துரத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பலரை தொலை தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்து வேலைக்கு வர தயாராக இருந்தும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேலைக்கு வர முடியாதவர்களாக இருப்பவர்களை வேலையை விட்டு ஓடிப் போனவர்கள் என்று பதிவு செய்து அதேசமயத்தில் அவர்களுக்கும் சேர்ந்து ஊதியம் பெற்று அதை கையால் செய்யும் போக்கு.

**சேவை பாதுகாப்பு கருதி செயல்பட்ட தண்டிக்கப்பட்ட நிரபராதிகள்**

மேலே விவரித்து உள்ளவை ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் செய்துள்ள பல குற்றங்களில் ஒரு சில குற்றங்கள் சார்ந்த பட்டியலாகும். இத்தகைய குற்றங்கள் இழைத்தவர்கள் அந்த குற்றங்களுக்கு உரிய தண்டனைகள் பெற வேண்டியவர்களாவர். ஆனால் அவர்கள் தண்டனைகள் பெறாதது மட்டுமல்ல பல நிரபராதிகளை தண்டிக்கும் கொடுமையையும் இழைத்துக் கொண்டுள்ளனர். குதிரை கீழே தள்ளியது மட்டுமின்றி குழியும் பறித்த கதையாக செய்து கொண்டு உள்ளனர். மேலே கூறிய குற்றப் பட்டியல் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்திற்கு எதிராக நீண்டு கொண்டு போகும் சூழ்நிலையில் அவர்களால் தண்டிக்கப்பட்ட நிரபராதிகளை உள்ளடக்கிய 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் சேவையை பாதுகாப்பதற்காக எடுத்த பின்வரும் ஆக்கபூர்வ நடவடிக்கைகள்:

*108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே களப் பணியாளர்களின் பிரச்சனைகளை முன் எடுத்ததை காட்டிலும் சேவைப் பாதுகாப்பு நடவடிக்கைகளையே அதிகம் முன்னெடுத்தது. சரியான பராமரிப்பு இன்றி ஆங்காங்கே நின்று போகும் வாகனங்கள் அதனால் பயனாளிகளுக்கு நேரும் இடர்பாடுகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி மனுக்கள் சமர்ப்பிக்கும் நடவடிக்கையையும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் இயக்க ரீதியான பணிகளையும் கையில் எடுத்த ஆக்கபூர்வ செயல்.
*களப்பணியாளர்களிடம் நாம் வலியுறுத்த வேண்டியது நமது உரிமை மட்டுமல்ல பொது மக்களைப் பொறுத்த வரையில் நமக்கு இருக்கக்கூடிய கடமையையும் ஆகும் என்ற அடிப்படையில் மக்கள் ஆதரவு மனநிலையை களப்பணியாளர்கள் மத்தியில் வளர்த்து சேவை மேம்பாட்டிற்கு உதவியது.

*கையூட்டு வாங்கும் பழக்கத்தை முளையிலேயே கிள்ளி எறியும் நோக்கத்துடன் கையூட்டு வாங்கி அதற்காக குற்றச்சாட்டு குறிப்பாணைகள் எதனையும் சில களப்பணியாளர்கள் பெற்றார்கள் என்றால் அவர்களுக்கு சங்கத்திலிருந்து

பதில் எழுதி கொடுக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டை எடுத்தது.

*அந்த பழக்கத்திற்கு எதிரான மனநிலையை களப்பணியாளர்கள் இடம் அதிகரித்து வளர்க்கும் நோக்குடன் பயனாளிகளை மன ரீதியாகவோ பாதர் பண ரீதியாகவோ உளைச்சலுக்கு எந்த சூழ்நிலையிலும் ஆளாக்கமாட்டோம் என்ற உறுதி மொழியினை சங்கத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் எடுக்கும் நடைமுறையை கொண்டு வந்தது.

*மக்கள் ஆதரவு மனநிலையோடு செயல்படுவோம் என்பது பிற சங்கங்களை பொறுத்தவரையில் ஏட்டுச்சுரைக்காயாக இருந்த நிலையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் பொதுமக்கள் நல்லுறவு கமிட்டி என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் ஊழியர்களின் சேவையில் பொதுமக்கள் காணும் போதாமைகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்து அதனை சரி செய்ய முயலும் நடவடிக்கைகள்.

*எங்கெல்லாம் ஆம்புலன்ஸ் தேவைகள் உள்ளன என்பதை 108 ஊழியர் பொதுமக்கள் நல்லுறவு கமிட்டி கூட்டங்கள் நடத்தி தெரிந்துகொண்டு அந்த இடங்களுக்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கக்கோரி எத்தகைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தியது

*அந்த பின்னணியில் கடந்த ஆட்சியின்போது நூற்றுக்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்கள் அதுவரை 108 ஆம்புலன்ஸ் சேவை வசதி இல்லாத பல பகுதிகளுக்கு சங்கம் அதன் முயற்சியில் பெற்றுத்தந்தது.

*நிர்வாகம் ஊழியர் சம்பளத்தை ஆதாயமாக ஈட்டும் நோக்குடன் பல ஆம்புலன்ஸ் வாகனங்களை நிறுத்தி வைத்ததை எதிர்த்து நடவடிக்கைகள் எடுத்து அரசு தரப்பிலிருந்து திடீர் சோதனைகள் மேற்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கி அதன் மூலம் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுவதை தன்னால் முடிந்த அளவிற்கு தடுத்தது.

*விபத்து போன்றவற்றில் சிக்குண்டு இருப்பவர்களின் பொருள்களை அவர்களின் உறவினர்களிடம் எந்தப் பாதிப்பும் இன்றி ஒப்படைப்பதில் முனைப்பு காட்டியது. அதன் விளைவாக பொதுமக்களும் ஊடகங்களும் பாராட்டும் விதத்தில் பல இடங்களில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் சிரத்தை எடுத்து அப்பொருட்களை உறவினர்களிடம் ஒப்பந்தை பாராட்டி வெளிவந்த செய்திகள்.

*கால் சென்டர்களில் இருந்து எந்த இடங்களுக்கு வாகனங்களை செலுத்தச் சொல்கிறார்களோ அந்த இடங்களுக்கு எந்த வகை சாக்குப் போக்கும் முணுமுணுப்பும் இன்றி வாகனங்களை மக்கள் ஆதரவு மனநிலையோடு 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் அரவணைப்பில் இருக்கக்கூடிய களப்பணியாளர்கள் இயக்க வேண்டும் என்று வலியுறுத்தி அதை இப்போது வரை நடைமுறைப் படுத்திக் கொண்டு இருப்பது.

*பெரு நோய்த்தொற்று காலம் நமது கோரிக்கைகளை வலியுறுத்தும் காலம் அல்ல; அது தமிழக அரசின் சுகாதாரத்துறையோடு ஒத்துழைத்து பெரும் தொற்றுக்கு எதிரான போராட்டத்தை முனைப்புடன் எடுக்க வேண்டிய காலம் ஆகும் என்ற களப்பணியாளர்களுக்கு உரிய தருணத்தில் உத்வேகம் ஊட்டியது.

*தனியார் மருத்துவமனைகளுக்கு பயனாளிகளை கொண்டு சென்று அவர்கள் பணரீதியாக பெரிதும் பாதிக்கப்படும் சூழலுக்கு ஆளாக்கப்படும் கொடுமையை பெருமளவிற்கு தடுத்தது. அத்தகைய நடவடிக்கைகளில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் ஊழியர்கள் எக்காரணம் கொண்டும் ஈடுபடக் கூடாது என்று வலியுறுத்தி பயணிகளின் நலனை பாதுகாத்தது.

*ஒருபக்கம் லாப நோக்கம் இன்றி செயல்படும் சேவை என்று பகட்டாக அறிவித்துக் கொண்டு மறுபக்கம் போதிய எண்ணிக்கையில் ஆட்களை நியமிக்க வேண்டும், தேவை இருக்கும் போதே ஆதாயம் ஈட்ட வேண்டும் என்ற நோக்குடன் காரணங்களே இல்லாமலும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்தாலும் அற்ப காரணங்களுக்காகவும் ஊழியர்களை பணி நீக்கம் செய்து சேவை பாதிப்பை ஏற்படுத்தும் நிர்வாகத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியது; அந்தப் போக்கிற்கு எதிராக வீறுகொண்ட போராட்டங்களும் நடவடிக்கைகளும் எடுத்தது.

*இந்தியாவிலேயே 108

ஆம்புலன்ஸ் சேவை தமிழகத்தில் தான் மிக நல்ல முறையில் நடைபெறுகிறது என்ற பெயரை எடுக்கவும் அதனைத் தொடர்ந்து பராமரிக்கவும் இடைவிடாமல் பாடுபடுமாறு ஊழியர்களை வலியுறுத்தியது.

*பிற மாநிலங்கள் அனைத்திலும் ஆம்புலன்ஸ் சேவை பெயரளவிலான சேவையாக ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தால் நடத்தப்படடு வருகையில் தமிழகத்தில் மட்டும் அது மிகவும் பயனுள்ள சேவையாக நீடிப்பதற்கு முழுமுதற் காரணமாக விளங்கிக் கொண்டிருப்பது.

*அரசு தனியார் கூட்டின் அடிப்படையில் தற்போது நடத்தப்பட்டு கொண்டிருக்கும் இந்த சேவையை முழுக்க முழுக்க தனியார் மயமான சேவையாக ஆக்கி அதை முழுக்க முழுக்க லாப நோக்குடன் நடத்தும் எண்ணத்தோடு தனியார் ஒப்பந்த அடிப்படையில் நடத்தப்படுவதற்கு சம்மதம் தர வேண்டும் என்று அரசை வலியுறுத்தி ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் பல அதீத நடவடிக்கைகளை எடுத்த நிலையில் அதற்கு எதிராக களப்பணியாளர்கள் திரட்டி பயனாளிகளிடம் இதனால் ஏற்படும் அபாயத்தை விளக்கிக் கூறி அத்தகைய நடவடிக்கைகள் மூலம் அந்த நாசகார செயலை நடைபெற விடாமல் தடுத்தது.

இந்த அடிப்படைகளில் சேவை பாதுகாப்பிற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் முன்னணி ஊழியர்களும் முதன்மை பொறுப்பாளர்களும் தண்டனைக்குத் தப்பிய குற்றவாளியாக உள்ள ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தால் தொடர்ச்சியாக பணிநீக்கம் செய்யப்பட்டு கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய பணிநீக்க நடவடிக்கைகள் சுயநல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் படுகின்றன. பொதுவாக அரசுகள் இத்தகைய சேவைகளை அறிமுகம் செய்ததற்கு பின்பு அதன் மூலமாக அரசுகளுக்கு கிட்டிய நற் பெயரினை வாக்குகளாக மாற்றி ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து அதற்குப் பின்பு அந்த சேவைகள் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்று விட்டு விடுவதே வழக்கமாக இருந்து வருகிறது. பெரும்பாலான அரசுகள் நிதி ஒதுக்கீடு தேவைப்படும் எந்த வேலைகளையும் அருவருப்புடனும் முகத்தை சுளித்துக் கொண்டும் அணுகுவதையே வாடிக்கையாக கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்தின் வருவாய்களைக் கொண்டு ஆற்றப்படும் பணிகள் அனைத்தையும் அதிகாரிகளும் ஆட்சியிலுள்ள கட்சியைச் சேர்ந்தவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கும் அவை தங்களுக்குச் சம்பாத்தியத்தைத் தருமா என்றே பார்த்துக் கொண்டு இருக்கக் கூடியவர்களாக பொதுவாக உள்ளனர். அந்த நிலையில் இது போன்ற உன்னத சேவையில் மூலமாக எத்தனையோ ஆயிரம் உயிர்கள் இது அறிமுகம் செய்யப்பட்டதற்குப் பின்பு காப்பாற்றப்பட்டு இருக்கின்றனர் என்பதை அடிப்படையாக வைத்து இந்த சேவை மென்மேலும் விரிவாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் செயல்பட்டு கொண்டிருக்கக்கூடிய வேளையில் ,அதற்கு மாறான எண்ணப் போக்குகளை தங்களது மனங்களில் சுமந்து, அதாவது சேவை எக்கேகூ கெட்டுப் போனாலும் பரவாயில்லை; தங்களது கருவூலமும் சட்டைப்பைகளும் முறைகேடாக கிட்டும் பணங்களால் நிரம்பினால் போதும் என்ற விதத்தில் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தினர் ஆட்சியாளர்களை அணுகிக்கொண்டு இருக்கின்றனர்.

**பயனாளிகளுக்கு நேரவிருக்கும் பாதிப்புகள்**

இந்த நிலையில் 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பொருளாளர் ஆகிய தலைமை பொறுப்பாளர்களையும் முன்னணி ஊழியர்களையும் சட்டவிரோதமாக முறையான விசாரணைகள் எதுவும் இல்லாமல் மேலே விவரித்த விதங்களில் பழிவாங்கும் நோக்குடன் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் வேலை நீக்கம் செய்துள்ளது. இவ்வாறு அது வேலை நீக்கம் செய்துள்ளதன் நோக்கம் இந்த சேவையை பிற மாநிலங்களில் அது நடத்துவதைப் போல் பெயரளவிற்கான ஒன்றாக நடத்தி அதனுடைய பயன்பாட்டினை கணிசமாக குறைத்து ஏறக்குறைய ஒன்றும் இல்லாததாக ஆக்குவதற்கான ஒரு திட்டமே ஆகும். இந்த சேவை இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு ஆட்படுத்தப்பட்டால் அதன் விளைவாக பயனாளிகளுக்கு என்ன நேரும் என்பதைத் தமிழக மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த சேவை இப்போதிருக்கும் விதத்தில்

நடைமுறையில் இருப்பதன் காரணமாக தான் லாப நோக்குடன் முழுக்க முழுக்க நடத்தப்படும் தனியார் மருத்துவமனைகளில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் பெருமளவிற்கு பொதுமக்களால் அணுகப் படாமல் உள்ளன.இல்லாவிடில் விற்காததை எல்லாம் விற்றே தனியார் ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையில் தான் தமிழக மக்கள் இருந்திருப்பர்.

108 ஆம்புலன்ஸ் சேவையின் போட்டி இருப்பதால் மிக அதிகமான ஆம்புலன்ஸ் கட்டணங்கள் வசூலிக்க முடியாதவையாக தனியார் மருத்துவமனைகளில் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஆம்புலன்ஸ் வாகனங்கள் உள்ளன. இந்த நிலையில் இந்த சேவை பாதிப்பிற்கு ஆளானால் தனியார் மருத்துவமனைகளில் ஆம்புலன்ஸ் வாகனங்களை வேறு வழியின்றி பயனாளிகள் அணுக வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படும். அந்த நிலையில் அவர்கள் நாம் ஏற்கனவே கூறியது போல் விற்காததை எல்லாம் விற்று மருத்துவமனை சேவைகளையும் ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கான செலவுகளையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவர். திட்டவட்டமான அடிப்படைகளில் நடைபெறும் இந்த சேவையினால் துரிதமான உடனடி பலன்கள் பொது மக்களுக்கும் பயனாளிகளுக்கும் பெருமளவிற்கு இப்போது வரை கிட்டுகின்றன. நிர்வாகத்தின் இந்த ஆதாயம் கருதி செயல்படும் போக்கு தங்குதடையின்றி அரசால் அனுமதிக்கப்படும் சூழ்நிலை உருவானால் மிகப்பெரிய அளவில் பாதிப்புக்கு ஆளாகும் சூழல் உருவாகிவிடும். அதனால் இதுவரை பயனாளிகள் பெற்றுவந்த பலன்கள் அனைத்தும் இல்லாமற் போய்விடும்

**மெத்தனப் போக்கு மொத்தமாக உலை வைத்துவிடும்**

பொது மக்களைப் பொறுத்த வரையில் உடல்நலக் குறைவு என்பது எப்போதாவது ஏற்படக்கூடிய ஒன்று தானே அது நமக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற அடிப்படையில் வழக்கமாக யோசிக்கும் விதத்தில் யோசித்து இந்த சேவையினுடைய நன்மைகளை கணக்கில் கொண்டு இதை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தர முன்வரும் கடமையை செய்ய தவறினால் அதன் விளைவாக பின்னர் அவர்களே பாதிப்பிற்கு ஆளாக வேண்டி நேரிடும். உடல்நலக் குறைவு என்பது யாரையும் கேட்டுக்கொண்டு வருவதல்ல. அது பல சூழ்நிலைகளில் அதாகவே ஏற்படக் கூடிய ஒன்றாகும். அந்த சூழ்நிலையில் தேவைகள் ஏற்படும் போது அவற்றை பயன்படுத்த முடியாத நிலை, இந்த சேவையின் பாதிப்புகளை இப்போது கண்டு கொள்ளாமல் விட்டு விட்டால் நிச்சயமாக பின்னர் தேவைப்படும் தருணங்களில் ஏற்படும். அந்த அடிப்படையில் உங்களுக்கான சேவையை பாதுகாப்பதற்காக உறுதிபூண்டு நாங்கள் செயல்பட்டு கொண்டுள்ள வேளையில் எங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் பொதுமக்களாகிய நீங்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகத்தின் சேவை விரோத மனப்பான்மைக்கு எதிரான பொதுக் கருத்தையும் சேவை பாதுகாப்பிற்காக பாடுபடும் கூடிய 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் முன்னணி ஊழியர்களையும் உறுப்பினர்களையும் பொய் குற்றச்சாட்டுக்கள் காட்டியும் பழிவாங்கும் நோக்குடன் முறைகேடான விசாரணைகள் மூலமாகவும் வேலை நீக்கம் செய்யும் நடவடிக்கைக்கு எதிராகவும் நிலைபாடு எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை வற்புறுத்த வேண்டும். அதே சமயத்தில் இந்த 108 ஆம்புலன்ஸ் சேவையை தமிழகத்தில் நடத்தும் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாகம் நாம் மேலே விவரித்துள்ள அடிப்படைகளில் எத்தகைய முறைகேடுகளை எல்லாம் செய்துள்ளது என்பதை கண்டறிவதற்கு நடுநிலைத் தன்மை வாய்ந்த நீதிபதிகள் தலைமையிலான குழு ஒன்றினை நியமனம் செய்து, அதனை முழு அளவில் இந்த சேவையில் நடந்துள்ள பண ரீதியான முறைகேடுகள் லாப நோக்கம் இல்லாமல் நடத்தப்படும் நிறுவனம் என்று வெளிப்பூச்சுக்கு அறிவித்துக்கொண்டு முழுக்க முழுக்க லாப நோக்கத்துடன் இதை நடத்தும் நிர்வாகத்தின் போக்கு ஆகியவற்றைக் கண்டறிந்து அத்தகைய நம்பிக்கை துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு சேவையின் சீர்குலைவிற்கு வழிவகுக்கும் ஜி.வி.கே.இ.எம்.ஆர்.ஐ நிர்வாக அதிகாரிகளின் மீது உரிய நடவடிக்கை எடுத்து இந்த சேவை அதன் உன்னத உயரத்தில் தொடர்ந்து நடைபெற உங்களால் இயன்ற அனைத்து வகைகளிலும் உதவ வேண்டும்.

■

## 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கம் சேவையைப் பாதுகாக்க மேற்கொண்ட போராட்டங்களின் புகைப்படத் தொகுப்பு










Matru Karuthu Bi-Monthly Registered Under Registrar of Newspaper for India. Registration Number: TNTAM/2009/30862

# இயக்கவியல் தத்துவத்தைப் போற்றி



**(இந்தக் கவிதை ஜெர்மன் தேசத்து உழைக்கும் வர்க்க கவிஞர் பெர்ட்டோல்டு பிரக்ட் அவர்கள் 1951 ஆம் ஆண்டு எழுதியது)**

( தமிழாக்கம்: தோழர் அ. ஆனந்தன், தென்னிந்தியப் பொதுச் செயலாளர், CWP )

**இப்போது அதர்மம் கம்பீரத்துடன்
கோலோச்சுகிறது
ஒடுக்குபவர்கள் ஜம்பமாக கொக்கரிக்கின்றனர்
பத்தாயிரம் ஆண்டுகள் எங்களை ஒன்றும் செய்ய
முடியாது என்று**

**அடக்கும் சக்தி உரத்து உரைக்கிறது
இனிமேல் இதுதான் நியதி இதுதான் நியதி என்று
ஆள்பவர்களின் ஆணவக் குரலை தவிர
வேறு எந்தக் குரலையும் கேட்க முடியவில்லை
விற்பனை தளங்களில் சுரண்டல் கட்டியம்
கூறுகிறது
இது வெறும் தொடக்கமே
இன்னும் இருக்கிறது உங்களுக்கு என்று**

**ஆனால் ஒடுக்குமுறைக்கு ஆளானவர்களில்
பலர் புலம்புகின்றனர்
நாம் விரும்புவது எதுவும்
எப்போதும் நடக்கப் போவதில்லை என்று**

**எவரது இதயத்தில் எல்லாம் துடிப்பு இருக்கிறதோ
அவர்களில் எவரும்
ஒருபோதும் சொல்லக் கூடாது
இது நடக்காது என்று
நிச்சயமாக
நடக்காது என்பது நிச்சயமானதில்லை
இப்போது இருப்பது
எப்போதும் நீடிக்கப் போவதில்லை**

**ஏனெனில்
ஆள்பவர்கள்
ஏற்கனவே பேச வேண்டியதை எல்லாம்
பேசி விட்டார்கள்
அவர்களது தருணம் முடிந்து விட்டது
இது ஆளப்படுபவர்களின் தருணம்
இத்தருணத்தில்
யாரால் சொல்ல முடியும்
இது ஒருபோதும் நடக்காது என்று**

**ஒடுக்குமுறை நீடிக்கிறது என்றால்
அதற்கு காரணமானவர்கள் யார்
நாம் தான்
அடிமை கொட்டடியை நொறுக்க வல்லவர்களாக
நம்மைத் தவிர
வேறு யார் இருக்கப் போகின்றனர்
யாரெல்லாம் அடித்துக் கீழே தள்ளப்பட்டார்களோ
அவர்கள் தான்
தங்கள் கால்களை ஊன்றி நிமிர்ந்தெழ வேண்டும்
யாரெல்லாம் இழந்தார்களோ
அவர்கள் தான் போராட வேண்டும்
யாரால் இதனைத் தடுத்து நிறுத்த முடியும்
தங்களது நிலை இதுதான் என்பதை
தெரிந்து கொண்டவர்களைத் தவிர**

**இன்று
துவம்சம் செய்யப்பட்டவர்களே
நாளைய வெற்றியாளர்கள்
முடியாது என்பது
ஏற்கனவே முடிந்து போய்விட்ட ஒன்று
ஆம் அது இப்போது
இல்லாததாகிவிட்ட ஒன்று.**

**பெர்ட்டோல்டு பிரக்ட்**

Published By: T. Sivakumar and Owned By T. Sivakumar and Published from 3/112, Thilagar Street, Indian bank colony, Naryanapuram, Madurai - 625014. Mob: 9443080634
and Printed By G. Manikandan at M/s Prakash Offset Printers, 22-A, Chokkanathan Street, South Masi Street, Madurai - 625001. Editor: T. Sivakumar